மாலைக் கீர்த்தனை போதினி

மா. கைலாச அய்யர்

T.D.R.C. 1862.

R.B.No. 72-4-189

L396:4241:6

M98

114830

1898

கடவுள் துணை.

# ரோக சிகிச்சா போதினி.

இஃது
பூராதி வைத்திய போதினிமுதலிய
பல வைத்திய நூல்களின்
கிரந்த கர்த்தாவான
ஹக்கீம் - பா - முகம்மது அப்துல்லா
அவர்கள் இயற்றித் தமது
சென்னை
வைத்திய கலாநிதி
அச்சாலையில் பதிப்பித்தனர்.

FIRST EDITION.

ஹிஜ்ரி ௧௩௧௬-ம்-வருஷம் ஜமாதியுல்ஆகிர் மீ
தமிழ் விளம்பி வருஷம் ஐப்பசி மீ
1898வருஷம் நவம்பர் மீ

Registered Copy-right and Right of Translation Reserved.

—*—

இதன் விலை அணா 8. வி-பி அணா 11.

L396:4241:6
M98

114830

1862
615

# விளம்பரம்.

இந்த யூனானிக் சிகிச்சா போதினியும் இதனடியிற் கண்ட புத்தகங்களும் வேண்டியவர்கள் சென்னை மாபூஸ்கான் தேவடி, அப்பு மேஸ்திரி வீதி 12-வது, நெம்பர் கிரகத்தில் இருக்கும், ஹக்கீம்-பா-முகம்மது அப்துல்லாசாயபு, அவர்களிடத்தில் கை விலைக்கும், வாலியூ பேயபில் போஸ்ட் மூலமாகவும், பெற்றுக் கொள்ளலாம்.

இக்கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியிற் கண்டிருக்கிற என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும்: அவ்விதம் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையா யிருக்குமானது பற்றி, அப்படிப்பட்ட கிரந்தங்களைக் கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்குமவர்களுக்கும் தக்க வெகுமதி கொடுக்கப்படும்.

| | கைவிலை | வி. பி. |
|---|---|---|
| | ரூ. அ.ப. | ரூ. அ.ப. |
| யூனானி வைத்திய சாஸ்திரிய விர்த்திபோதினி முதற்பாகம் | 1 5 0 | 1 9 0 |
| ஷை 2-ம்-பாகம்-க-க்கு | 2 0 [illegible] | 2 5 0 |
| ஷை திறவுகோல்-க-க்கு | 0 10 0 | 0 13 0 |
| பிரமேக நிவாரண போதினி | 0 12 0 | 0 15 0 |
| சிராவக நிவாரண போதினி | 0 13 0 | 1 0 0 |
| ஆயுர்வேத சிரோமணி யென்னும் வைத்தியசிந்தாமணி. | 0 14 0 | 1 2 0 |
| சரபேந்திர மேக நிவாரண போதினி | 1 0 0 | 1 4 0 |
| அரன்பே சரித்திரம் | 0 8 0 | 0 11 0 |
| ஷம்ஷால் இஸ்லாம் | 0 8 0 | 0 11 0 |

HAKEEM. B. MUHAMMAD ABDULLA.

## விசேஷ விளம்பரம்.

—*—

இதனால் சகலருக்கும் தெரியப் படுத்தலென்னவெனில் "பிளேக் சிகிச்சா போதினி" என்னும் இக்கிரந்தம் ௧௮௬௭ (௨௫-வது) ஆக்டின் (௨௦-வது) பிரிவில் (௧௮-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராஸில் காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகையால் இந்த பிளேக் சிகிச்சா போதினியென்னும் கிரந்தத்தை இவ்வாறே அச்சிட்டாலும், இதில் கண்டிருக்கின்ற பாகத்தையாவது, இந்நூலாசிரியர் உத்தரவன்றி, அச்சிட்டாலும் அப்படி அச்சிட்டவர்களிடம் மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிற[illegible] கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகு[illegible]நஷ்ட மனைத்தும் வசூல் செய்யப்படும்.

☞ ஹக்கீம்-பா-முகம்மது அப்துல்லா.

HAKEEM S. MUHAMMAD ABDULLA SAIB.
MADRAS



## நூன்முகம்.

எனது ஜனனதேசத்து வைத்திய சகோதரர்களே! யான் இச்சிறிய நூலினை யியற்றும்படி பல்வாற்றால் என்னுள்ளத்தைத் தூண்டி யெழுப்பிய காரணம் இன்னதென இதனடியில் யான் கூறும் விஷயங்களான் மிகத்தெளிவாயும் எளிதாயும் விளங்கும்.

இப்போது பெங்களூர், ஹூப்லி, தார்வார் முதலிய இந்தியாவின் பலபாகங்களில் பிளேக் என்னும் கொள்ளைநோயானது பரவி நிற்கிறது; அதனால் அனேகர் சேதப்படுகின்றனர்; அக்கொடிய வியாதியானது ஒருவிடத்திலிருந்து மறுவிடத்திற்குத் தொத்தாமலும், அது தலைகாட்டின விடத்தில் பரவாமலும், நமது காருண்ய கவர்னமெண்டார் முன்னெச்சரிக்கையுடன் பலவித முயற்சிசெய்து வருகிறார்களென்பது ஆண்பெண் முதலிய எல்லோருக்கும் கரதலாமலகம்போல் தெரிந்தவிஷயமே. மேலும் இக் கொள்ளை நோயானது நமது ராஜதானியின் எல்லைகளில் எட்டியெட்டிப்பார்த்தும், ஏமாறும் சமயத்தை யெதிர்பார்த்திருப்பதும் தெரிந்தகாரியமே. இன்னும், இக் கொள்ளை நோயானது அனேகமாயிரம் ஜனங்களைத் தனக்கிரையாக்கிக் கொள்வதுமன்றி, வியாபாரம் முதலிய தொழில்களிலும் பலவித நஷ்டத்தை யுண்டுபண்ணி வருகிறது. இந்த வியாதியின் திகிலானது ஆண், பெண், பாலர் முதலிய ஒவ்வொருவருடைய மனதிலுங் குடிகொண்டு நீங்காமல் நிலைத்து நிற்கிறது. ஆகையால் இந்த நோ

யுண்டாகும் காரணம், அதைத்தடுக்கும் மார்க்கம், அதன் சிகிச்சை முதலிய எல்லாவிபரங்களும் சுருக்கமாயடங்கிய ஒரு கிரந்தத்தை நமது தேசத்தில் முக்கியமாய்த் தமிழ்ப்பழக்க வழக்கமுள்ள நமது தமிழ் நாட்டாருக்கு உபயோகப் படும்படி யெழுத வேண்டுமென்பதே அடியேன் கருத்தாம்.

இந்தக் கொள்ளை வியாதியானது ஒவ்வொரு நூற்றாண்டுகளிலு மாத்திரம் நூதனமாய் உண்டாகி நடமாடுகிறதல்ல. சற்றேறக் குறைய ஒவ்வொரு வருஷத்திலும் உலகத்தின் ஏதேனும் ஒருபாகத்தில் இருந்து கொண்டுவருகிற வியாதியே. இது ஆயிரக் கணக்கான ஜனங்களைக் கொண்டுபோயிருக்கின்றது. அத்தொகையானது இச்சிறிய கிரந்தத்தில் பிளேக் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற மரணத்தொகையைப் பார்க்கிலும் இருமடங்கு, மும்மடங்கு அதிகமாகவே யிருக்கும்.

இந்த அநியாயக் கொள்ளைநோயானது எத்தனையோ சிறுவர்களைத் தாயற்றவர்களாகவும், எத்தனையோ பாலர்களைத் தந்தையற்றவர்களாகவும், எத்தனையோ மங்கிலியஸ்திரீகளை அமங்கிலியர்களாகவும், செய்திருக்கிறது. இக்கொடிய துஷ்டவியாதியானது தான் நுழைந்த குடும்பத்தையோ, நகரத்தையோ, நாட்டையோ, அடியோடே ஒழித்துவிடுவது இதன் [illegible] சுபாவம். இது எந்த தேசத்தில் அடிவைக்கிறதோ அந்தத்தேசத்தை அடியோடே நாசமாக்கியிருக்கிறதாக, முன்னுண்டாயிருந்த கொள்ளைநோயின் சரித்திராதாரத்தினால் தெரியவந்திருக்கிறது. ஆகையினாலே தான், இத்துஷ்ட



நோயானது ஒருவிடத்திலிருந்து மறுவிடத்திற்குப் பரவாமலும், ஒருவேளை பரவினாலும் அது பரவாமல் மட்டுப் படுத்தவுமே, வாசஸ்தான சுத்திக்கிரமம், நகரசுத்திக்கிரமம், மஹாமாரிப்பால் குத்தல், ஸெக்ரிகேஷன், குவாரன்டைன், விஷநிவாரணம் முதலியவிதிகளை நமது காருண்ய கவர்ன்மென்டார் திட்டமாக ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால் நம்மவர்களுள் அநேகர் இக்கொடிய வியாதியின் ஸ்வபாவம், இது உண்டாகும் காரணம், தொத்தும் விதம், இதைத் தடுக்கும்விதம், இதை மட்டுப்படுத்தும் விதம் முதலியவைகளை அறியாமையால் மேற்கண்டபடி நமது காருண்ய கவர்ன்மென்டார் செய்திருக்கும் உபாயங்களுக்குச் சில மூட ஆக்ஷேபனை செய்கின்றார்கள். விஷநிவாரணம் செய்வதைப்பற்றியும், மஹாமாரிப்பால் குத்துவதைப்பற்றியும், பற்பலவித புரளிக் கதைகள் நடமாடுகின்றன. இதை யெல்லோரும் நாம் கவனிக்குங்கால், இக்கொள்ளை நோயின் ஸ்வபாவம், சரித்திரம், இது உண்டாகும் விதம், இதைத் தடுக்கும் விதம் ஆகியவைகள் தெரியாமையே இப்படி யுண்டாவதற்குப் பெருங்காரணமும் மூலமுமாயிருக்கின்றது.

ஆகையால் நாம் இக்கொடிய வியாதியின் பூர்வோத்திரம் முதலியவைகளை அடியோடு [illegible] தெரிந்து கொண்டால், வாசஸ்தான சுத்தம், நகரசுத்தம், மஹாமாரிப்பால் குத்திக்கொள்ளல் முதலியவைகளை அநுஷ்டிக்க வருவாம் என்பதிற் சந்தேகமில்லை. ஆயினும் இந்த வியாதியைத்தடுக்க கவர்ன்மென்டார் உதவியும் அவசியம் வேண்டிய

தே. ஏனெனில் நாம் மாத்திரம் இந்த விதிகளின்படி
டிக்தாலும், இத்துஷ்ட வியாதியானது தொத்து
அல்லது பரவு வேறெத்தனையோ மூலங்களுள்ளன.
அவையெல்லாம்கவரன்மெண்டாரே செய்யசாத்திய
மானவைகளே தவிர, நம்மால் நடத்தக்கூடியவைக
ளல்ல. ஆனால் நமது காருண்ய கவர்ன்மெண்டார்க
ளோ, நம்மைக் காப்பாற்ற நமக்கு முன்னே சர்வ
பிரயத்தனங்களோடு சர்வசித்தமாயிருக்கின்றார்கள்.
இவர்கள் இப்படிச் செய்வது நம்மீதுள்ள அபிமான
மும் ஜீவ காருண்ணியமுமே.

கவரன்மெண்டார் முயற்சியினாலேயே இந்தி
யாவின் பலபாகங்கள் இந்த வியாதியின் பிடியினி
ன்றும் காக்கப்பட்டு வருகின்றன. கல்கத்தாவில்
இந்த வியாதியானது எவ்விதமோ நுழைந்து நட
மாட ஆரம்பித்தபோதிலும் அதுதலையெடுக்கவிடா
மல் நசுக்கப்பட்டதும் இவர்கள்பெருமுயற்சியே.

இன்னும் முற்காலத்தில் மத்திய ஐரோப்பாவி
ல் இந்தப் பிளேகினால் நேரிட்ட மரணத்தொகை
யையும் இப்போது இந்தியாவில் இக்கொள்ளைநோ
யினால் நேரிட்டிருக்கிற மரணத்தொகையையும்
ஒத்துப்பார்த்தால், பின்னது முன்னதைவிட அதிக
சொற்பமாய்க் காணப்படும். பிளாக்டெத் (Black
death) கருமரணம் என்னும் நாமகரணஞ் சூட்டப்
பட்ட இக்கொள்ளைநோயானது கிரிஸ்தவ உலகத்
தின் நாலிலொரு பாகத்தைக் கணக் காக்கினது.
இதை நீக்கி, மற்ற நகரங்களில் இக்கொள்ளை நோயி
னால் நேரிட்டிருக்கிற மரணத்தொகையின் கணக்



னது திட்டமாய் நம்பத்தக்க ஆதாரத்தோடிருப்
தால்அதையும் ஒத்துப்பார்ப்போம்.

1570-ஆம் ஆண்டில் மாஸ்கோ நகரத்தில் இக்
கொள்ளைநோயினால்-2-லக்ஷம் ஜனங்கள் மாண்டார்
கள். 1656-ஆம் வருஷத்தில், நேப்ல்ஸ் நகரத்தில்-
-மாதத்திற்குள்ளாக -௩- லக்ஷம் ஜனங்கள் இக்
கொள்ளை நோய்க்கு [illegible]யானார்கள். -1704
ம் ஆண்டில் பிரஷ்யாவிலும்லித்வானியாவிலும்
(Lithuania) 283,000 ஜனங்கள் இக்கொள்ளைநோ
ய்க்கிரையானார்கள். 1710-ஆம் ஆண்டில் ஸ்டாக்
ஹோம் நகரத்தில்-௩௦-ஆயிரம் பேர்கள் இதனால்
இரையாடப் பட்டார்கள். 1720 - ஆம் ஆண்டில்
மார்ஸீல்ஸ் (Marsiellos) நகரத்தில்-௪௦-முதல்-௫௦-
ஆயிரம் ஜனங்கள் இக் கொள்ளைநோயினால் கொண்
போகப் பட்டார்கள். இவ்விடங்களி லெல்லாம்
இப்படியிருக்க, சற்றேறக்குறைய -௮- லக்ஷம்
ஜனத்தொகையுள்ள பம்பாய் பட்டணமானது முன்
சொல்லப்பட்ட எல்லா நகரங்களைப் பார்க்கிலும்
மிகப்பெரிது. அப்படிப் பெரிதாயிருந்தும் அதில்
சென்ற-2-வருஷங்களுக்குள் இந்தக் கொள்ளைநோ
யினால் நேரிட்ட மரணம் - 30 - ஆயிரத்திற்குள்ளே
தான்.

1665 - ஆண்டில் லண்டனிலுண்டான கொள்
ளைநோயினால் நேரிட்ட மரணத்தொகை - 68596 -
பேர்கள். இது சராசரி நூற்றிற்கு-14-கணக்கா
றது. இப்போது பம்பாயில் பிளேக் மும்முரமா
யிருந்த வருஷத்தில் சராசரி நூற்றிற்கு - ௩-தான்

கஷ்டமாகிறது. இதற்குப் பிரதானம் நமது காருண்ய கவர்ன்மென்டார்களின் முயற்சியே.

இதற்காகவே, நகரசுத்த ஏற்பாடு, விஷநிவாரணம், நியாயமான வீக்சிநேஷன், நியாயமான சோதனை, குவாரன்டைன் முதலிய ஏற்பாடுகளையெல்லாம் உண்டாக்கிநடத்திவருகிறார்கள். அவர்கள் இவ்வளவு முயற்சியெடுத்துக்கொள்ளாவிட்டால் இந்தக்கொள்ளைநோயானது இந்தியாமுழுவதும்பரவி எவ்வளவோ ஜனங்களை நாசமாக்கி யிருக்கும். பம்பாய் முதலிய விடங்களில் உண்டாகும் மரணத்தொகையானது அதிகப்பெரிதாக நமக்குத்தோற்றுவதற்குக் காரணமாவது-நமது காருண்யகவர்ன்மென்டார் தங்கள் ஆளுகையிலுள்ள ஒவ்வொரு நகரங்களிலும் நகரசுத்த (Sanitary) ஏற்பாடுகளை ஏற்படுத்தியிருப்பதால், முன்காலத்திலேதேனும் ஒருவித கொள்ளைநோயினால் அடிக்கடி சேதமாக நேரிடுவதுபோல, இந்தக் காலங்களில் அப்படிநேரிட ஏதுவில்லாததே முக்கியம். முற்காலத்தில் கொள்ளைநோயானது ஒருவிடத்திற்கண்டால் அதைவிட்டு கொஞ்சத்தில் அது ஒழிகிறதில்லை. மேலும்முற்காலங்களில் அவை அடிக்கடியுண்டாவது வழக்கம். இக்காலத்தில் மேற்கண்ட ஏற்பாடுகளினால் அந்தவியாதிகள் அடிக்கடிநேரிட ஏதுவில்லை. ஒருவேளை அவையுண்டானாலும் அதிக மும்முரமாயிருக்க இடங்கொடுக்கிறதில்லை. ஆகையால்மரணங்கள் அதிகம் நேரிடுகிறதுமில்லை. இவ்வித அநுபவமுடைய நமக்கு இப்போதுண்டான இந்தத்தொகையானது ஒருபாரிய தொகையாய்க் காணப்படுகின்றதேயொழிய வேறில்லை.



சாதாரண காலங்களிலேயே யிவ்வித முயற்சியையுடைய நமது கிருபைமிகுந்த கவர்ன்மென்டார் இத்துஷ்டநோயுண்டாயிருக்கிற இக்காலத்தில் எவ்வளவு கவலையும், எவ்வளவு முயற்சியும் எடுத்துக்கொள்வார்கள். அப்படி யவர்கள் எடுத்துக்கொள்வது நம்மெல்லோருக்கும் பிரமாண சாக்ஷியாய்த்தெரிந்த விஷயமாகவே யிருக்கிறது.

நம்மவர்களுள் சிலர் இம்மூர்க்க விஷநோயின் கொடூரத்தை யறியாமலே நமது கிருபையுள்ள கவர்ன்மென்டார் செய்திருக்கும் ஏற்பாடுகளை நாம் எப்படி யநுஷ்டிக்கிறது எனப் பயப்படுகிறார்கள். அந்த ஏற்பாடுகளுள் ஒன்றிரண்டு நமது தேசவழக்க பழக்கங்களுக்குச் சற்று நூதனமானவைகளாயினும், மற்றெல்லாவிதிகளையும் ஒருவித கஷ்டமுமின்றியெல்லோரும் அநுசரிக்கக் கூடினவைகளே. இந்த ஏற்பாடுகள் ஒவ்வொன்றும் மகாவல்லமை சாலிகளும், நெடுநாள் அநுபவ சாலிகளுமாகிய மந்திராலோசனைசபையார்களால் ஆழ அகலயோசித்துத் தீர்மானிக்கப் பட்டவைகளேயொழிய மற்றப்படியன்று. மன்னுயிரையும் தன்னுயிர்போலக்காப்பாற்றும் ஜீவகாருண்யத்திலமிகுந்த நமது கவர்ன்மென்டார்களுடன் நாம் மனப்பூர்வமாய் உதவியாயிருந்தால்தான் கடவுளினது கிருபையால் நமது நகரத்தில் அக்கொடூரநோயைத் தலைகாட்ட விடாமற்செய்யக்கூடும். தெய்வாதீனமாய் ஒருவேளை வந்தாலும் அது பரவாமல் வேரறுத்துவிடக்கூடும். இதற்கிப்போது கல்கத்தாவே போதுமான சாக்ஷியா யிருக்கிறது. இந்தக்காரியத்தில் நாம் மனப்பூர்வமாய் இதைத்

தடுத்து மட்டுப்படுத்த உதவிசெய்யாத வரையில், கவர்ன்மென்டார் எவ்வளவு முயற்சி செய்தாலும், அவ்வளவாய்ப் பூரணவெற்றியை முற்றும் அடையக் கூடாமை. ஆகையால் இந்தக் கொள்ளைநோயின் காரணம், இதன் பூர்வசரித்திரம், இதன் லக்ஷணம், இதைத் தடுக்கும்விதம் முதலிய எல்லா விபரங்களும் அடங்கிய ஒரு நூல் இக்காலத்தில் இருக்கவேண்டியது அவசியமென்பது நன்கு விளங்கும். அப்படியிருந்தால் எல்லோரும் அதைவாசித்து அதிலுள்ள விதி விலக்குகளை யறிந்து, அதின்படிநடந்து, நமது மாட்சிமைதங்கிய கவர்ன்மென்டார் சட்டத்திற்குங் கீழ்ப்படிந்து மனப்பூர்வமாய் உதவிசெய்ய ஏதுவாகும். அப்படிச் செய்யும் பக்ஷத்தில் நம்மூரில் இந்த வியாதியானது எட்டியடி வைக்காமலே சர்வதயாபரக் கடவுளின் பேரருளால் தடுக்கப்படுவது திண்ணம், திண்ணம்.

இதில் கண்டிருக்கிற யூநாநிமுறைகளெல்லாம் மகா பண்டிதர்களாகிய பூஅலிஸிநா, பக்ராத் முதலிய பண்டிதர்களினால் பலமுறைகளில் உபயோகித்துப் பலகால் அநுபவப்பட்டவைகள்.

இந்தக் கிரந்தத்திற்காக பல யூநாநிவைத்திய கிரந்தங்களும், சில இங்கிலீஷ் கிரந்தங்களும், சிலபத்திரிகைகளும் உதவியாக வேண்டியதா யிருந்தன. அப்படி யுதவியா யிருந்ததைப்பற்றி அவற்றை யாக்கியோர்களுக்கு நாம் இருதய பூர்வமாய் வந்தனம் செலுத்துகின்றோம். அவையாவன:—



ஸர்ஜான்மால்கம்கான் சரித்திரம், முவஜ்ஜம் சரித்திரம்; குஸ்ரவான் சரித்திரம்; மிர்ஜூஅல்ஹிஜன், மூன்லிமுக்லா—பூக், அக்ஸீரே ஆஜம், அத்தாஊன் (The Plague); தாயிபே தாஊன் (The Plague Cure); தி பிளேக்இன் இன்டியா (The Plague in India) தி பிளேக் ரிபோர்ட் (The Plague Report) தி பிளேக் ரெகுலேஷன் (The Plague Regulation) முதலிய கிரந்தங்கள், தி மகம்மடன் (The Muhammadan) தி அக்கிம் (The Hakim) முதலிய பத்திரிகைகள் ஆகியவைகளே.

இதுவரையில் இந்த பிளேக் நோயைப்பற்றி இவ்வளவு விபரமாகவும் சுருக்கமாகவும் இவ்விதக் கிரந்தம் தமிழில் வெளிப்பட்டிருப்பதாய்க் காணப்படவில்லை. ஆகையால் இந்த வகையில் இதுவே முதலாவதெனச் சொல்லக்கூடும். நம்மால் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு கிரந்தத்தையும் அங்கீகரித்து, நம்மைப் பலவிதத்திலும் ஊக்கப்படுத்திவரும் சுதேசாபிமானமுள்ள கனவான்[illegible]க்கும், நம நண்பர்களுக்கும், இந்தக் கிரந்[illegible]றாசமத்தில் வெளிப்படு[illegible]யமானது அதிக ஸந்தோஷத்தையும் அதிக திருப்தியையும் உண்டாக்குமென்பது நிச்சயம்.

இக்கிரந்தத்தை அதிதுரிதமாய் வெளிப்படுத்த வேண்டியிருந்தபடியினாலும், இதனை அச்சிடும்போது நேரிட்ட பல சில அசந்தர்ப்பங்களினாலும், மனிதசுபாவத்தவறுதலினாலும், ஏதேனும் பிழையிருக்கில் அதைப்பார்வையிடும் நண்பர்கள் அதிகிருபையுடன் மன்னித்து, அடியேனுக்குத் தெ-

ரியப் படுத்தினால் அதிக நன்றியசெலுத்துதலுடன் இதன் இரண்டாம் பதிப்பதில் அவை திருத்தப்படும். இன்னும் இதில் [illegible] சேஷமாய்ச் சேர்க்கப்பட வேண்டிய விஷய மு[illegible]ய பி[illegible]பாதங்களைத் (Suggestion) தெரியப்படுத்தினாலும் அவற்றையும் அதிக வந்தனத்துடன் அங்கீகரித்து அவையுக்தமானவைகளாகவும் உபயோகமுள்ளவைகளாகவும் காணப்படின் அவற்றையும் மறுபதிப்பில் சேர்த்தச்சிடப்படும்.

இங்கு இன்னும் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லி இதை முடிப்போம். இக்கொள்ளை நோய்க்கு முற்காலத்திலிருந்ததுபோல் இக்காலத்தில் பயப்பட நிமித்தமில்லை. ஏனெனில் தற்காலத்தில் இந்த வியாதியின் காரணம் முதலியவைகளைக் கண்டு பிடித்திருப்பதுபோல் முற்காலத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை. தற்காலத்தில் இதைத் தடுக்கச் செய்யும் ஏற்பாடுகளெல்லாம் முற்காலத்திற் செய்வது கூடா[illegible]த்தில் சாஸ்திரப்பயிர்ச்சி அபிவிர்த்தியடைந்திரு[illegible]தைப்போல, முற்காலத்தில் இவ்வளவு தேர்ச்சி உண்[illegible]ருக்க [illegible]வில்லை. ஆகையால் தற்காலத்து சாஸ்திர பண்டிதர்களின் தீர்மானமாவது—இக்கொள்ளை நோயைத் தலையெடுக்க விடாமல் தடுக்க உடனே முயற்சி செய்ய வேண்டியதே பிரதான மென்பதே. இது அபாயகரமானதாயினும் இந்த ரோகியை சாக்கிரதையுடன் போஷிப்பதும் சவுக்கிய வாசஸ்தானத்தில் வைப்பதும் இவன் தப்பித்துக்கொள்ள நம்பிக்கையையுண்டாக்கும். மேலும் இது உண்டாகிறவிதம் இதைத் தடுக்கும்



விதம் இப்போது நமக்குத் தெரிந்திருப்பதனால் புத்தி, யுக்தி, அநுபவம் ஆகியவைகளைக் கொண்டு அதை எதிர்த்து வெல்லலாம்.

சுத்தமானதும், தாராளமாய்க் காற்றுஉலாவும்படியானதுமான வாசஸ்தானங்கள், ஜனங்கள் வசிக்க விசாலமான நகரங்கள், ஆகியவைகள் இப்பிணிக்கு இடந்தரா.

ஜனநெருக்கமு[illegible], அசுத்தம் நிறைந்துள்ளதுமான வாசஸ்தானம், சுத்த ஆகாயக்குறைவு, வெளிச்சக்குறைவு, அசுத்த ஆகாரம் முதலியவைகள[illegible] விடமே இப்பிணிக்கு உறைவிடம்.

[illegible]கையால் இச்சிறு கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிற இக்கொள்ளை நோயின் காரணம், லக்ஷணம், சிகிச்சை முதலியவைகளைக் கவனித்து நடந்து, நியாய விரோதமான [illegible]ரியங்களை யொழித்து, கடவுளிடம் பயபக்தியுடன் நடந்து கொள்பவர்கள் இந்த வியாதியினின்றும் முற்றும் நீக்கப்பட்டு சுகமாய் நீடூழிவாழ்வார்களாக. ஆமீன்.

# பிளேக் சிகிச்சா போதினி

## அட்டவணை.

—※—

### அ.

பக்கம்.


அசாத்திய பிளேக் லக்ஷணம் ... ... 74
அசுத்த ஜலமும் கொள்ளை நோய்க்குக்காரணமா
கலாமென்பது ... ... 57
அசுத்தமுள்ளவர்களே பெரும்பாலும் கொள்ளை
நோய்க்குள்பட ஏதுவானவர்களென்பது 56
அருணக்கட்டி லக்ஷணம் ... 81


### ஆ.


ஆண்டேரி யென்னும் ஊரில் மஹா மாரிப்பால்
குத்தினதினாலுண்டான பிரயோசனம் 103
ஆகாயம் (காற்று) மனிதர்களுக்கு அவசியமான
தென்பது ... ... 52
ஆகாயம் விஷமிக்கும் விதம் ... 53-54
ஆகாயம் விஷமித்தலே கொள்ளை நோய்க்குப்
பிரதான மென்பது ... 53-54
ஆறும் நாற்றுண்டின் கொள்ளை நோய் [illegible]7


### இ.


இங்கிலீஷ் பொதுச் சிகிச்சை (பிளேகின்) ... 10[illegible]
இரத்திறுதி பிளேக் நிவாரணி ... ... 135
இலகு சீத குளுகலந்தி ... ... ... 141

இலகுபேதி முறைகள் ... ... ... 156
இனித்த ஊறல் கஷாயம் ... ... ... 157

உ.

உம்வாஸ் பிளேக் ... ... ... 20
உலகத்தில் பெரும்பான்மையும் பரவின
கொள்ளை நோய் ... ... ... 28

எ.

எலுமிச்சம்பழ ஷர்பத்து (பிளேகிற்கு) 147
எல்லாவிதத் தொற்று வியாதியும் முடிவில்
ஆகாய சம்பந்தமே யென்பது ... 54

ஐ.

ஐந்தாம் நூற்றாண்டின் கொள்ளைநோய்... 16

ஒ.

ஒன்பதாம் நூற்றாண்டின் கொள்ளை நோய் 27

க.

கசகசா சாதா ஷர்பத்து ... ... 149
கர்க்கியில் மஹாமாரிப்பால் குத்தினதிலுண்டான
பிரயோசனம் ... ... 102
கருமரணம் (Black death) ... ... 28
[illegible]ாரிப் பிரம்புத் தீநீர் ... ... 155
[illegible]ரிப் பிரயோகம். (பிளேகிற்கு) ... 136
ஷை ஷை ... (வேறு) 138

கா.

காக பிளேக் ... ... 26
காசினித்தீநீர் ... ... 155



காஞ்சனிக்கட்டி ... ... 81
காவுஜாபான் தீநீர் ... ... 155
காஹூ என்ணெய் ... ... 156

கு.

குமரிப் பிளேக் ... ... 23

கொ.

கொள்ளை நோய்க்கு அசுத்தமே பிரதானமென்
பது ... ... 55

கோ.

கோத்திரவக்கட்டி ... ... 81
கோஜாவகுப்பாரில் மஹாமாரிப்பால் குத்தினதி
லுண்டான பிரயோசனம் ... 104

ச.

சந்தனத்தீநீர் ... ... 154
சந்தனபவாசி ஷர்பத்து ... ... 146
சந்தன ஷர்பத்து ... ... 144
ஷை ஷை ... (வேறு 145
சந்தேக பிளேக் லக்ஷணம் ... ... 71

சா.

சாதாஷர்பத்து வகைகள் ... ... 152
சாத்திய பிளேக் லக்ஷணம் ... ... [illegible]
சாமளக்கட்டி ... ... 82

சி.

சில பக்ஷிஜாதிகள் தங்கள் வாசஸ்தானத்தை விட்
டோடிப்போதல் பிளேகிற்கு முன்னறி
[illegible] ... ... 59-62

சில ஜெந்துக்கள் அசாதாரணமாய் ஏககாலத்திற் சாவது பிளேகிற்கு முன்னறிகுறி யாகலா மென்பது ... ... 63

சீ.

சீத குளுகலசி ... ... 139
சீமை யிலந்தைப்பழ ஷர்பத்து ... 158

சு.

சுத்தமா யிருப்பவர்களுக்குங் கொள்ளைநோய் தொற்றும்விதம் ... ... 56-57
சுஜன பிலேக் ... ... 23

த.

தரித்திரர்கள் கொள்ளைநோய்க்குப் பெரும்பாலும் இலக்கானவர்களென்பது ... 64

தா.

தாஊனுல் அஷ்ராப் (Ashraf) ... 23
தாஊனுல் பகரியா ... ... 23
தாஊனுல் ஜரீப் ... ... 22
தாஊனெ ஸிர்ருப் ... ... 26
தாஊன் என்னும் வார்த்தையின் அருத்தம் ... 3
தாஊனென்னும் வார்த்தையின் காரண அருத்தம் 3
தாஊன் என்னும் வார்த்தையின் வைத்திய பரிபாஷை அருத்தம் ... ... 5
தாமரைப்பூ (சர்தா) ஷர்பத்து ... 152
தாமரைப்பூ தீநீர் ... ... 154
தாமோனில் மஹா மாரிப்பால் குத்தினதிரு அண்டான பிரயோஜனம் ... 102



தாமோன் சுற்றுப்பக்கங்களில் மஹாமாரிப்பால் குத்தினதிருவுண்டான பிரயோஜனம் 102
தார்வாடியில் மஹாமாரிப்பால் குத்தினதிரு அண்டான பிரயோஜனம் ... 104
தாழம்பூ தீநீர் ... ... 155
தாழம்பூ ஷர்பத்து (பிளேகிற்கு) ... 143
தாழை ஷர்பத்து (ஷை) ... ... 144

து.

துர்ப்பலப் பட்டவர்கள் கொள்ளைநோய்க்கு அதிகம் இலக்கானவர்கள் என்பது ... 64

தே.

தேகசுத்திக் கிரமங்கள் ... ... 94

தை.

தைஊன் என்னும் வார்த்தையின் அருத்தம் 8

தொ.

தொற்றுவியாதி யிரண்டுவகை யென்பது 54
தொற்றுவியாதி சிலசிடத்திலே தொற்றுக்காரணம் 57

ந.

நக்ஷத்திரங்கள் அதிகமாய்முயின்று விழுதல் கொள்ளைநோய்க்குமுன்னறிகுறியாகலாமென்பது 59

நா.

நாரத்தம்பழ (சாறு) ஷர்பத்து ... 168
நாலாம் [illegible] கொள்ளைநோய் ... 16

நி.


நிர்மூல பிளேக் ... ... ... 22


ப.


பதினாறாம் நூற்றாண்டின் பிளேக் ... 32
பதினெட்டாம் நூற்றாண்டின் பிளேக் ... 39
பதினேழாம் நூற்றாண்டின் பிளேக் ... 35
பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிளேக் 43
பரோடாவில் மஹாமாரிப்பால் குத்தினதினா லுண்டான பிரயோஜனம் ... 101
பனப்ஸஜிக்கட்டி ... ... 81
பனப்ஷா (சாதா) ஷர்பத்து ... ... 153
ஷை ... (வேறு) ... 154


பி.


பிளேகில் உபயோகப்படுத்தக்கூடியமுறைகள் 135
பிளேகிற்காம் திராவகம் ... ... 148
பிளேகிற்காம் பில்லிமாத்திரை ... 150
பிளேகிற்காம் மாஜூன் ... ... 151
பிளேகிற்கு நாளயிதல் ... ... 76
பிளேகிற்குப் பலபாஷைகளிலுமுள்ள பலநாமங்கள் ... ... ... 2
பிளேகிற்கு முன் உண்டாகும் சில விசேஷ அறிகுறிகள் ... ... ... 57
பிளேகிற்கும் இதர நோய்களுக்கும் இடையிலுள்ள பேதம் ... ... 70
பிளேகினால் உண்டாகும் இருதய அதிர்ச்சியின் சிகிச்சை ... ... ... 121





பிளேகினால் உண்டாகும் குமட்டல், வாந்தி, மலப்போக்கு ஆகியவைகளின் சிகிச்சை 124
பிளேகினால் உண்டாகும் புலம்பல், புத்தி தடுமாற்றம் ஆகியவைகளின் சிகிச்சை ... 128
பிளேகினால் உண்டாகும் மயக்கத்தின் சிகிச்சை 126
பிளேகின் அசாத்திய லக்ஷணம் ... 74
பிளேகின் ஆரம்ப லக்ஷணம் ... 65
பிளேகின் இங்கிலீஷ்வைத்திய சிகிச்சாக்கிரமம் 159
பிளேகின் சரித்திரம் ... ... 11
பிளேகின் சாத்திய லக்ஷணம் ... 75
பிளேகின் நாமங்களும் அவற்றின் பிரபாவங்களும் ... ... ... 2
பிளேகின் பிரதான லக்ஷணம் ... 66
பிளேகின் பூர்வரூபத்தைப்பற்றி யூனானி பண்டிதர்கள், இங்கிலீஷ் பண்டிதர்கள் ஆகியஇவர்களுக் கிடையிலுள்ள பேதம் ... 9
பிளேகின் பூர்வரூபத்தைப்பற்றி யூனானி பண்டிதர்கள் இங்குலீஷ் பண்டிதர்கள் ஆகிய இவர்களின் அபிப்பிராயம் முடிவில் ஒன்றேயென்பது ... ... ... 11
பிளேகின் பூர்வரூபமும் அதன் விகற்பமும் 7
பிளேகின் பூர்வரூபம் (யூனானிவைத்திய சாஸ்திர முறைப்படி) ... ... 7
ஷை (இங்கிலீஷ் வைத்திய சாஸ்திர முறைப்படி) ... 8
பிளேகின் பொதுச்சிகிச்சை ... 113
பிளேகின் பொது லக்ஷணம் ... 69
பிளேகின் விசேஷ சிகிச்சை ... 119

பிளேகின் விசேஷ லக்ஷணம் ... 71
பிளேகின் விஷக்கருக்கள் எவ்விதம் தொற்றிப் பரவுகின்றன வென்பது ... 98
பிளேகின் விஷக்கருக்கள் எவ்வித ரூபமுள்ளன வென்பது ... ... 98
பிளேகைத்தடுக்க முன் எச்சரிக்கை ... 91
பிளேகைத்தடுக்கு மாத்திரை ... 112
பிளேகைத்தடுக்கும் விதிகளை யேன் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது 91
பிளேக் (Plague) உண்டாகும் பிரதானகாரணம் 51
பிளேக் உண்டாகும் மூலகாரணத்தைப் பற்றி ஆங்கிலேய பண்டிதர், பூர்வ பண்டிதர் ஆகிய இருதரத்தாரின் அபிப்பிராயமும் ஒன்றேயென்பது ... ... 51
பிளேக் உண்டானகாலம் திட்டமாய்த் தெரியாதென்பது ... ... ... 12
பிளேக் எந்தக்காலமுதல் நடந்துவருகிற தென்பது ... ... ... 14
பிளேக் (Plague) என்னும் வார்த்தையின் அருத்தம் ... ... 5
பிளேக் கட்டிகளின் சாத்தியா சாத்தியம் 82
,, கட்டிகளின் சிகிச்சை ... 134
,, கட்டிகளின் வகைகள் ... 79
,, கட்டிகள் ... ... 78
,, கட்டிகள் பலவிதமாவதற்குக் காரணம் 79
,, கட்டிப் பிளாஸ்திரி ... 158
,, சிலசமயம் தொற்றுவதற்குக் காரணம் 89



பிளேக் தொற்றப் பெரும்பாலும் இலக்கானவர்கள் ... ... 63
,, தொற்றிப்பரவு மென்பது ... 85
,, நிவாரண ஔஷதம்... ... 142
,, நூதன வியாதி யல்லவென்பது 13
,, பரவி நிற்கையில் கவனிக்க வேண்டிய விதிகள் ... ... 108
,, ரோகி ஆகார வகைகள் ... 131
பிளாக் டெத் (Black death) ... 29

பு.

புளித்த ஊறல் கஷாயம் ... ... 157

பெ.

பெரும் யுத்தம் நடத்தல் கொள்ளை நோய்க்குக் காரணமாகாதென்பது ... 60
பெரும் பஞ்சம் கொள்ளைநோய்க்குக் காரணமாகுமா? என்பது ... ... 60

ம.

மசூரிகைக்கட்டி ... ... 80
மணத்தக்காளித்தீநீர் ... ... 156
மருந்துப் பிரயோகம் (இங்கிலீஷ்) ... 165
மார்காமரியென்னும் வார்த்தையின் அருத்தம் 14
மஹாசிந்த குளிகை ... ... 140
மஹாமாரி என இந்தப் பிளேகிற்குச் சொல்வது யுக்தமென்பது ... ... 6
மஹாமாரிப்பாலை எந்த ஆதாரத்தின்மீது கண்டுபிடிக்கப்பட்டதென்பது ... 96

மஹாமாரிப்பாலை எல்லோரும் குத்திக்கொண்டால் இந்தப் பிளேக் ஒழிந்துவிடுமென்பது ... ... 107
மஹாமாரிப்பாலைக் கண்டுபிடித்த விதம் 98
மஹாமாரிப்பாலைக் குத்திக்கொண்டவர்களுக்குண்டாம் சுதந்தரங்கள்... ... 105
மஹாமாரிப்பாலைக் குத்திக்கொள்வதினால் அபாயம் நேரிடாதென்பதற்குக் காரணம் 100
மஹாமாரிப்பாலைக்குத்தினால் பிளேக் உண்டாகாதென்பதற்குக் காரணம் ... 100
மஹாமாரிப்பால் குத்தல் ... ... 96
மஹாமாரிப்பாலைக் குத்தும் விதம் ... 106
மஹாமாரிப்பாலைச் சித்தப்படுத்தும் விதம் 99
மஹாமாரிப்பாலை மனித தேகத்தில் பிரதமத்தில் குத்திப் பரீக்ஷித்த விதம் ... 101
மஹாமாரிப்பாலை மிருகங்களுக்குக் குத்திப் பரீக்ஷித்தவிதம் ... ... 100

மா.

மாயக்கட்டி ... ... 82

மு.

முஸ்லிம்கள் பிளேக் ... ... 18
முஸ்லிம்கள் பிளேக் எனப் பெயருண்டானதற்குக் காரணம் ... ... 18
முஸ்லிம்கள் - க - ம் பிளேக் ... 20
முஸ்லிம்கள் - உ - ம் பிளேக் ... 20
முஸ்லிம்கள் - ௩ - ம் பிளேக் ... 21
முஸ்லிம்கள் - ௪ - ம் பிளேக் ... 23



முஸ்லிம்கள் - ௫ - ம் பிளேக் ... 25
முஸ்லிம்கள் பிளேக் (வேறு சில) ... 25

ரோ.

ரோஜாப்பூ என்னெய் ... ... 156

லா.

லாஹோரியில் மஹாமாரிப்பால்குத்தினதினாலுண்டான பிரயோஜனம் ... ... 102

வா.

வாசஸ்தான சுத்திக்கிரமம் ... ... 92
வால் நக்ஷத்திரம் முளைப்பது கொள்ளைநோய்க்கு முன்னறி குறியாகுமா? என்பது... 58

வி.

விபுலக்கட்டி ... ... 82
விஷசுரமென இப்பிளேகிற்குப் பெயரிடலாமென்பது ... ... 6

வே.

வேஷ்ரிவியா பிளேக் ... ... 20

ஹா.

ஹாப்லியில் மஹாமாரிப்பால் குத்தினதினாலுண்டான பிரயோஜனம் ... 104

ஜ.

ஜரிஷப்பழ (சாதா) ஷர்பத்து ... 154
ஜஸ்டினியன் பிளேக் ... ... 17

ஜீ.

ஜீவரக்ஷாமிர்தயோக பானம் ... 120

பிளேக் சிகிச்சா போதினி அட்டவணை.

முற்றிற்று.

—※—

## கொள்ளை நோயானது இன்னின்ன விடங்களில் இதற்குமுன்னு முண்டாயிருந்ததெனக் காண்பிக்கும் அட்டவணை.

—*—

### அ


பக்கம்.

அல்ஜீரியா ... ... ... 18
ஐதராபாத் (இந்தியா) ... ... 50
அஸ்டர்கான் ... ... ... 45-46
அஸீர் (Assir) ...


### ஆ


... ... 34
ஆக்ரா (இந்தியா) ... ... 39-42
ஆக்ரோன் ... ... 48
ஆப்கானிஸ்தான் எல்லை ... ... 33
ஆப்ரிகா ... ... ... 18
ஆப்ரிகா (மேற்கு) ... ... ... 15
ஆர்மீனியா ... ... ... 44-45
ஆஸ்டிரியா ... ... ... 38-40
ஆஸ்பேஹான் ... ... ... 27


### இ


இங்கிலாந்து ... ... ... 30
இட்லி ... 17-18-29-30-31-39
இந்தியா ... ... 27-32-34-39
இந்தியாவின் சில பாகங்கள் ... ... 50
இராக் ... ... ... 27

உ.

உடல்வா ... ... ... 45
உம்வாஸ்பட்டணம் ... ... ... 20

எ.

எகிப்து ... 14-17-18-35-43-44-45
எடிம்பரா ... ... ... 33

ஐ.

ஐர்லாந்து ... ... ... 30-36

க.

கச்சு (இந்தியா) ... ... ... 49
கதாராநாத் (குமாயூன் ஜில்லா கட்வாலைச்சார்ந்த) 50
கத்வால் (இந்தியா) ... ... ... 51
கய்ப் (சின்னாசியா) ... ... ... 42
கர்லன் (இடலி) ... ... ... 31
கமீலாட் ... ... ... [illegible]

கா.

காட்டியவார் (இந்தியா) ... ... 49
காபன் ஹெச்சன் ... ... ... 40
காப் ... ... ... 43
கான்வால் ... ... ... 42
கார்ப்பு ... ... ... 44
கால் ... ... ... 17
கான்ஸ்டான்டிநோப்பல் ... 17-29-39-40-43-44-45

கி.

கிரிமியா ... ... ... 44
கிரீஸ் ... ... ... 29





கு.

குருஸான் ... ... ... 46
குர்டிஸ்தான் ... ... 46-48-51
குஜராத் (இந்தியா) ... ... ... 39-49

கூ.

கூபா ... ... ... 23-25-26

கோ.

கோஸிகி (வல்காநதி யோரமாயுள்ளது) ... 49

ட.

... ... ... 35

டா.

[illegible] ... ... ... 44-45
டால்மே ... ... ... 31

டி.

டிரான்ஸில்வீ ... ... 40-42

டெ.

டெரும் (ஹாலண்ட்) ... ... ... 37

டோ.

டோகன் ... ... ... 40

தி.

தில்லி (இந்தியா) ... ... 34-38-42

து.

துர்க்கி (ஐரோப்பா) ... 18-38-42

தெ.

தெலுங்கணம் (இந்தியாவிலுள்ள) ... 39

நி.

நியூகாஸல் ... ... ... 33-36
நியூமார்க்ஜுன் ... ... ... 36

நே.

நேபல்ஸ் ... ... ... 36

ப.

பகாரீஸ்த் ... ... ... 44
பக்காப் ... ... ... 51
பக்தாத் ... ... 26-47-48
பங்காஜி (ஆப்ரிகா) ... ...
பம்பாய் ... ... ... 51
பரஸீல்ஸ் ... ... ... 39
பருஆ ... ... 31
பர்குயூ ... ... ... 38
பஸ்ரா ... ... 21-23-24-25-47

பா.

பாரிஸ் ... ... ... 33
பார்கா ... ... ... 45
பார்ஸ் (Persia) (ஈரான்) ... 15-27-47-48
பாலண்ட் ... ... ... 38-39

பி.

பிரஷ்ஷியா ... ... ... 40
பிரான்ஸ் ... ... 30-31-39

பீ.

பீடர்ஸ்ரண்ட் ... ... ... 52

பெ.

பெர்ஷியா (தென்) ... ... ... 51



போ.

போஸ்னிஆ ... ... ... [illegible]

ம.

மக்கா ... ... ... 46
மசீகோப் ... ... ... 44
மதாயன் ... ... ... 20
மத்திய ஆஷியா ... ... ... 13

மா.

மாரோகே ... ... ... 45
மாக்டிபர்க் ... ... ... 39
மார்ஸில்ஸ் ... ... ... 29-40
மால்டா ... ... ... 38-44
மாஸிகோ ... ... ... 33-42

மி.

மிட்லாண்ட் ... ... ... 30
மிலன் ... ... ... 35

மீ.

மீவார் (இந்தியா) ... ... ... 16-50

மு.

முகம்மரா ... ... ... 47

மூ.

மூரியா (கிரீக்) ... ... ... 44

மே.

மேற்கு ஆபிரிகா ... ... 15

மை.

மைனர்கா ... ... ... 39

யு.

யமு ... ... ... 45-46
யூனான் ... ... ... 50-51

ர.

ரயன் ... ... ... 33
ரஷ்ஷியா (சின்ன) ... ... 43

ரா.

ராம்பூர் (இந்தியா) ... ... 50
ராஜபுதானா (இந்தியா) ... ... 50

ரி.

ரிஷ்த் (கிலான்) ... ... ... 46

ரு.

ருமேனியா ... ... ... 41-45

ல.

லண்டன் ... ... 31-34-35-36-37
லதுவானியா (Lithuania) ... ... 40
லஹோவினியா ... ... ... 42

லா.

லாயின்ஸ் ... ... ... 33

லீ.

லீவ்னியா ... ... ... 42

லே.

லேபியா ... ... ... 15

வி.

வியென்னா ... ... ... 33
விலீஷியா ... ... ... 43
வல்காரதி போராக்கள் ... ... 48





வா.

வாஸித் ... ... ... 23

வெ.

வெனிஸ் ... ... ... 33

ஸ.

ஸலீஷியா ... ... ... 40

ஸா.

ஸாலோனியா ... ... ... 42

ஸி.

ஸிரியா ... 14, 20, 28, 40, 43
ஸிஸிலி ... ... ... 29, 40

ஸ்.

ஸ்காட்லாண்ட் ... ... ... 30
ஸ்கேண்டிநேவியா ... ... 40
ஸ்டாக்ஹால்ம் ... ... ... 40
ஸ்பெயின் ... ... 29, 30, 32, 37
ஸ்மார்னா ... ... ... 44

ஷ.

ஷஹார்படன் (இந்தியா) ... ... 16

ஷா.

ஷாம் (ஸிரியாவைப்பார்க்க) ...

ஹ.

ஹங்கேரி ... ... ... 38, 42
ஹம்பா ... ... ... 40
ஹைதராபாத் (சிந்து) இந்தியாவிலுள்ள 50
ஹல் ... ... ... 36

ஹா.

ஹாலன் ... ... 32, 36, 37

ஹாலி ... ... ... 38

ஹான்காங் ... ... ... 51

ஐ.

ஐரீஸ் ... ... ... 43

ஜா.

ஜார்ஜியா ... ... ... 43

ஜி.

ஜினேவா ... ... ... 36

ஜெ.

ஜெர்மனி ... 29, 31, 32, 37, 38, 40


கொள்ளைநோயானது இன்னின்ன விடங்களில் இதற்குமுன் உண்டாயிருந்ததெனக் காண்பிக்கும்.

அட்டவணை.

முற்றிற்று.

—※—

தற்காலத்திற்குமுன்

## கொள்ளைநோ யுண்டாயிருந்த வருஷக்கிரம அட்டவணை.

| | | | | பக்கங்கள். |
|---|---|---|---|---|
| B. C. | | | | |
| 300-ம் ஆண்டு. | | ,, | ... | 14 |
| | ௪-ம் நூற்றாண்டு. | | | 16 |
| | ௬-ம் நூற்றாண்டு. | | | |
| A. D | | | | |
| 542 | ,, | ,, | ... | 17 |
| 543 | ,, | ,, | ... | ,, |
| 546 | ,, | ,, | ... | ,, |
| [illegible]5 | ,, | ,, | ... | 18 |
| 571 | ,, | ,, | ... | 18 |
| 589 | ,, | ,, | ... | 20 |
| 590 | ,, | ,, | ... | 18 |
| | ௭-ம் நூற்றாண்டு. | | | |
| 600 | ,, | ,, | ... | 20 |
| 601 | ,, | ,, | ... | 20 |
| 632 | ,, | ,, | ... | 25 |
| 636 | ,, | ,, | ... | 26 |
| 670 | ,, | ,, | ... | 23 |

—※—

### ௮-ம் நூற்றாண்டு.

| A. D. | | | | |
|---|---|---|---|---|
| 710 | ,, | ,, | ... | 26 |
| 714 | ,, | ,, | ... | 24 |
| 729 | ,, | ,, | ... | 26 |

—※—

### ௯-ம் நூற்றாண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 804 | ,, | ,, | ... | 27 |
| 832 | ,, | ,, | ... | 27 |
| 871 | ,, | ,, | ... | ,, |
| 882 | ,, | ,, | ... | ,, |

—※—

### ௧௦-ம் நூற்றாண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 989 | ,, | ,, | ... | |

—※—

### ௧௧-ம் நூற்றாண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1006 | ,, | ,, | ... | 27 |

—※—

### ௧௪-ம் நூற்றாண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1332 | ,, | ,, | ... | 28 |
| 1346 | ,, | ,, | ... | 29 |
| 1347 | ,, | ,, | ... | ,, |
| 1348 | ,, | ,, | ... | ,, |
| 1349 | ,, | ,, | ... | 30 |



### ௧௫-ம் நூற்றாண்டு.

| A. D. | | | | |
|---|---|---|---|---|
| 1438 | ,, | ,, | ... | 31-36 |
| 1447 | ,, | ,, | ... | 31 |
| 1466 | ,, | ,, | ... | ,, |
| 1477 | ,, | ,, | ... | ,, |
| 1485 | ,, | ,, | ... | ,, |
| 1499 | ,, | ,, | ... | ,, |

—※—

### ௧௬-ம் நூற்றாண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1500 | ,, | ,, | ... | 31 |
| 1563 | ,, | ,, | ... | 33 |
| 1570 | ,, | ,, | ... | ,, |
| 1574 | ,, | ,, | ... | 33 |
| 1576 | ,, | ,, | ... | 33 |
| 1592 } 1599 } | ,, | ,, | ... | 34 |

—※—

### ௧௭-ம் நூற்றாண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1603 | ,, | ,, | ... | 34 |
| 1609 | ,, | ,, | ... | 35 |
| 1630 | ,, | ,, | ... | ,, |
| 1632 | ,, | ,, | ... | ,, |
| 1635 | ,, | ,, | ... | 36 |
| 1636 | ,, | ,, | ... | ,, |
| 1637 | ,, | ,, | ... | ,, |
| 1640 | ,, | ,, | ... | 35 |

| A. D. | | | | |
|---|---|---|---|---|
| 1645 | " | " | ... | 35 |
| 1647 | " | " | ... | 36 |
| 1650 | " | " | ... | " |
| 1656 | " | " | ... | " |
| 1664 | " | " | ... | 37-38 |
| 1669 | " | " | ... | 38 |
| 1681 | " | " | ... | " |

—*—

க௮-ம் நூற்றாண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1703 | " | " | ... | 39 |
| 1704 | " | " | ... | " |
| 1710 | " | " | ... | 40 |
| 1713 | " | " | ... | " |
| 1717 | " | " | ... | " |
| 1720 | " | " | ... | " |
| 1721 | " | " | ... | " |
| 1723 | " | " | ... | " |
| 1724 | " | " | ... | 41 |
| 1738 | " | " | ... | 42 |
| 1745 | " | " | ... | " |
| 1755 | " | " | ... | " |
| 1757 | " | " | ... | " |
| 1770 | " | " | ... | " |
| 1771 | " | " | ... | " |
| 1775 | " | " | ... | " |
| 1797 | " | " | ... | 43 |
| 1799 | " | " | ... | " |



க௯-ம் நூற்றாண்டு

| A. D. | | | | |
|---|---|---|---|---|
| 1801 | " | " | ... | 43 |
| 1802 | " | " | ... | " |
| 1803 | " | " | ... | " |
| 1807 | " | " | ... | " |
| 1808 | " | " | ... | " |
| 1809 | " | " | ... | 44 |
| 1812 | " | " | ... | " |
| 1813 | " | " | ... | " |
| 1815 | " | " | ... | 44-45-49 |
| 1822 | " | " | ... | 44 |
| 1823 | " | " | ... | 50 |
| 1827 | " | " | ... | 44 |
| 1828 | " | " | ... | " |
| 1829 | " | " | ... | " |
| 1831 | " | " | ... | " |
| 1832 | " | " | ... | 47 |
| 1834 | " | " | ... | 50 |
| 1837 | " | " | ... | 45 |
| 1840 | " | " | ... | " |
| 1841 | " | " | ... | " |
| 1844 | " | " | ... | " |
| 1849 | " | " | ... | 50 |
| 1850 | " | " | ... | " |
| 1852 | " | " | ... | " |
| 1853 | " | " | ... | 45 |
| 1858 | " | " | ... | " |

| A. D. | | | |
|---|---|---|---|
| 1863 | ,, | ,, | ... 45 |
| 1866 | ,, | ,, | ... ,, |
| 1868 | ,, | ,, | ... 46 |
| 1870 | ,, | ,, | ... ,, |
| 1871 | ,, | ,, | ... 50 |
| 1874 | ,, | ,, | ... 46 |
| 1876 | ,, | ,, | ... 46 |
| 1877 | ,, | ,, | ... 48-50 |
| 1878 | ,, | ,, | ... 48 |
| 1879 | ,, | ,, | ... ,, |
| 1882 | ,, | ,, | ... 51 |


தற்காலத்திற்கு முன்
கொள்ளைநோ யுண்டாயிருந்த
வருஷக்கிரம அட்டவணை
முற்றிற்று.

பிஸ்மில்லாஹிர்றகுமா நிர்றகீம்.

# பிளேக் சிகிச்சா போதினி.

## கடவுள் வணக்கம்.

### அறபு வாக்கியம்.

அல்கம்து லில்லாகி, றப்பில் ஆலமீன்;
அஸ்ஸலாத்து, வஸ்ஸலாமு அலாஸய்யிதில்
முர்ஸலீன்; வ ஆலிஹி, வ அஸ்காபிஹி,
அஜ்மஈன்.

## பீடிகை.

சென்ற 1896-ஆம் ஆண்டில் பம்பாய் நகரத்தில் திடீப்பிரவேசமாய் பிளேக் என்னும் கொள்ளை நோயானது ஆரம்பமாகி, அங்கிருந்து பூனா, கர்ராச்சிமுதலிய இவ்விந்தியாவின் பல பாகங்களிலும் பரவி, இச்சமயத்தில் பெங்களூர் முதலிய ஊர்களிலும் வந்து, தினேதினே விர்த்தியடைவது அனேகருக்குத் தெரிந்தவிஷயமே. இக்கொள்ளை நோயானது ஒருவரிடமிருந்து மற்றொருவரிடமும் தொற்றுமலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவாமலும் நமது காருண்ணிய கவர்ன்மெண்டாரும் அனேகவித பிரயாசையோடு முயற்சிசெய்து வருவது பட்டப் பகலைப்போல வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்த விஷயமே. ஆகையால் இக் கொள்ளை

நோயின் பூர்வம், சரித்திரம், சுபாவம், லக்ஷணம், இது தொற்றும்விதம், அதைத் தடுக்கும்விதம், சிகிச்சை முதலிய வைகளடங்கிய கிரந்தம் ஒன்று இச்சமயத்தில் இருந்தால், நாம் ஒவ்வொருவரும் அறிந்து தெரிந்து அதை யனுசரித்து, மனப்பூர்வமாய் அவர்களுக்குதவியாகி, அக்கொள்ளை நோயானது நமது தேசத்தை யெட்டிப் பார்க்காமலே செய்யவும், ஒருவேளை ஏதேனும் நடமாட்டங்கண்டாலும் அது தலையெடுக்க வொட்டாமலதை நசுக்கிப் போகக்கிவிட சாதகமாகவும், இந்த வியாதிக்கும் இதரவியாதிக்கும் உள்ளபேதாபேதங்களைத்தெரிந்துநிச்சயிக்கவும் ஏதுவாகுமெனவும் விருப்புற்றபடியால், அவர்கள் கருத்திற்கிசைந்து, முற்காலத்தும் பிற்காலத்தும், தற்காலத்தும் உள்ள பண்டித சிரோமணிகளின் அநுபவங்களைச் சுருக்கமாய் இங்கெழுதுவாம்.

## பிளேக்.

இப்போது பம்பாய், பெங்களூர் முதலிய இந்தியாவின் பல பாகங்களிலும் பரவிநிற்கும் கொள்ளை நோய்க்கு யூநானி பாஷையில் தைஊன் என்றும், அறபிபாஷையில் தாஊன் என்றும், பார்ஸி பாஷையில் மர்காமர்கி யென்றும், இங்கிலீஷில் பிளேக் என்றும், பூபோனிக்பிளேக்என்றும், தமிழில் மஹாமாரி என்றும், விஷசுரம் என்றும் பெயராம்.

## பிளேகின் நாமங்களும் அவற்றின் பிரபாவங்களும்.

இந்தக் கொள்ளை நோய்க்குப் பற்பல பாஷைகளிலும், பற்பலதேசங்களிலும், பற்பலசமயங்களி



லும் உண்டானநாமப்பிரதிநாமங்களையும், அவற்றின் காரணார்த்தங்களையும் தெரிந்துகொள்வதினாலேயே இக்கொள்ளை நோயின் சுபாவம் முதலியவைகளை யொருவாறு கிரகித்து அறியக்கூடும். ஆகையால் அவற்றைக் கிஞ்சித்து விவரிக்கின்றோம்.

தைஊன்—இந்த வார்த்தையானது சுயமான யூநானி பாஷை. இந்தச் சொல்லின் அருத்தமாவது தொற்று வியாதி. இது சாதாரணமாய் எல்லாவகைத் தொற்று வியாதிக்கும் பெயராயினும், இப்போது இவ்விந்தியாவில் பிரபலமாய் எங்கும் பரவிக் கொள்ளையாடும் வியாதிக்கே பண்டைக்காலந்தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் யூநானி பாஷையில் கொள்ளை நோய்க்கு, தர்பாஸ், கூமாதா, கூமாஜாலாவென இன்னும் வேறனேக நாமங்களுளவென்றும், அவற்றின் இலக்ஷணங்கள் இன்னின்னவென்று சொல்லப்படவில்லை யென்றும் பூஅலிஸீனாவென்னும் மகாபண்டிதர் தம்முடையகிரந்தத்தில் சொல்லுகின்றார்.

தாஊன்—இதைப்பற்றி அனேக அபிப்பிராயங்களுண்டு. ஆயினும் அவற்றுள் முக்கியமானவைகளை மாத்திரம் இங்கெழுதுவாம்.

(a) தாஊன்—என்னும் சொல்லின் சாதாரண அருத்தமாவது (குத்து வியாதி) என்பதே. இப்படி யுண்டானதற்குக் காரணம், இந்தத் தொற்று வியாதி யுண்டான அனேக தேசங்களில் இந்தவியாதிக்குட்பட்டவர்களுள் அனேகர், இதற்குட்படாததற்கு முன், தம்மையாரோ வொருவர் ஈட்டியினால்

ருத்தினதாகக் கினவு காண்பதுவழக்கம். ஈட்டியினுல் குத்துகிறதற்கு அறபிபாஷையில் (தஅன்) என்றுபெயர். ஆகையால் இதற்கு (தாஊன்) குத்துகிற வியாதி எனப்பெயரானது. அநேகபண்டிதர்கள் இந்த அபிப்பிராயத்தைச் சரியானதெனச் சொல்கின்றார்கள்.

(b) தாஊன்—என்பது ஈட்டியின் குத்தைப் போன்ற அதிகவேதனையை யுடையதென அருத்தமாம். ஆகையால் இந்தத் தொற்று வியாதியில் அதிக வேதனையுண்டாவதினுல் இந்த நோய்க்கு இப்பெயரிடப்பட்டதென சிலபண்டிதர்களின் அபிப்பிராயம்.

(c) தாஊன்—இந்த வார்த்தையானது முன்சொன்ன யூநாநி பாஷைப் பெயராகிய தைஊன்என்னும் வார்த்தையையே, அறபிகள், மற்றவார்த்தைகளை அந்தப் பாஷையினின்றும் தங்கள் பாஷையில் மாற்றிக் கொண்டது போலவே, இந்த (தைஊனை) யும் (தாஊனென) மாற்றிக்கொண்டார்கள், என்பது சிலர் அபிப்பிராயம்.

(d) தாஊன்—என்பது ஈட்டிக்குத்து. முற்காலங்களில் ஈட்டிகளுக்கு நஞ்சூட்டி வைப்பதுண்டு. அதனுல் குத்துண்டவர்கள் பிழைப்பது அரிது. ஏனெனில் அந்த ஈட்டியினுல் சிறுகாயம் பட்டாலும் அந்த நஞ்சானது தேக மெங்கும் பரவி விஷமித்துக் கொல்லும். அப்படிப்போல, இந்த வியாதி கண்டவர்கள் பிழைப்பது அரிது. அந்த விஷத்தைப் போல இதுவும் எங்கும் பரவிக் கொல்லுகிறது.



ஆகையால் இந்த நோய்க்கு இப்பெயரிடப்பட்டதென்பது சில பண்டிதர்களின் அபிப்பிராயம்.

இந்த அபிப்பிராயங்களெல்லாம் எப்படியாயினு மாகுக. தாஊன் என்னும் சொல்லிற்கு வைத்திய அகராதியில் - 2 - வகை அருத்தமுள. (1) தொற்று வியாதி அதாவது சாதாரணமாய் எல்லாப பிராணிகளிலும் பரவத்தக்கது. (2) வது தற்காலத்தில் இந்தியாவில் பரவிநிற்கும் வியாதியின் லக்ஷணமுடைய கொள்ளை நோய் என்பதே.

மர்காமர்கி—இது சாவு சாவு அதாவது பெருஞ்சாவு, என்பதற்கு வழங்கப்பட்டது. ஒரு காலத்தில் பெர்ஷியாதேசத்தில் இந்தக்கொள்ளை நோயுண்டான போது எங்கெங்கும் சாவாய் (மரணமாயிருந்தபடியால்) மர்க்மர்க் என அப்போதுண்டான ஜனவாக்கானது இந்தக் கொள்ளை நோய்க்கே பெயராகிவிட்டது என்பது சில பண்டிதர்களின் அபிப்பிராயம், மஹாமாரி யென்னும் வார்த்தையே மர்காமர்கி யெனத்திரிந்தது என்பது சில பண்டிதர்களின் அபிப்பிராயம்.

பிளேக் (Plague) இது லாடின் வார்த்தை. வைத்திய சாஸ்திரங்களில் இதற்கும் இரண்டுவித அருத்த முள்ளன. (1) புராதன ஆங்கிலேய டாக்டர்களாகிய காலன் முதலிய பண்டிதர்களின் கருத்தைப்போலவே, இது சாதாரணமாய் எல்லோரையும் தொற்றிக்கொல்லும் வியாதி. (2) வது. தற்காலத்தில் இந்தியாவில் சில பாகங்களில் பரவிநிற்கும் இக்கொள்ளை வியாதி யென்பதே.

இங்கிலீஷில் பிளேக் என்பதற்கு, ஓரியான்டல் லெவன்டைன், பபோனிக் பிளேக், ஜெடேனன் பிளேக் என வேறு நாமங்களு முண்டு.

மஹாமாரி, அம்மை நோய்களில் இது ஒரு வகையென்றும் இதில் பெரும்பாலும் மரணமே யுண்டாவதால மஹாமாரி யென்றும் சொல்வது சிலர் துணிபு. காஷ்மியரையடுத்த சிலமலைப் பிரதேசங்களில் விஷபேதி முதலிய கொள்ளை நோய்களுக்கு மஹாமாரியென இன்றும் வழங்கப்படுகிறதுபோலவே, இந்தக் கொள்ளை நோய்க்கும் மஹாமாரியெனப் பெயர் பெறுவது யுக்தமென்பது சிலர் துணிபு.

விஷசுரம், இதன் ஆரம்பமே விஷதருமத்தைப் பொருந்தி யிருப்பதாலும், சுர லக்ஷணங்களின் அசாத்திய லக்ஷணமே இதில் பெரும்பாலும் உண்டாவதாலும் இதற்கு விஷசுரமெனச் சொல்லலா மென்பது சிலர் துணிபு.

இன்னும் இக்கொள்ளை நோயைப்பற்றின பற்பல விஷயங்கள் அடுத்த அத்தியாயத்தில் எழுதப்படும் பிளேக் சரித்திரத்தில் தெளிவாய் விளங்கும். ஆயினும் மேற்கண்ட விஷயங்களினால் நாம்தெரிந்து கொண்டதாவது, இந்தக் கொள்ளைநோய்க்கு எந்தெந்தப் பாஷையில் என்னென்ன பெயரிடப்பட்டிருக்கின்றனவென்றும், அந்தந்த வார்த்தைகளின் பத அருத்தம், விசேஷ அருத்தம் இன்னின்னவென்றும் முடிவாய்ச் சொல்லில் எல்லா நாமங்களும் இக்கொள்ளை நோயொன்றற்கே வழங்கப் பட்டனவென்று நாம்தெரிந்து கொண்டோம். இக்



வியாதியானது தொற்றி பிராணிகளை நாசப்படுத்தும் சுபாவமுடைய ஒருவித கொள்ளைநோ யென்பதே எல்லாப் பாஷைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறதென நன்கு விளங்கும்.

—※—

## பிளேகின் பூர்வ ரூபமும் அதன் விகற்பமும்.

—※—

இந்த பிளேகின் பூர்வ ரூபத்தைப்பற்றி யூநாநி வைத்திய கிரந்தங்களிற் சொல்லப் பட்டிருப்பன பின் வருபவைகளாம்.

தேகத்தின் மிருதுவான தசையுள்ள பாகங்களில், சற்றேறக்குறைய மொச்சைக் கொட்டைப் பருமனுள்ள, கட்டி அல்லது தடிப்புகண்டு, அதில் விஷதருமமுண்டாகி, அதிக எரிவந்தம் உண்டாம். இந்த அளவிற்குக் குறைந்ததாகவும் பெருத்ததாகவும் இருக்கும். பருமனில் நெல்லிக்கா யளவும் அபூர்வமாய் அதற்கதிக பருமனாகவும் காண்பதுண்டு. தசையுள்ள பாகங்களில் முக்கியமானவைகளாவன. தொடையடி (கவட்டி), அக்குள் (கக்கம்), காதின்பின்புறம், ஸ்தனங்கள் முதலிய ஸ்தானங்களே. சிலருக்குமார்பிலும்காண்பதுண்டு. இக்கட்டியானது ஆரம்பத்தில் உள் அவயங்களிலுண்டாகியே பின்பு வெளிகாண்கிறது என்பதே பெரும்பாலார் அபிப்பிராயம். ஆனால் சிலருக்கு சீக்கிரமாய் வெளிகாணும் சிலருக்குத் தாமதமாய் வெளிகாணும்

சிலருக்கு வெளிகாணாமலே உள்ளேயே யிருந்துவிடுவதுண்டு. இந்தக் கட்டியானது உள்ளிலேயோ அல்லது வெளியிலேயோ கண்டவுடன், இதன்லக்ஷணங்களில் சம்பந்தப்பட்டவைகளான கடூரசுரம், அரோசிகம், ஓக்காளம், வாந்தி, மயக்கம் முதலியவைகளுண்டாகி விடுகின்றன. இது தொற்றுவியாதி. ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் அதிசீக்கிரம் தொற்றும் சுபாவமுடையது.

—இதன் பூர்வரூபத்தைப் பற்றி இங்கிலீஷ் வைத்திய சாஸ்திரங்களில் பின்வருகிற விதமாய்ச்சொல்லப்படுகின்றன:—

இது ஒருவித சுர சம்பந்தமான வியாதி. இது திடீர்ப்பிரவேசமாய் ஆரம்பமாவதுடன், ஆரம்பத்திலேயே அதிக உக்கிரத்தோடு சுரமுண்டாகி, தக்ஷணமே டிக்ரி அதிகமாய்விடுகிறது. இதன்லக்ஷணங்களில் சம்பந்தமாகிய கட்டிகள், குமட்டல், வாந்தி, மயக்கம், மெய்மறதி, மலபந்தம் ஆகியவைகளுண்டாம். இக்கட்டிகள் பெரும்பாலும் தொடையடி (கவட்டி), அக்குள் (கக்கம்), கழுத்து ஆகிய ஸ்தானங்களில் காணும். இந்தக் கட்டிகள் சிலருக்கு எரிவந்தத்தோடிருக்கும். சிலருக்குக் கட்டிகள் காணாமலே சுரமாத்திரமிருக்கும். இந்த வியாதிகண்டவர்களிடமிருந்து சுகமாயிருக்கிற மற்றவர்களிடம் தொற்றும் சுபாவமுடையது.

யூநானி பண்டிதர்கள் சொல்லும் (தாஊன் என்னும் இந்தத் தொற்று வியாதியின் பூர்வரூபத்தையும், அதன் பிரதான லக்ஷணங்களையும், இங்கி-



லீஷ் டாக்டர்கள் சொல்லும் பிளேக் (Plague) என்னும் தொற்றுவியாதியின் பூர்வரூபத்தையும், அதன் பிரதான லக்ஷணங்களையும், நாம் சீர்தூக்கிப்பார்த்தால், (தாஊன்) என்பதும் (பிளேக்) என்பதும் ஆகிய இந்த இரண்டு வார்த்தைகளும் ஒருவகை வியாதிக்கே வெவ்வேறான இரண்டு பாஷைகளின் பெயர்களென்ன மிகவும் எளிதாய் விளங்கும்.

இவ் விருதரத்தார் சொல்லும் இக்கொள்ளை நோயின் பூர்வரூபம், பிரதானலக்ஷணம் ஆகியவைகளிலுள்ள பேதமாவது.

யூநானி பண்டிதர்கள் இந்தக்கொள்ளைநோயின் பூர்வமானது, கட்டி அல்லது வீக்கம் அல்லது கொப்புளம் என்றும், சுரமுதலியவைகள் அதன் பிரதான லக்ஷணங்களிலுள்ளவைகளென்றும் சொல்கிறார்கள்.

இங்கிலீஷ் டாக்டர்களோ இந்த வியாதியின் பூர்வரூபம் சுரமென்றும், கட்டி முதலியவைகள் அதன் பிரதான லக்ஷணங்களிலுள்ளவைகளென்றும் சொல்கிறார்கள். என்பதே.

ஆனால் இவ்விருதரத்தார் சொல்வதை நாம் சற்று நிதானமாய் யோசித்துப்பார்த்தால் இதில் ஒன்றுக்கொன்று விரோதப்படத் தக்க விஷயம் ஒன்றுமில்லையென்பது நன்கு விளங்கும். ஏனெனில், சுரம், கட்டி ஆகியவைகளுண்டாவதை யிருதரத்தாரும் ஒப்புக்கொள்கின்றார்கள். ஆகையால் கட்டி பூர்வரூபமா? சுரம் பூர்வரூபமா? என்னும் பேதமானது (தாஊன்) என்பதையும் (பிளேக்)

என்பதையும் வெவ்வேறான வியாதியென நிச்சயப்படுத்தாது.

ஏனெனில், யூனானி பண்டிதர்களில், (ஷபாவு வித்தாவுல் வபாயி) என்னும் (கொள்ளை நோய் நிவாரண சிந்தாமணி) என்னும் கிரந்த கர்த்தாவாகிய அக்கீம் முகம்மத் தாஹிர் என்னும் பண்டிதர், மேற்படி கிரந்தத்தில், இக்கொள்ளை நோய்க்குக் கட்டியானது பூர்வரூபமென நம்பக்கூடவில்லையென சில அத்தாக்ஷிகளைக் காண்பித்திருக்கிறார். இது இப்படியிருக்க, இப்போது [illegible] கண்ட இக்கொள்ளை நோயில் மாண்டவர்களுள் நூற்றில் எண்பது, தொண்ணூறு பெயர்களுக்குக் கட்டியுண்டாயிருந்ததென பிளேக் ரிபோர்ட் (Plague Report) என்பதில் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இன்னும் (பிளேக் ரெகுலேஷன்) Plague Regulation என்னும் சட்டபுத்தகத்தில் சுரத்துடன் கட்டியையும் கொள்ளைநோய் பிரதானலக்ஷணமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ்விருதரத்தார் கொள்கையும் பெரும்பாலும் அநுபவத்தில் ஒத்தேயிருப்பதாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இன்னும் இக்கொள்ளை நோயைப்பற்றி யூனானி வைத்திய சாஸ்திரங்களிற் சொல்லப்படாத சில விசேஷ லக்ஷணங்கள், இங்கிலீஷ் சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. ஆகையால் (தாவூன்) என்பதிலும், (பிளேக்) என்பதிலும் வித்தியாச முளதென ரூபிக்கத் தக்க நியாயமாகாது. ஏனெனில் இந்த (பிளேக்) வியாதியைப்பற்றியே ஆதாரமான சில இங்கிலீஷ் வைத்திய சாஸ்திரங்களைப் பார்வை



யிட்டால், ஒருவர் சொல்லும் லக்ஷணங்களைப் பார்க்கிலும் மற்றொருவர் அதிகமாய்ச் சொல்லியிருக்கிறார்களெனத் தெரிந்துகொள்ளக் கூடும். ஆகையால், (தாவூன்) என்பதும் (பிளேக்) என்பதும் ஒருவகை கொள்ளைநோயே. இந்த இரண்டுவார்த்தைகளும் இப்போது இந்தியாவின் சிலபாகங்களில் பரவிநிற்கும் தொற்றுவியாதிக்குச் சொல்லப்படுவது முற்றும் சரியானதென்பது நிச்சயமே.

நாமிப்போது இக்கொள்ளை நோயின் பூர்வரூபம், பிரதானலக்ஷணம் ஆகியவைகளைப்பற்றி யூனானி பண்டிதர்கள், ஆங்கிலேய டாக்டர்கள் ஆகிய இவர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டதுமன்றி, அவையிரண்டும் ஒன்றேயென்றும், இப்போது இவ்விந்தியாவில் சிலபாகங்களில் பரவிநிற்கும் அந்த வியாதிக்கே தாவூன் என்றும் பிளேக் என்றும் சொல்வது சரியான வார்த்தை யென்றும் தெரிந்து கொண்டோம்.

—*—

## பிளேக் சரித்திரம்

—*—

இந்தச் சரித்திரத்தை ஆதியோடந்தமாய் நாம் தெரிந்துகொள்வதினால், இப்போது நமது காருண்ணிய இராஜாங்கத்தார் இக்கொள்ளைநோயைப்பற்றி எடுத்துக் கொள்ளும் எச்சரிக்கைகளும், அவர்கள் செய்யும் ஏற்பாடுகளும், முயற்சிகளும் மிகவும் உத்தமமானவைகளும் அவையாவராலும் மறுக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளத்தக்கவைகளு மென்றும்,

பிரஜைகளாகிய நாம் ஒவ்வொருவரும் அவர்களுக்கு மனப்பூர்வமாய் எல்லாவிதத்திலும் உதவியாயிருக்க வேண்டியது ஆவசியகத்திலும் மகா ஆவசியகமென்றும் இலகுவாய்த் தெரிந்து கொள்ளக் காரணமாம். அவை பின் வருகிற விதமாம்.

இந்தக் கொள்ளை நோயானது பிரதமத்தில், எவ்விடத்தில், எப்போது உண்டானதெனத் திட்டமாய்ச் சொல்லஏதுவில்லை. முஸ்லிம்கள் (மகம்மதியர்கள்) அரசாள ஆரம்பஞ் செய்யாததற்கு முன் எந்தக்காரியமும் கிரமமாய் எழுதப்படவில்லை யாகையால், பூர்வசங்கதிகளை யுள்ளதுள்ளபடி நிச்சயமாய்ச் சொல்லத்தகுந்த அத்தாட்சி யில்லையென சரித்திராசிரியர்களுள் பெரும்பாலாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றவிஷயங்களெல்லாம் ஒருவாறிருக்கினும் முக்கியமாய் இந்தக் கொள்ளை நோயைப்பற்றிச் சொல்வது பெருஞ் சந்தேகமே. ஏனெனில் இக்கொள்ளை நோயானது பூர்வகாலத்தில் ஒருவேளை யுண்டாயிருந்து, அதன் லக்ஷண முதலியவைகளை அக்காலத்தவர்கள், தப்பாய் வேறுவித அபிப்பிராயப் பட்டிருந்தாலு மிருக்கலாம். ஆகையால் வைத்திய சாஸ்திராரம்பம் எக்காலத்தில் உண்டானதெனத் திட்டமாய்ச் சொல்வதில் எவ்வளவு கஷ்டமோ, அப்படியே யிந்தக்கொள்ளை நோயானது எப்போது முதல் முதல் ஆரம்பமாயுண்டானதெனச் சொல்வதிலும் கஷ்டமுண்டு. ஆகையால் இதன் பூர்வ ஆரம்பச் சரித்திரத்தை விட்டொழித்து, இக்கொள்ளை நோயானது எக்காலத்திலிருந்து நடந்து வருகிறதென்றும், எந்தெந்தக் காலத்தில் எவ்வெவ்



விடத்தில் உண்டா யிருந்ததென்றும், அந்தந்தச் சமயங்களில் எவ்வெவ்வித இலக்ஷணங்க ளிருந்தனவென்றும், அவ்வப்போது எவ்வெவ்வளவு ஜனத்தொகைகள் இதற்கு இரையானார்களென்றும் தீர்க்க விசாரிப்போம். இதற்காக, நாம் முக்கியமாய்ப் பிற்காலத்துச் சரித்திராசிரியர்களின் ஆதாரத்தையே பின்பற்றுவோமாக. ஏனெனில் பூர்வகாலத்திலுள்ளவர்களின் வாக்கியங்களைப் பார்க்கிலும் பிற்காலத்திலுள்ளவர்களின் வாக்கியங்கள் அதிக தெளிவானவைகளும் அதிகம் வெளிப்படையானவைகளுமா யிருக்கின்றன. ஆகையால் அவர்கள் சரித்திராதாரத்தையே யிங்கு மூலமாய்க் கைக்கொண்டு பின்வருமவைகளை யெழுதுவாம்.

இக்கொள்ளைநோயானது நூதனவியாதியல்ல, புராதனவியாதியென்றே முன்கண்ட சரித்திரங்களினால் பூரணமாய் ருஜுவாகிறது.

ஸர்ஜான்மால்கம்கான் சரித்திரம், மூவஜ்ஜம் சரித்திரம், குல்ரவான் சரித்திரம் ஆகிய இக்கிரந்தங்களில் இக்கொள்ளை நோயைப்பற்றிப் பின்வருகிறவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை யாவன.

மத்திய ஏஷியாவில் தாமரஸ்தேஹ்பக்த் என்னும் அரசர்காலையில் ஒருகொள்ளைநோயுண்டானது, அதனால், எண்ணிறந்த ஜனங்கள் மாண்டார்கள். ஆனால் அக்காலிருந்த கிரந்தாசிரியர்கள் அந்தவியாதியின் லக்ஷணங்களொன்றையும் எழுதவேயில்லை. ஆனால் எண்ணிறந்த ஜனங்கள் மாண்டார்களென்ற

தனால் கொள்ளைநோய்களில் ஒரு வகையாயிருக்கலாம்; அல்லது ஒருவேளை இப்போதுண்டாயிருக்கிற கொள்ளைநோயாயுமிருக்கலாம். அதற்குக் காரணமாவது - அத்தேசத்தார்கள் அந்த நோய்க்கு அப்போது (மர்காமர்கி) எனப் பெயரிட்டார்கள். அவர்கள் பாஷை பார்ஸியானபடியால் (மர்க் மர்க்) என்பது சாவு சாவு என்றும் அதினின்றும் உண்டான (மர்காமர்கி) என்பது பெருஞ்சாவு அதாவது சாவுகொள்ளை யென அருத்தமாம். இன்னும் சிலரது அபிப்பிராயப்படி மஹாமாரி யென்னும் சமஸ்கிருத வார்த்தையே (மர்காமர்கி) என் றிரிந்ததென்பதாம். அத்தேசங்களில் இன்றும் இக்கொள்ளை நோய்க்கு (மர்காமர்கி) என்றும் மஹாமாரி யென்றும் வழங்கப்படுகிறதால் அப்போதுண்டான வியாதியானது இக்கொள்ளைநோயாயிருந்திருக்கலாமென நம்ப ஒருவகையேதுவிருக்கிறது.")

பிரபல யூநாநி சாஸ்திரியாகிய ராபஸ் என்பவர் தமது கிரந்தங்கொன்றில் இந்தக் கொள்ளைநோயைப்பற்றிப் பின்வருகிறபடி எழுதியுள்ளார்.

"அஜரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அதாவது (கிறிஸ்து) பிறந்த முன்னூறு வருஷங்களுக்கு முன்பு, மிஸ்ர் (Egypt), ஷாம், (Syria), லேபியா ஆகிய இந்தத் தேசங்களில் கொள்ளைநோயானது, அதிக மும்முரமாகப் பரவியிருந்தது. இதனால் பத்து லக்ஷம் ஜனங்கள் மாண்டார்கள். இதற்காதாரமாக, வேறு சில சரித்திராசிரியர்களும் இவ்விதமே சொல்கின்றார்கள்.")



அந்தகாரமான பூர்வகாலத்தில் கொள்ளைநோயுண்டாயிருந்ததாக எழுதப்பட்டிருப்பதை நாம் கவனித்தால், அது இப்போது இவ்விந்தியாவின் சிலபாகங்களில் நடமாடும் மஹாமாரிதானோ? அல்லது வேறேதேனும் ஒரு வகை கொள்ளை நோயா? என விசிதமாய்ப் புலப்படவில்லை. ஏனெனில்; ஒரு சரித்திராசிரியரேனும் அல்லது ஒரு பண்டிதரேனும் முன் உண்டான கொள்ளைநோயின் லக்ஷணங்கள் இன்னவென்றும், அது உண்டானதற்கும், பரவினதற்கும் காரணம் இன்னவென்றும் விபரமாய் எழுதவில்லை, அவ்விதம் விபரமாய் எழுதியிருந்தால்; இப்போது இவ்விந்தியாவிலிருக்கும் இக்கொள்ளைநோய்க்கும் அதற்கும் ஏதேனும் சம்பந்தமிருக்கிறதா? அல்லது ஒருவித சம்பந்தமுமில்லையா? வென நாம் யூகித்தறிய ஏதுவாகும். அப்படி அந்த வியாதியின் லக்ஷணம் முதலியவைகள் விபரமாய் எழுதப்படவில்லையாயினும் கொள்ளை நோயானது நூதன ரோகமென்றும் அது பூர்வத்தில் உண்டாகவேயில்லையென்றும் நம்பவும் ஒருவித காரணமுமில்லை. ஏனெனில், ராபஸ் பண்டிதர் சரித்திரம், பார்லிகம்கான் சரித்திரம், குஸ்ரவான் சரித்திரம், ஆகியவைகளில் சொல்லப்பட்டிருக்கும் கொள்ளைநோயானது உண்மையில் இந்த மஹாமாரியாயிருந்திருக்கலாம்.

இதனால் நாம் கிரகித்துச் சொல்லக்கூடியதாவது, பூர்வகாலத்தில் பெர்ஷியா, மேற்கு ஆபிரிகா, முதலிய தேசங்களானவை, இக்கொள்ளைநோயினின்றும் நீங்கியிருக்கவில்லையென்பதே.

கிறிஸ்து அதாவது இங்கிலீஷ் முதலாம், இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில், ஏதேனும் கொள்ளைநோயுண்டா யிருந்திருக்கலாம். ஆனால் அதன் விபரம் முதலியவைகள் யாதொரு சரித்திர மூலமாகவும் இதுவரையில் நமக்குப் புலப்படவில்லையாகையால் அவற்றைநீக்கி, ஆதாரமாயுள்ளநாலாம் நூற்றாண்டுதொடங்கியுண்டான கொள்ளைநோயைப் பற்றி யினி யெழுதுவாம்,

—※—

## இங்லீஷ் ௪-ம்- நூற்றாண்டு.

—※—

இந்த நூற்றாண்டில், பீவார் என்னும் தேசத்தில் இந்தக் கொள்ளைநோயானது கண்டு, மூரிராஜ புத்திரர்களின்பூண்டில்லாமல் நிர்மூலமாக்கி, ஊரைப்பாழாக்கினது. இக்கொள்ளைநோயுண்டாவதற்கு முன்பு, இரண்டு வருஷங்கள்வரையில் மழையில்லாமல் பஞ்சமுண்டா யிருந்தது. பிரபல்லியமான வஹார்பட்டன் என்னும் நகரம் இவ்வருஷத்தில்தான் இவ்வியாதியினால் நாசமானது.

—※—

## இங்கிலீஷ்-௫-ம்-நூற்றாண்டு.

—※—

இந்த நூற்றாண்டில் ஏதேனும் கொள்ளைநோ யுண்டானதென்றும் அல்லது அது உண்டாக வில்லையென்றும் நாம்கண்ட சரித்திரங்களில் ஒரு சங்கதியும் தெரியவில்லை.



## இங்கிலீஷ்-௬-ம்-நூற்றாண்டு.

—※—

இந்த நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில், ஜஸ்டீனன் அரசாட்சியில் அதிக பயங்கரமும், கொடூரமும் அசாத்தியமுமான கொள்ளைநோ யுண்டாகி, அந்தத் தேசத்தில் ஐம்பது வருஷம் வரையில் அதிக மும்முரமாய்ப் பரவிப் போராடிக்கொண்டு நின்றது. இது ஜஸ்டீனன் காலத்தில் உண்டான படியால் இதற்கு ஜஸ்டீனன் பிளேக் எனவும் ஒரு பெயர் வழங்கிற்று.

இங்கிலீஷ் 542-ம் ஆண்டில் மிஸ்ர் (எகிப்து) தேசத்திலுள்ள பலூஜியம் என்னும் நகரத்திலும் இந்நோய் உற்பத்தியாகி, அந்த எகிப்து (மிஸ்ர்) தேசமுழுவதும் பரவிவிட்டது.

இதே வருஷத்தில் அல்லது மறு வருஷத்தில் இக் கொள்ளை நோயானது கான்ஸ்டான்டி நோபில் பட்டணத்தை எட்டிப்பரவித் தொற்றினது. அதனால் அப்பட்டணத்தில் தினம் ஒன்றிற்குச் சராசரி ஆயிரக்கணக்கிற் கதிகமானஜனங்கள் மாண்டார்கள். தினம் பதினாயிரம் ஜனங்கள் மாண்டதாக சில சரித்திராசிரியர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இங்கிலீஷ் 543-ம்-ஆண்டில், இடலி (Italy) தேசத்தில் இக்கொள்ளை நோயினால் சிலமரணங்கள் நேரிட்டன.

இங்கிலீஷ் 516-ம்-ஆண்டில், கால் என்னும் இடத்தில் இக் கொள்ளைநோ யுண்டாகி யுலாவித் திரிந்தது.

இங்கிலீஷ் 560-ம்-ஆண்டில் இடலி தேசத்தில் இரண்டாமுறை இக்கொள்ளை நோயுண்டாயிற்று. இதனால் நேரிட்ட உயிர்க் கொள்ளையானது சரித்திர உலகத்தில் மறக்கத்தக்கதன்று.

இங்கிலீஷ் 571-ம்-ஆண்டில் அல்ஜீரியா நகரத்தில் இக் கொள்ளைநோயுண்டானது.

இங்கிலீஷ் 590-ம்-ஆண்டில், முன் அல்ஜீரியாவில் உண்டான இக் கொள்ளைநோயே மெதுவாய் சமுத்திரக் கரையோரமாய் நகர்ந்து பரவி யொரு பக்கம் (ரும்) துர்க்கிதேசத்து பெரியபட்டணங்களிலும், மறுபக்கம் எகிப்து வழியாய் ஆபிரிகாதுறைமுகப் பட்டணங்களிலும் குடிகொண்டு விர்த்தியடைந்தது.

—※—

## முஸ்லிம் பிளேக்.

—※—

தற்காலத்தில் இந்தியாவின் சிற்சில பாகங்களிற் பரவியிருக்கும் பிளேக் நோயானது பம்பாயில் ஆரம்பத்திற் கண்டபடியால் இதற்கு இப்போது அநேகரால் பம்பாய் பிளேக் அல்லது பம்பாய் நோயெனச் சொல்லப்படுவது போலவே முஸ்லிம்களின் (மகம்மதியர்களின்) அரசாட்சியிலுண்டான பிளேக் நோய்க்கு முஸ்லிம் பிளேக் என சரித்திராசிரியர்களினால் வழங்கப்பட்டிருப்பது போலவே நாமும் அந்த நாமகரணத்துடன் இக்கிரந்தத்தில் எழுதலாயினோம்.



இங்கிலீஷ் ஆறும் நூற்றாண்டின் கடைப்பாகத்திலிருந்து முஸ்லிம் பிளேக் ஆரம்பமாகின்றது. இந்தவிஷயத்தைச் சில ஆங்கிலேய சரித்திராசிரியர்கள் பெரும்பாலும் நன்றாய்க் கவனியாமலே விட்டுவிட்டார்களெனத் தெரியவருகிறது. ஆயினும் இந்த பிளேகானது, லோகசரித்திரமுதலியவைகள் பூரணமாய் எழுத ஆரம்பமானகாலத்தில் உண்டாயிருந்தபடியால், இதை அதிக நம்பிக்கையோடும், அதிக ஆதாரத்துடனும் எழுதுவது அதிக ஆவசியகம். இன்னும் இங்கிலீஷ் ஆறும் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரையில் இந்தக் கொள்ளைநோயானது சற்றேறக்குறையத்தொடர்ச்சியாய்நடந்தே வருவதாய் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. ஆயினும் இந்த நூற்றாண்டுகளிலும் சில வற்றிலும் இந்தக் கொள்ளைநோயுண்டாயிருந்ததாக ஒரு சரித்திரத்திலும் புலப்படாமலிருக்கிறது. ஆகையால் இக்கால சரித்திரத்தை யொழித்து, நமக்கு ஆதாரமாய்க் கிடைத்த கால சரித்திரத்தைமட்டும் இங்கெழுதுவோம். அவை யாவன:—

(ஷரபுன்னூறி யென்பவரின் குமாரர் யஹ்யா இவர் குமாரர் இமாம்முஹைதீன் அபூபக்ர் ஜக்கரியா என்பவர் இவர் மகாயன் தோந்து அபுஹஸன் என்பவரை யாதாரமாய்க்கொண்டு முஸ்லிம்கள் பிளேக் அஞ்செனச் சொல்கின்றார்; அவற்றுள்:—

## முஸ்லிம்-௧-ஆம் பிளேக்.

—※—

ஹிஜ்ரி - 6-ம் - ஆண்டில் (இங்கிலீஷ் 589-ம்-ஆண்டில்) மதாயன் நகரத்தில் இந்தக் கொள்ளைநோயுண்டாயிற்று. அதற்கு ஷேர்வியா பிளேக் எனச் சொல்லப்பட்டது. ஈரான் தேசத்தையாண்ட ஷேர்வியா அரசர்காலத்தி லுண்டானபடியால் இதற்கு இந்தப்பெயர் வழங்கப்பட்டது. இந்த பிளேகினால் இதர ஜாதியார்கள் மாண்டார்களேயொழிய ஒரு முஸ்லிமும் (மகம்மதியரும்) மரண மடையவில்லை. இதுவே இதில் ஒரு விசேஷம்.

—※—

## முஸ்லிம்-௨-ஆம் பிளேக்.

—※—

ஹிஜ்ரி-17-ம்-அல்லது 18-ம்- ஆண்டில் (இங்கிலீஷ் 600-ம்-அல்லது 601-ம்-ஆண்டில்) உம்வாஸ் என்னும் நகரத்தில் இந்த பிளேக் உண்டாயிற்று. அந் நகரத்தில் இது ஆரம்பமானபடியால் இதற்கு உம்வாஸ் பிளேக் எனப் பெயர் வழங்கப்பட்டது.

இரண்டாவது கலீபா (Caliph) ஆகிய அஜாத் அமீருல் முமினீன் உமர் றளி யல்லாஹு அன்கு அவர்கள் அரசாட்சியில், இக் கொள்ளைநோயானது ஷாம் தேசத்தில் அதிக கொரேத்துடன் பரவியிருந்தது. ஆனால் இந்தச் சமாசாரம் மதீன நகரத்திற் கெட்டாததற்கு முன்பே, கலீபா அவர்கள், ஷாம் தேசத்தை வெற்றிபெற தம் சேனைகளை



அனுப்பியிருந்தார்கள். இந்தக் கொள்ளைநோயால் (25) அல்லது (30) ஆயிரம் ஜனங்கள் மவுத்தானார்கள், (மரணமடைந்தார்கள்). அஸ்காபி மார்களில், (தோழர்களில்) அபூ உபைதா பின்னுல் ஜராஹ (றளி), மஆஜ் பின் ஜபல் (றளி), ஷுர்கபில் பின் ஹஸ்னா (றளி), பஜல்பின் அப்பாஸ் அபூமாலிக் அஷ்அரி (றளி), யஜீத் பின் சுபியான் (றளி), இவர் (மாவியாவின் சகோதரர்); ஹாரிஸ்பின் ஹாஷஷாப் (றளி), (இவர் அபூஜஹல் சகோதரர்), இத்தனை பெயர்கள் (மிகலத்துச் செய்தார்கள்) மரணமடைந்தார்கள்.

இமாம் யாபிஈ அவர்கள் தம்முடைய மிர்ஆதுல்ஜினான் என்னும் கிதாபில் (கிரந்தத்தில்) இதைப் பற்றி சற்று விரிவாய் எழுதியிருக்கிறார்.

—※—

## முஸ்லிம்-௩-ம்-பிளேக்.

—※—

இப்னுஜுபைர் (றளி) அவர்கள் காலத்தில் பஸ்ராநகரத்தில் இக்கொள்ளை நோயானது ஆரம்ப மானது. இப்னுகஸீர்சொல்கிறார், இந்தக்கொள்ளை நோயினால் பஸ்ராபட்டணத்திலும் (அதைச் சார்ந்த ஊர்களிலும்) முதல்நாள்-70-ஆயிரம் ஜனங்களும், இரண்டாம் நாள்-71-ஆயிர ஜனங்களும், மூன்றாம் நாள்-72-ஆயிரம் ஜனங்களும் மாண்டார்கள். வேறு சில சரித்திராசிரியர்கள் இக்கொள்ளை நோயினாலுண்டான மொத்தமரண அறிக்கைக் கணக்கை-௩-லக்ஷம் எனக் குறித்திருக்கின்றார்கள்.

இந்த வியாதியினாலேயே அஜரத் அனஸ் பின் மாலிக் அவர்களின் சந்ததியில்-3-அல்லது - 83 பெயர்கள் மரித்தார்கள்.

இந்த வியாதியிலேயே அஜரத் அப்துர்றகுமான் பின் அபீபக்ர் அவர்கள்சந்ததியில்-40-பாலர்கள் மறுலோகம் சேர்ந்தார்கள்.

இந்தக் கொள்ளைநோயில் இறந்த புதுக்கலியாணப்பெண்களின் தொகைமாத்திரம்-20-ஆயிரம் என வேறுசில சரித்திராசியர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இன்னும் பின்வரும் விஷயங்களால் இக்கொள்ளை நோயின் கொடுமை இவ்வளவென்பது நன்கு புலப்படும். அவை பின் வருகிற விதமாம்.

அந்தப் பெரும் பட்டணத்தில் வெள்ளிக்கிழமை ஜும்ஆவில் (ஜாமிஉ மஸ்ஜிதில்) இப்னு அமீர் அவர்கள் மின்பரில்நின்று பார்த்தபோது,ஏழு மனிதர்கள், ஒருஸ்திரீ ஆகியஇவர்கள் மாத்திரம் மஸ்ஜிதிலிருந்தார்கள். (இந்தச் சமயத்தில் இங்கு சாதாரணமாய்10-12-ஆயிரம்சனங்கள் கூடுவதுவழக்கம்.)

மையத்துகளை(பிரேதங்களை)க்கொண்டுபோக மனிதர்களில்லாமையால் அடக்கஞ்செய்வது அதிக கஷ்டமாயிருந்தது.

பஸ்ராநகரத்து அமீரின் (அதிபதியின்) தாயாரவர்களின் (மையத்தை) பிரேதத்தைக் கொண்டுபோக ஒருவரும் அகப்படவில்லையென்றால் மற்றவர்களின் கதி யென்னவென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ.



தற்காலத்திலும் பம்பாயில் இக்கொள்ளைநோயினால் இறந்த ஒரு பிரேதத்தைக் கொண்டுபோக ஒருவரும் அகப்படாததினால் சிலஸ்திரீகள் சுமந்து போனதாகப் பத்திரிகைகளில் வாசித்திருப்பதை மது நண்பர்களில் அனேகர் ஞாபகம் வைத்திருக்கலாம்.

சரித்திராசியர்கள் இந்த பிளேகிற்கு (தாஊனுல் ஜாரிப்) எனப் பெயரிட்டிருக்கிறார்கள். இதன் தாத்பரியம் அருந்தயாவும் நிர்மூல பிளேக் என்பதே.

— ❊—

## முஸ்லிம்கள்-ச-ஆம் பிளேக்

— ❊ —

ஹிஜ்ரி-87-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் - 670 - ஆம் ஆண்டில்) பஸ்ரா, வாஸித், கூபா, ஷாம், ஆகிய இத்தேசங்களில் இக் கொள்ளை நோயுண்டாயிற்று. இதற்கு தாஊனுல் பதயாத் (குமரிபிளேக்) எனப் பெயரிடப்பட்டது. பதயாத் என்பது குமரி, யௌவனஸ்திரீ. இக் கொள்ளை நோயினால் இறந்தவர்களுள் பெரும்பாலர் யௌவனஸ்திரீகளே.

இந்தச் சமயத்திலேயே மேற்கண்ட நகரங்களைத் தவிர வேறுசில விடங்களிலும் இக் கொள்ளை நோயுண்டாயிற்று. இதனால் பெரும்பாலும் மேன்மக்களே மாண்டார்கள். ஆகையால் அதற்குதாஊனுல் அஷ்ராப் (கனஜன பிளேக்) எனப்பெயரிடப்பட்டது. ஆனால் இந்த (பிளேக்) நோயைப்பற்றி அதிக விபரமொன்றும் தெரியவில்லை. ஒரு சரித்

திராசிரியரேனும் இந்தக் கொள்ளை நோயின் மரணத்தொகையையும் எழுதவில்லை.

குமரி பிளேகிற்குப்பின், அந்தத் தேசங்களிலேயே மறுபடியும் அக்கொள்ளைநோய் கண்டது. அதன் பெயர்தான் சுஜ்ஜன பிளேக் எனப் பெயரிடப் பட்டதென இரண்டொரு சரித்திராசிரியர்கள் மாத்திரம் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையானால்; முஸ்லிம்கள் பிளேக் அஞ்சிற்குப்பதிலாய் ஆறாகக் கணக்கிடவேண்டியதா யிருக்கும்.

—※—

## முஸ்லிம்கள்-௫-ஆம் பிளேக்.

—※—

ஹிஜ்ரி-131-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் - 714 - ஆம் ஆண்டில்) இக் கொள்ளை நோயானது அவ்வருஷத்தின்-7-ஆம் மாதம் ஆரம்பித்து 10-ஆம் மாதம் தணிந்துவிட்டது. இந்த-4-மாதங்களும் நாளொன்றிற்கு சராசரி ஆயிரம்பெயர்கள் இக்கொள்ளை நோயினால் மாண்டார்கள். இந்த நோயினாலேயே இஸ்ஹாக்பின் ஸுவீதுல்அதவி, பர்கத்பின் யாகூபுல்ஸயிதி, அய்யூபுஸ்ஸக்தியானி முதலிய பெரியோர்களும் பரலோகம் சேர்ந்தார்கள். இக் கொள்ளை நோய்க்கு, சரித்திராசிரியர்களினால் (தாஊனே முஸ்லிம்இப்னு உத்பா) எனப்பெயரிடப் பட்டிருக்கின்றது. இதன் காரணம், உத்பாவின் குமாரராகிய முஸ்லிமென்னும் ஒரு பிரபல்லிய கனவானவர் இதனால் இறந்தார். அவர் பெயர் அறிகுறியாய் இக் கொள்ளைநோய்க்கு வழங்கப்பட்டிருக்கின்றது.



## முஸ்லிம்கள் வேறு சில பிளேக்.

—※—

முன் சொல்லப்பட்ட ஐந்து பிளேக்குகளும் முஸ்லிம்கள் (முகம்மதியர்கள்) அரசாங்கத்தில் சம்பவித்தவைகளுள் பிரபல்லியமானவைகளும் அதிக முக்கியமானவைகளுமாம். இவையன்றி வேறனேகமும் சம்பவித்தன. அவற்றுள்ளும் சற்று முக்கியமானவைகளை மாத்திரம் இங்கெழுதுவாம்.

இப்னு ஹஜர் என்பவர் பின் வருகிறவிதமாய் எழுதியிருக்கிறார்

முஸ்லிம்கள்-3-வது பிளேக் ஆகிய நிர்மூலபிளேகிற்குமுன், ஹிஜ்ரி-49-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் 632 - ஆம் ஆண்டில்) இக்கொள்ளை நோயானது கூபாவில் குடி கொண்டிருந்தது. முகையறு பின் ஷுஃபா என்பவர், இதற்குப்பயந்து அவ்வூரைவிட்டோடிப் போனார். பின்பு அது தணிந்தபின் ஊருக்குள் பிரவேசித்தார்; தக்ஷணமே அந்த வியாதியுண்டாகியே பரலோக பிராப்தியடைந்தார்.

### குறிப்பு.

அவ்விடத்தில் அப்போது கொள்ளை நோய் தணிந்தும் மற்றவர்கள் மரணமடையாதிருந்தும் இவர் அங்குவந்தவுடன் அந்த வியாதி தொற்றுவதற்குக் காரணமாவது, அந்த வியாதியானது தணிந்து போனதினால் அதன் விஷ உக்கிரங் குறைந்து போனதுமன்றி, அங்குள்ளவர்கள் சுபாவமும் அந்த விஷகுணத்தைச் சகித்துக்கொள்ள பழக்கமாகிவிட்டபடியால் அவர்களுக்கு அபாயம்நேரிட வழியில்

லாமலிருந்தது. இவர் அந்த ஊரைவிட்டு நீங்கிவிட்டபடியால் மேற்கண்ட பழக்க சுபாவமில்லாமல் குறைந்தஅளவாகவும்அந்நோயின்விஷதருமத்தைச் சகிக்கக்கூடாதவராயிருந்தார். ஆகையால் இவரையுடனே யது தொற்றினது என்பதே. இதனால் நாம் கிரகிக்கத்தக்க ஒரு முக்கிய அம்சமுளது. அது யாதெனில்மஹாமாரிப்பால் குத்திக்கொள்வதினால் (Inocculation)செய்துகொள்வதனால்நமது சுபாவம் கிரமேணுவாய் அந்த விஷத்தைச் சகிக்கப் பழக்கப்பட்டு, முடிவாய் அந்தவியாதி நம்மைத் தொற்றுமலிருக்கவே ஏதுவாக்கி விடுகிறது என்பதை நாம் நன்றாய் தெரிந்து கொள்ளலாம் என்பதே.

ஹிஜ்ரி 53-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் 636-ஆம் ஆண்டில்) கூபாதேசத்தில் இக்கொள்ளைநோயுண்டாயிற்று. இதில் ஐய்யாத் இப்னு அபீசுப்யான் மவுத்தானார். (இவர் பிரபல்லியமானவர்களிலொருவர்.)

ஹிஜ்ரி 127-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் 710-ஆம் ஆண்டில்) பஸ்ர நகரத்தில் இக்கொள்ளைநோயுண்டாயிற்று. இதற்கு தாஊனே ஙிர்ருப் (காகபிளேக்) எனப்பெயர் வைக்கப்பட்டது.

ஹிஜ்ரி 134-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் 717 ஆம் ஆண்டில்) ரை என்னும் தேசத்தில் இந்த நோயானது அதிக கொடூரமாயுண்டாயிருந்தது.

ஹிஜ்ரி 146-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் 729-ஆம் ஆண்டில்) பக்தாத் (Bagdad) பட்டணத்தில் இத்துஷ்டநோயுண்டாகி, அதனால் அனேகர் மாண்டார்கள்.



ஹிஜ்ரி 221-ஆம் ஆண்டில், (இங்கிலீஷ் 804-ஆம் ஆண்டில்) பஸ்ராநகரத்தில் இந்த மகாநோயானது மூன்றுந்தடவை கண்டது.

ஹிஜ்ரி 249-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் சுமார் 832-ஆம் ஆண்டில் இராக்தேசத்தில் இந்தக்கொடுநோயுண்டாயிற்று.

ஹிஜ்ரி 288-ஆம் ஆண்டில் (இங்லீஷ சுமார் 871-ஆம் ஆண்டில்) ஆஜர்பேஜான், பரூஆ, ஆகிய இத்தேசங்களில் இந்தக் கடுநோயுண்டாயிற்று இதனால் முகம்மத் ஸய்யாதும் என்பவரின், 80 சந்ததிகளிறந்தார்கள்.

ஹிஜ். 299-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் சுமார் 682-ஆம் ஆண்டில்) பாரஸ்தேசத்தில் இத்துஷ்டநோயுண்டாயிற்று. அந்தவூர் (காஜி) மாஜிஸ்டிரேட் (Magistrate) ஒருவிடத்திற்குப்போக அவசரமாய் ஒருகாலுரையைப் போட்டு, மறுகாலுரையைப் போடுவதற்குமுன், இந்தவியாதி திடீரெனக் கண்டு தக்ஷணமே மரணமடைந்தார்.

ஹிஜ்ரி 406-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ்சுமார் 989-ஆம் ஆண்டில்) பஸராதேசத்தில் இந்த அதீத நோயானது நாலாம்தடவை கண்டது.

ஹிஜ்ரி 423-ஆம் ஆண்டில் (இங்கிலீஷ் சுமார் 1006-ஆம் ஆண்டில்) இந்தியா, அஜம் மலைநாடுகள், முதலிய விடங்களில் இக்கொள்ளை நோயானது ஆரம்பமாகி, பக்தாத் (Bagdad) வரையில் பரவினது இது முன்னுண்டானவைகளிலெல்லாம் மிகப் பெரிது. இதே காலத்தில் மூஸல்நகரத்தில் நாலாயிரம் பாலர்கள் அம்மையினு இறந்தார்கள்.

ஹிஜ்ரி 749 - ஆம் ஆண்டு (இங்கிலீஷ் சுமார் 1348-ஆம் ஆண்டில்) பலதேசங்களிலும் இக்கொள்ளை நோயான துண்டாயிற்று. உலகத்தில் இதைப் போல எப்போதும் கொள்ளை நோய் உண்டானதில்லை. இந்த அதிக்கிரம நோயானது பெருமை தங்கிய மக்காநகரத்திலு முண்டாயிற்று. இந்நோயானது உலகத்திலுள்ளவர்களைக் கீழ்மேலாக்கி விட்டது. மனிதர்களைக் கொண்டுபோனதுமல்லாமல், மாடு, ஆடு முதலிய ஜந்துக்களையும் பாக்கியாய் விட்டுப் போகவில்லை. இப்னு அபீஹஜலா வென்னும் சரித்திராசிரியரானவர், இந்த நோயானது மேற்குக் கண்டங்களிலுள்ளவர்களில் அரைவாசிக்கதிகமான ஜனங்களை யொழித்துவிட்டதெனச் சொல்கின்றார்.

இங்கிலீஷ் சரித்திராசிரியர்கள் இந்தக்கொள்ளை நோயை பிளாக்டெத் (Black death) கருமரணம் என நாமகரண மிட்டிருக்கின்றார்கள். இந்த நோயானது பிரதமத்தில் சீனதேசத்தில் உற்பத்தியானதென இங்கிலீஷ் 14-ம் நூற்றாண்டு சரித்திராசிரியர்களுள் பெரும்பாலார் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்கு ஆதாரமாக, சீனர்களின் பூர்வசரித்திரங்களில், 1,30,00,000 ஜனங்கள் கொள்ளைநோயினால் மாண்டிருக்கின்றார்களெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த விஷயம் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவே காணப்படுகிறது. ஏனெனில் இது சீனதேசத்தில் ஆரம்பமாகி, ஆர்மீனியாவழியாய், ஏஷியாமைனரில் பிரவேசித்து, அங்கிருந்து எகிப்து, மேற்கு ஆபிரிகாவாகிய இவ்விடங்களில் பரவினது என்பதே. இக் கொள்ளை நோயானது சற்றேறக்குறைய ஐரோப்பா முழுவதும் ஒருகை பார்த்தேவிட்டது.



ஐரோப்பிய டாக்டர்கள் சொல்லியிருக்கும் இக் கொள்ளைநோயின் லக்ஷணங்களிலும், கீழ்த் திசையிலுண்டான இக்கொள்ளை நோயின் லக்ஷணங்களிலும் சில பேதமுண்டு. ஆயினும் சரித்திராசிரியர்கள் பிளாக்டெத் (கருமரணம்) என்று சொன்ன இந்தக் கொள்ளைநோயின் சம்பந்தமே யது என்பதில் ஒருவித சந்தேகமுமில்லை.

ஒரு சரித்திராசிரியர், இக்கொள்ளை நோயினால் முக்கால்வாசி ஜனத்தொகை மாண்டதெனச் சொல்கின்றார். மற்றொருவர், ஐரோப்பா ஜனத்தொகையில் கால்வாசி அதாவது அத்தேச ஜனத்தொகை கணக்கின்படி 2½-கோடி ஜனங்கள் மாண்டார்களெனச் சொல்கின்றார்.

இந்த பிளாக்டெத் (Black death) கருமரணத்தைப்பற்றி யிங்கு விரிவாய் எழுதுவது மிகு உசிதமெனக் காணுகின்றபடியால் அதை யெழுதுவாம்.

—※—

## பிளேக்டெத் (Black death)

—※—

இங்கிலீஷ்-1346-ஆம் ஆண்டில் மகா உன்னதமான இக்கொள்ளை நோயானது, ஸிஸிலி, கான்ஸ்டான்டிநோபல், கிரீக், இடலி முதலிய தேசங்களிலும்.

1347 - ஆம் ஆண்டில் மார்ஸெலீஸிலும்.

1348 - ஆம் ஆண்டில் ஸ்பெயின் தேசத்திலும் உண்டானது. இடலிதேசத்தின் தென்பாகத்திலும், ஜெர்மனி தேசத்தின் கீழ்ப்பாகத்திலும், பாரிஸ்

நகரம் உள்பட பிரான்சு தேசத்துச் சில பாகங்களிலும்; இங்கிலாந்திலிருந்து மேற்றிசைப் பாகங்களிலும் இக் கொள்ளைநோயின் பிரஸ்தாபமுண்டு.

1349-ஆம் ஆண்டில் இக் கொள்ளை நோயானது மிட்லாண்ட தேசம்போய்ச் சேர்ந்தது.

முடிவாய்ச் சொல்லில், இக்கொள்ளை நோயானது ஒருவிடமிருந்து மறுவிடத்திற்குத் தாவித் தாவிக்கொண்டு 1357-ஆம் ஆண்டுவரையில் ஒவ்வொரு தேசமாய் உலாவிவந்தது.

மூன்றாவது எட்வர்ட் அரசர்காலத்தில் 1361-ஆம் ஆண்டுமுதல் 1368-ஆம் ஆண்டுவரையில் இக் கொள்ளையானது மடக்கி மடக்கி வருவதும் போவதுமாயிருந்தது.

இந்தக் கொள்ளைநோயே நகர்ந்தசைந்து ஐர்லாண்ட், ஸ்காட்லாண்ட், ஆகிய தேசங்களையும் எட்டிப் பார்த்துவிட்டே நீங்கினது.

—※—

## ௧௫-ஆம் நூற்றாண்டின் பிளேக்.

—※—

இந்தப் பதினைந்தாம் நூற்றாண்டில் மறுபடியும் ஐரோப்பாவில் இக் கொள்ளை நோயானது பேராட ஆரம்பித்தது.

1400-ஆம் ஆண்டுமுதல் 1446-ஆம் ஆண்டுவரையில், இடலி, ஸ்பெயின், ஜர்மனி, இங்கிலாந்து ஆகிய இத்தேசங்களில் இக் கொள்ளை நோயானது அதிக சாமர்த்தியத்தோடு வேலைபார்த்து வந்தது.



1438-ஆம் ஆண்டிலும் 1439-ஆம் ஆண்டிலும் இக் கொள்ளை நோயானது ஜர்மனி தேசத்தில் அநியாயம்செய்ய ஆரம்பித்தது.

1447-ஆம் ஆண்டில் டான்ட்ஜக், அதைச் சார்ந்த சுற்றுப்பக்கங்கள் ஆகிய இவ்விடங்களில், இந்தப் பாழ்நோயானது கண்டு, இதினால் எண்பதினாயிரம் பெயர்கள் மாண்டார்கள்.

1447-ஆம் ஆண்டிலும், 1450-ஆம் ஆண்டிலும், இடலிதேசத்திலுள்ள கர்சன் என்னும் நகரத்தை இக் கொள்ளை நோயானது சூறையாடிவந்தது. ஜர்மனி, பிரான்சு ஆகிய தேசங்களையும் பாழாக்கினது.

1466-ஆம் ஆண்டில் இக்கொள்ளை நோயானது பாரிஸ் நகரத்தில் புகுந்து அந்த நகரவாசிகளில் நாற்பதினாயிரம் பெயர்களைக் கொண்டுபோய் விட்டது.

1477-ஆம் ஆண்டிலிருந்து 1485-ஆம் ஆண்டுவரையில் இடலிதேசத்தின் கீழ்த்திசையிலுள்ளவர்களை இக்கொள்ளைநோயானது மண்ணிற் கிடாக்கினது.

1475-ஆம் ஆண்டில் இக்கொடிய நோயானது பாரிஸ் நகரத்தையும் பாழாக்கினது.

1499-ஆம் ஆண்டிலும், 1500-ஆம் ஆண்டிலும் இக் கொள்ளை நோயானது லண்டன் நகரில் சண்டாளனைப்போலண்டியதை முண்டஞ்செய்ய ஆரம்பித்தது. இந்தச் சமயமானது ஏழாவது ஹென்றி அரசரின் அரசாட்சியின் பதினைஞ்சாம் ஆண்டெனச் சொல்லப்படுகிறது. இந்த அரசர் இக் கொ

ள்ளைநோயின் கொடுமையைப்பார்க்க வரமற்றவராய் கர்கிலாஸ் என்னும் இடத்திற்குப் போக நேரிட்டது.

இந்த இந்தியாவில் ஷிபர்ஷா அரசரின் காலத்திலுண்டான கொள்ளைநோயும் இந்த நூற்றாண்டில் சம்பந்தப்பட்டிருக்கிறது. சரித்திரத்தில் இந்தவிடத்தில் ஒரு நூதன சம்பவம் நடந்ததாய் சொல்லப்பட்டிருக்கின்றது. அது பின் வருகிற விதமாம். ஷியர்ஷா அரசரானவர், ஒரு பகிரையேதோ குற்றத்திற்காகத் தண்டித்தார். அந்த பகீர் அப்போது கொள்ளைநோய்க் குள்ப்பட்டிருந்தார். அவருக்கிட்டவிலங்கு இக் கொள்ளைக்கட்டியில் பட்டு அதிக வேதனை யுண்டானபடியால் அதை சகிக்க சக்தியில்லாதவராய் உயிர் துறந்தார். அது மூலமாய் அப்போது இக் கொள்ளைநோய் பரவினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது

—*—

## கஎ-ஆம் நூற்றாண்டின் பிளேக்

—*—

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இக் கொள்ளை மகாராஜன் சீனதேசத்திலிருந்து விஜயம் செய்தனன். இந்த நூற்றாண்டின் முந்திய தசாம்சத்தில், ஜர்மனி, ஹாலண்டு, ஸ்பேயின்முதலிய தேசங்களில் தன் அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்தான். இந்த நூற்றாண்டின் மத்தியபாகம் வரையில் கிரமேணுவாய் தன் அதிகாரத்தை விர்த்தி செய்துவந்தான். சிலசமயம் எடிம்பரா தேசத்திற்



செல்வதும் சிலசமயம் லண்டனிலும், இங்கிலாந்தின் தென் பாகங்களிலும் தோன்றுகிறதுமாயிருந்தான்.

இந்த நூற்றாண்டின் கொள்ளைநோயில் 1563-ஆம் ஆண்டிலிருந்து 1564-ஆம் ஆண்டுவரையில் லண்டன் நகரத்திலுண்டாயிருந்ததே அதிகப் பிரபல்லியமானது. ஏனெனில் இதனால் அந்த நகரத்தில் ஒவ்வொரு வாரத்திலும் ஆயிரமாயிரம் ஜனங்கள் மரணமடைந்தே.

பாரிஸ் நகரத்திலுள்ளவர்கள் அப்போது அடிக்கடி அந்த வியாதிக்குட்பட வழமையாகிவிட்டபடியால் அவர்களுக்கு அந்தநோயானது சாதாரண ஜலதோஷம்போலாயிருந்தது.

1570-ஆம் ஆண்டில் மாஸ்கோநகரத்திலுள்ளவர்களில் இரண்டு லக்ஷம்பெயர்கள் இக் கொள்ளைநோய்க்கு காணிக்கையானார்கள்.

1574-ஆம் ஆண்டிலும் 1575-ஆம் ஆண்டிலும், லாயின்ஸ், எடிம்பரா, நியூகாஸல் ஆகிய இந்த நகரங்களில் இக்கொள்ளைநோயானது பிரசன்னமாயிருந்தது,

1576-ஆம் ஆண்டில் வெனிஸ் நகரத்தில் இந்த வியாதியானது அதிக பயங்கரத்தை யுண்டாக்கினது. இதனால் எழுபதினாயிரம் ஜனங்கள் சேதமானார்கள். இவ்விதமாகவே வட ஐரோப்பாவிலுள்ளவர்கள் மரணக்கலக்கைப் பங்கிட்டுக்கொண்டார்கள்.

1580-ஆம் ஆண்டிலிருந்து 1595-ஆம் ஆண்டு வரையில் இக்கொள்ளை நோயானது மிகவும் குறைந்த அளவா யடங்கின்றது.

இவ்விதமே 1592-ஆம் ஆண்டிலும், 15[illegible]-ஆம் ஆண்டிலும், லண்டன் நகரத்தில் இக்கொள்ளை நோயின் பிரஸ்தாபமுங் குறைவாயிருந்தது.

இந்தச் சமயத்தில் தான் இந்தியாவின் அனேக பாகங்களில் இக்கொள்ளைநோயானது அதிக மும்மரமாயிருந்தது. பிரதமத்தில் இது பஞ்சாப்தேசத்திலிருந்து ஆரம்பமானதாக உத்தேசிக்கப்படுகிறது. இதனால் லாகூரில் அனேகர் மாண்டார்கள். அங்கிருந்து கீழ்த்திசையாய் தில்லிமுதலிய விடங்களிற் பரவி, அவற்றை நாசப்படுத்தினது.

இந்த நூற்றாண்டை மற்ற நூற்றாண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இதில் அந்தநோயானது அதிகங் கடினமாயிருந்ததாகத் தோற்றவில்லை.

இந்த நூற்றாண்டும் இக்கொள்ளை நோயின் போராட்டத்தை விட்டொழியவில்லை. இந்த நூற்றாண்டில் தான் இந்தியாவில் இக்கொள்ளை நோயானது தன்தொழிலாகிய பிராண நாச உத்தியோகத்தைச் செய்தது. ஆக்ரா நகரத்தில் அனேக வருஷம் வரையில் இக் கொள்ளையினால் ஆயிரமாயிரம் ஜனங்கள் மாண்டார்கள்.

ஜஹாங்கீர் சக்கரவர்த்தி யானவர் தன் தஜக் புத்தகத்தில் குறித்து வைத்திருப்பது பின் வரும் விதமாம். தற்காலத்தில் ஆக்ராவில் கொள்ளைநோய் பரவி நிற்கிறது. நாள்தோறும் சற்றேறக்குறைய



நூறு பெயர்கள் இதனால் மாள்கிறார்கள். கக்கம், கவட்டி, பிடரியின் முன்பாகம், ஆகியஸ்தானங்களில் கட்டிகளுண்டாகின்றன. இந்த வியாதியானது இங்கு மூன்று வருஷகாலமாய் வரிசைக்கிரமமாய் மழைகாலத்தில் மும்மரமாகிறதும், கோடைகால ஆரம்பத்தில் மறைந்து விடுகிறதுமா யிருக்கிறது.)

1603-ஆம் ஆண்டில் முதலாம் ஜேம்ஸ் அரசர் ஆளுகையில் லண்டனிலுள்ளவர்களில் -28- ஆயிரம் ஜனங்கள் இக் கொள்ளை நோய்க்கு ஆளானார்கள்.

இதே காலத்திலேயே இக்கொள்ளை நோயினாலேயே எகிப்து தேசத்திலுள்ளவர்களில் -10-லக்ஷம் ஜனங்கள் மாண்டார்கள்.

இந்த பிளேகானது லண்டனில் அநேக வருஷங்குடி கொண்டிருந்தது,

1609-ஆம் ஆண்டில் இதற்கு ஒரு மூர்க்கமுண்டாயிற்று. அப்பொழுது-11-ஆயிரம் ஜனங்கள் மாண்டதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது.

1640-ஆம் ஆண்டிற்குப்பின் இந்த பிளேக் வியாதியானது ஐரோப்பாவின் வடபாகத்திற் பரவிக் கொண்டு நின்றது.

1645-ஆம் ஆண்டில், லண்டன் ஜனத்தொகைக் கணக்கில் இந்த பிளேகானது -35470-ஜனங்களைக் குறைத்தது.

1630-ஆம் ஆண்டில் மிலனிலும், 1632-ஆம் ஆண்டில் டார்பைஷிரிலும், இதே வருஷத்தில்

மறுபடியும் லண்டனிலும் இந்த விபத்து உண்டாயிற்று. இந்த வருஷத்திலும் இதற்கடுத்த வருஷத்திலும் லண்டன் நகரத்தில் மாத்திரம் - 13482 - ஜனங்கள் மாண்டார்கள்.

1636 - ஆம் ஆண்டில் இந்த பிளேகினால் நியூகாஸலிலிருந்த - 20 - ஆயிரம் ஜனங்களில்-7-ஆயிரம் பெயர்கள் ஒழிந்தார்கள்.

1635 - ஆம் ஆண்டு முதல்-1637-ஆம் ஆண்டு வரையில். ஹல், ஹாலண்ட், நியூமார்க்யூன் ஆகிய விடங்களில் இக்கொள்ளை நோயானது பரவிநின்றது.

1647-ஆம் ஆண்டில் லண்டன் நகரத்தில் மறுபடியும் இதன் போராட்டம் உண்டாயிற்று.

1650 - ஆம் ஆண்டில் விஷஉபாவமும் ஜீவநாசகரமுமுள்ள இத்துஷ்ட நோயானது ஐர்லாந்து தேசத்தில் விஜயம் செய்தது. இந்த நூற்றாண்டின் கொள்ளை நோயில் - 1656 - ஆம் ஆண்டு நேபில்ஸ் நகரத்தில் கண்டதே யெல்லாவற்றிலும் அதிகக் கொடுமையானது. ஐந்து மாதங்களுக்குள் அதனால் மாண்டவர்கள் மூன்று லக்ஷம் பேர்கள் அங்கிருந்து (நாம்) துருக்கி தேசத்தில் பரவினது. அவ்விடத்தில் இந்தக் கொடிய நோய் பரவாமல் தடுக்க பற்பலவித சுகாதாரத்திற்குரிய ஏற்பாடுகள் செய்தும் - 14 - ஆயிரம் ஜனங்கள் மாண்டார்கள்.

ஜினோவாவில் இக்கொள்ளை நோயினாலேயே - 60 - ஆயிரம் ஜனங்கள் மாண்டார்கள். மைனார்கோ நகரமோ இதனால் பூண்டற்று விட்டது.



இதற்குச் சிலவருஷங்களுக்குப்பின், ஸ்பேயின், ஜர்மனி, ஹாலண்ட், ஆகிய விடங்களில் இக்கொள்ளை நோயானது பரவினது. ஹாலண்டு தேசத்திலுள்ள டேரும் நகரில் இதனால் 50-ஆயிரம் ஜனங்கள் மாண்டார்கள் எனச்சில சரித்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

1664-ம்-ஆண்டில் ஹாம்பர்க் நகரமானது இக்கொள்ளைநோயின் கண்ணியில் அகப்பட்டுக்கொண்டது.

இவ்விதம் ஐரோப்பாவில் அங்கு மிங்குமாய் ஒவ்வொரு நூற்றாண்டிலும் அடிக்கடி கொள்ளை நோயானது பிடித்து வந்தது. ஆயினும் லண்டன் நகரத்திலே இக்கொள்ளை நோயின் வாசம் அதிகமெனச் சொல்லவேண்டும். இந்தப் பதினேழாம் நூற்றாண்டின் முற்பாதியிலேயே இந்நகரத்திற்கு இக்கொள்ளை நோயினால் ஐந்து முறை அபாயம் நேரிட்டது.

1664-ம்-ஆண்டிலும் இந் நகரத்திற்கு ஒரு ஆபத்து நேரிட்டது. அதன் சங்கிரஹம் பின்வரும் விதமாம்:—இந்த வருஷத்திலும் இதற்கடுத்த வருஷாரம்பத்திலும் இக்கொள்ளைநோயின் மும்முரம் அவ்வளவாயில்லை. ஆனால் - 1665- ம்-ஆண்டு மே மாதத்திலிருந்து இந்த நோயானது விர்த்தியாக ஆரம்பித்தது எனினும், இந்த வருஷத்தில் லண்டன் நகரிலுள்ள ஜனங்களில்மூன்றிலிரண்டு பாகமாகிய 400,000 ஜனங்கள் பயத்தினால் இந்நகரைவிட்டோடிவிட்டார்கள். 68 ஆயி

ரத்திற் கதிகமான ஜனங்கள் இதற்கிரையானார்கள். இந்தவருஷம் டிசம்பர்மாதம் இந்த வியாதியானது தணிந்தொழிந்தது. உடனே முன்னோடினவர்களெல்லாம் திரும்பிவந்து, இந்த வியாதியஸ்தர்கள் வாசஞ்செய்த விடங்களிலேயே நிர்ப்பயமாய் வசித்து வந்தார்கள்.

இந்தக் காலத்திலே கலோன், ரயன், பிடர்லாண்டஸ், பிரான்ஸ் முதலிய விடங்களிலும் இக்கொள்ளை நோயானது நடமாடிவந்தது.

1665-ம்-ஆண்டுமுதல் 1684-ம் - ஆண்டுவரையில் மறுபடியும் ஆபிரிகா, துர்க்கி, பாலெண்ட், ஹங்கரி, ஆஸ்டிரியா, ஜர்மனி, ஆகிய இத்தேசங்களிலும் இக்கொள்ளை நோயானது பரவிநின்றது.

1665-ம்-ஆண்டில் மால்டாதீவில் . 11-ஆயிரம் ஜனங்களும்,

1679-ம்-ஆண்டில் வியன்னாவில் - 76-ஆயிரம் ஜனங்களும்,

1681-ம்-ஆண்டில் பர்குயூ நகரத்தில்-83-ஆயிரம் ஜனங்களும், மாக்டிபர்கிலும், ஹாலேயிலும், சற்றேறக்குறைய - 5 - ஆயிரம் ஜனங்களும் மாண்டார்கள்.

1681-ம்-ஆண்டுமுதல், ஸ்பேயினைவிட்டும்,

1683-ம்-ஆண்டுமுதல் ஜர்மனியைவிட்டும் இக்கொள்ளை நோயானது எவ்விடத்திற்கோ ஒழிந்து போனது.



ஆயினும் அந்த நூற்றாண்டு முடிவுவரையில் இக்கொள்ளை நோயானது இடலிதேசத்தில் குடியிருந்துவந்தது.

—*—

## 18-ஆம் நூற்றாண்டின் பிளேக்.

—*—

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், கான்ஸ்டாண்டி நோபிலிலும், தானூப் நதிக்கரை யோரங்களிலுள்ள ஊர்களிலும் இக்கொள்ளை நோய் கண்டு மூர்க்கமாயிருந்தது.

இந்தக்காலத்தில், இந்தியாவில் தக்ஷணத்திலும், பம்பாயிலும் இந்த நோயின் பிரபல்லியமுண்டாயிருந்ததாகத் தெரிய வருகிறது. ஏனெனில் கிராண்டப் துரையவர்கள் சரித்திர புத்தகத்தில் எழுதியிருக்கிறதாவது:—

இக்காலத்தில் அவ்ரங்க்ஜீப் சக்கரவர்த்தியானவர் மஹாராஷ்டிரர்களோடு யுத்தம்செய்துகொண்டிருந்தார். அந்தச் சமயம் வெகுநாளாய் குஜராத் தேசத்திலும், தக்ஷணத்திலும் கொள்ளை நோயானது குடிகொண்டிருந்தது. இந்த பிளேகானது மேற்படி சக்கரவர்த்தியின் சேனையில் பரவினபடியால் அந்தச் சேனையை பிஜாப்பூர்வழியாய் அக்லூஜ் நகரத்திற்குக் கொண்டுபோக நேரிட்டதென்பதே.

1703-ம் ஆண்டில் ஆக்ரேன் நகரமும், 1704-ம் ஆண்டில் பாலண்டு தேசமும் இக்கொள்ளை நோயினால் பாழானது.

பின்பு பிரஷ்ஷியா, சலீஷியா, ஹுானியா, ஜர்மனி, ஸ்கேண்டிநேவியா, ஆகிய இவ்விடங்களில் இக்கொள்ளை நோயானது பரவினது. பிரஷ்ஷியாவிலும், லதுானியாவிலும் - 283 000 - ஜனங்கள் இக்கொள்ளை நோய்க்குக் காணிக்கையானார்கள்.

1710 - ம் ஆண்டில் காபன்ஹெச்சன் பட்டணத்தில் இந்தக் கொள்ளை நோயினால் ஆபத்துநேர்ந்தது. ஸ்டாக்ஹால் நகரத்தில் இதன் கொடுமையினால் - 40 - ஆயிரம் ஜனங்கள் மாய்ந்தார்கள்.

இந்தச் சமயத்திலேதான் இக்கொள்ளை நோயானது தானியூப் நதிமூலமாய் மேற்குத்திசையில் டிராஸில் வீனு, ஸிரியா ஆகிய இத்தேசங்களிலும்,

1713-ம் ஆண்டில் ஆஸ்டிரியா, ஹமம்யா ஆகிய தேசங்களிலும் பரவினது.

1717 - ம் ஆண்டில் இத்துஷ்ட நோயானது கான்ஸ்டான்டிநோபல் நகரத்தைக் கொள்ளையடித்தது.

1720-ம் ஆண்டில் மார்ஸிலேஸ் நகரத்தில் எவ்வளவு கொடூரமாயிருந்ததென்றால், நடக்கிறபாதைகளில், அடக்கம் செய்வாரின்றி பிணக்காடாயிருந்ததாம்.

1722 - ம் ஆண்டுவரையில் இங்கு இந்த நோயின் மூர்க்கம் ஒடுங்கி யிருந்தது.

1721-ம் ஆண்டில் டோகன் தேசத்து ஜனத்தொகையில் மூன்றிலிரண்டு பங்கு ஜனங்கள் இக்கொள்ளை நோயினால் அழிந்தார்கள்.

1723-ம் ஆண்டில் இக்கொள்ளை நோயானது ஸிஸிலியில் உண்டாயிற்று. இதை யதிகமாய்க்



கவனிக்க வேண்டியது மிகவும் ஆவசியகமாயிருக்கிறது. ஏனெனில் இது இந்தக் கொள்ளை நோயானது தொற்றும் சுபாவமுடைய தென்பதற்கு ஒரு அத்தாக்ஷியா யிருக்கிறதுமன்றி, அதை நிச்சயப்படுத்தவும் ஆதாரமா யிருக்கின்றது. அது பின்வருகிற விதமாம்.

“ மீனு நகரத்திலுள்ளவர்கள் 1624-ம் ஆண்டு முதல் இக்கொள்ளை நோயானது தங்களைத் தொற்றாமல் காக்கப்பட்டு வந்தார்கள். தாங்கள் * குவாரன்டைன் சட்டத்தை யனுசரித்து வருவதினாலேயே தாங்கள் அந்தத்துஷ்டவியாதியினின்றும் தப்பித்துக் கொண்டிருப்பதாய்ப் பெருமையாராட்டி வந்தார்கள். கார்பூவிலிருந்து திடும்பிரவேசமாய் இவ்விடத்திற்கு ஒருகப்பல் வந்தது. அதில் இந்த நோயின் சந்தேகமுள்ள சில மரணங்கள் நேரிட்டன. ஆகையால் அந்தக்கப்பலை அதிலிருந்த சரக்குகளுடனே எரித்து அக்கினிக்கிரையாக்கி விட்டார்கள். அப்படிச் செய்தும் ஆஸ்பத்திரியிலும், அவ்வூர் ஏழைகளிலும் இந்தக் கொள்ளை நோயினால் சில மரணங்கள் நேரிட்டன. கோடைக்காலத்தில் பயங்கரமாக இதுவிசேஷம் பரவி, 40-அல்லது-50-ஆயிரம் ஜனங்கள் அக்கொள்ளை நோய்க்கு ஆளானார்கள்.”

### குறிப்பு.

இந்த வியாதி சம்பந்தமாய் சந்தேகப்படத்தக்க சிலர் ஆஸ்பத்திரியி லிருந்ததும், தொற்றுவி

* இச்சட்டமானது தொற்று வியாதிக்காரர் ஏறிச்சென்ற கப்பலைக்கரைக்குப் போக விடாமல் தடுத்தல்.

யாதி யுள்ள கப்பல் ஊருக்குச் சமீபமாய் வந்ததும் ஆகியஇவைகளே, அப்பெருவாரி நோயின் வாசனையே யில்லாமல் சுத்தமாயிருந்த அந்த நகரத்தில் இந்தத் துஷ்டநோய்ப் பரவக்காரணமாயிற்று என நமக்கு நன்றாய்ப் புலப்படுகின்றது.

1738-ம் ஆண்டு முதல்-1745-ம் ஆண்டுவரையில் ஆக்ரேயின், ஹங்கரி, கார்ன்வாலா நதிக்கரையோரங்கள் ஆகிய இவ்விடங்களில் இக் கொள்ளை நோயானது பரவிநின்றது. பின்பு பதினைந்து வருஷங்கள் வரையில் அங்கிருந்து நீங்கியொழிந்து நின்றது.

1755-ம் ஆண்டு முதல் 1757-ம் ஆண்டு வரையில் ஐரோப்பிய துருக்கி தேசத்திலும்.

1770-ம்-ஆண்டில் மால்திவாவிலும், இதற்குச் சிறிது காலத்திற்குப்பின் வலீஷியா, ஹங்கரி முதலிய விடங்களிலும், இக்கொள்ளை நோய் பரவிநின்றது, இந்தத் தேசங்களிலெல்லாம் இந்தப் பெருவாரிநோயினால் - 3 - கோடி ஜனங்கள் நஷ்டமானார்கள். 1771-ம்-ஆண்டில் இங்கு இதன்முடிவு உண்டாயிற்று.

1770-ம் ஆண்டில் இக்கொள்ளை நோயானது சின்ன ரஷ்ஷியாவையும் எட்டிப்பார்த்தது. அங்கு மெதுவாய்ப் பரவி, கய்ப் நகரத்தையொழித்தது.

1771-ம்-ஆண்டில் மாஸ்கோநகரத்திற்புகுந்து அங்குள்ள கால்வாசி ஜனங்களை மாய்த்தது.

1775-ம்-ஆண்டில் டிரான்ஸில்வானியா, சலோனிகா, லிவ்பியா, லஹூவினியா, ஆகிய இவ்விடங்களில் இக்கொள்ளை நோயானதுபரவிநின்றது.



1793-ம்-ஆண்டு முதல் 1800-ம்-ஆண்டுவரையில், ஷாம் (Syria) தேசத்திலும், எகிப்து தேசத்திலும், இக்கொள்ளை நோயானது நூதனமாய் ஆரம்பமாகிப் பரவி, அதன் மரணச்செயல் அதிகமும்மரமாயிருந்தது. அதன் கொடுமையை அப்போது அவ்விடங்களிலிருந்த, இங்கிலாந்து சேனை பிரான்சுசேனை ஆகிய இருவகை சேனைகளிலும்கூட இந்தக் கொள்ளைநோய்பரப்பி, அவற்றிற்கு நஷ்டம் உண்டாகச்செய்தது.

—※—

## ௧௯-ஆம்-நூற்றாண்டு பிளேக்.

—※—

1801-ம்-ஆண்டு பாக்தாத் தேசத்தில் இக்கொள்ளைநோயானது பரவி சஞ்சாரஞ்செய்து கொண்டிருந்தது. இதன் சம்பந்தமாய்ச் சொல்லப்பட்டிருப்பது பின்வருகிறவிதமாம். "1797-ம்-ஆண்டில், ஜிர்ஜியா, காப் ஆகிய விடங்களில்இந்நோய்பரவி. காப் வடபாகத்தின் மூலமாய் ரஷ்ஷியாவிலுள்ள ஆஸ்டிராகான் தேசத்தில் பிரவேசித்தது"

1802-ம்-ஆண்டுமுதல் 1803-ம்-ஆண்டு முடிவு வரையில் கான்ஸ்டான்டிநோப்பிலிலும், ஆர்மினியாவிலும், இக் கொள்ளைநோயிருந்தது.

1807-ம்-ஆண்டு ஜரீப் நகரஞ்சேர்ந்தது, காப், ஜார்ஜியா ஆகிய இவ்விடங்களில் 1819-ம் - ஆண்டு வரையில் இது நடமாடிக்கொண்டிருந்தது.

1808-ம்-ஆண்டில் இக்கொள்ளை நோயானது கான்ஸ்டான்டிநோபிளிலும்,

1809-ம்-ஆண்டில் ஸ்மர்ணாவிலும்,

1812-ம்-ஆண்டில், எகிப்து தேசத்திலும் இக்கொள்ளை நோயானது தலை காட்டிக்கொண்டு நின்றது.

1813-ம்-ஆண்டில் புகாரீஸ்த் நகரத்தில் இது பிரவேசித்தது. இதே சமயத்தில் போஸீனா வழியாய்,

1815-ம்-ஆண்டில் டால்முஷியா நகரத்திலும் இக்கொள்ளை நோயானது பிரசன்னமானது. இந்த ஆண்டிலேயே எகிப்து, ஐரோப்பாவின் சில பாகங்கள், போஸீனா, மால்டா, கார்பூ, ஆகிய இவ்விடங்களில் இக்கொள்ளைநோயுண்டாயிருந்தது.

1822-ம்-ஆண்டுமுதல் 1825-ம்-ஆண்டு வரையில் மச்கோயில்கொள்ளைநோயிருந்தது.

1827-ம்-ஆண்டில் கிரீக் தேசத்திலுள்ள மூரியாவிலுண்டாயிருந்தது.

1828-ம்-ஆண்டுமுதல் 1829-ம்-ஆண்டு முடிவு வரையில் இக்கொள்ளை நோயானது கிரிமியாவிலிருந்தது. துர்க்கிசேனையோடு யுத்தத்திற்குப்போன ரஷ்யசேனை மூலமாய் இது அங்கும்பரவினது.

1828-ம்-ஆண்டுமுதல் 1831-ம்-ஆண்டுவரையில் இக்கொள்ளை நோயானது ஆர்மீனியாவில் உண்டாயிருந்தது.

1831-ம்-ஆண்டில் கான்ஸ்டான்டி நோபிலையும், ருமேலியாவையும் இந்தப்பிளேக் தொடர்ந்தது.



1837-ம்-ஆண்டில் மறுபடியும் ருமேலியாவிலுள்ளவர்களும் உடல்ஸாவிலுள்ளவர்களும் இதனால் நாசமானார்கள்.

1840-ம்-ஆண்டில் டால்மேஷியாவில் இதனது போராட்டம் நேரிட்டது.

1840-ம்-ஆண்டுமுதல் 1844-ம்-ஆண்டுவரையில் ஆர்மீனியாவின்மீது இது ஒரு கையைவைத்துக்கொண்டே இருந்தது.

1841-ம்-ஆண்டில் கான்ஸ்டான்டி நோபிலிலும், இதே வருஷத்தில் எகிப்திலும், இதன் போராட்டம் நடந்தது.

1845-ம்-ஆண்டில் இதன்போராட்டம் குறைந்துவிட்டது.

1853-ம்-ஆண்டில் மேற்கு அரேபியாவின் ஜில்லாக்களிலும். யமன் (Arabia Felix) தேசத்திலுள்ள அஸீர் நகரத்திலும், இந்தப்பிளேக் நோயுண்டாயிற்று. இதற்குமுன் 1815-ம்-ஆண்டில் இந்த நகரத்திலும் வந்திருந்ததாம்.

1858-ம் ஆண்டில் பார்கா ஜில்லாவிலிருந்து கான்ஸ்டான்டி நோபிலில் கொள்ளைநோய் சமாசாரம் பரவினது.

1863-ம் ஆண்டில் நவம்பர் மாதம் பெர்ஷியாஸ்தேசத்து மாகே நகரத்தில் இக்கொள்ளை நோயானது வெளியானது.

1866-ம் ஆண்டில் பராத் நதிக்கரைகளில் படிந்த சேற்றின் மூலமாய் இந்த நோய் அவ்விடங்களிலுண்டாயிற்று.

1867-ம் ஆண்டு ஜுன் மாதம் மேற்படி நோய் மறைந்து போனது. இந்த நோயானது இங்கு அதிக மும்முரமாயிருக்கவில்லை.

1868-ம் ஆண்டுமுதல் ஆரம்பமான இக்கொள்ளைநோயானது 1873-ம் ஆண்டு ஜுன்மாதம் வரையில்சற்றேறக்குறைய-60-மயில்வரையில்பரவினது.

1874-ம் ஆண்டில் மேற்கு அரேபியாவின் ஜில்லாக்களிலும்யமனிலுள்ள(Arabia Felix)அஸீர் நகரத்திலும் உண்டாயிற்று.

1874-ம் ஆண்டில் நான்கு மாதம் வரையில் சிறப்பு பொருந்திய மக்கமா நகரத்தில் இது குறைந்த அளவாய் உண்டாயிருந்தது.

1876-ம் ஆண்டு முதல்-1877-ம் ஆண்டு வரையில் குராசான் தேசத்து இரண்டு நகரங்களில் இக்கொள்ளை நோயுண்டாயிற்று. இந்த வருஷத்தில் கிலான் தேசத்து ரிஷ்து நகரத்திலும் இந்தநோயுண்டாயிருந்தது.

1877-ம் வருஷத்திலும் இராக்பெர்ஷியா,முதலிய தேசங்களின் பற்பல பாகங்களில் இந்த நோயானது சற்று கொடூரமாகவே யிருந்தது.

1879-ம் வருஷத்தில் மேற்கு அரேபியாவின் ஜில்லாக்களிலும், யமன் தேசத்திலும் இது உண்டானது.

18?4-ம்வருஷம்வரையிலும்இராக்,(Babylonia) பக்தாத்ஆகியநகரங்கள் இவ்வியாதியினின்றும்நீங்கிசுகமாயிருந்தன. 1870-ம்வருஷத்திலிருந்து-1871-ம் வருஷ வரையில் குர்டிஸ்தானிலுள்ள மக்ரி



நகரத்தில் இரண்டாந் தடவை இந்த நோயுண்டாயிற்று. இந்த நகரமானது உறூமியா நதிக்குத் தென்பாகத்திலுள்ளது, இதில் 1829-ம் வருஷத்திலிருந்து-1835-ம் வருஷம் வரையில் இந்தப் பாகத்தில் கொள்ளை நோய் பரவிநின்றதாகவும் சில சரித்திராசிரியர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

இதுவரையில் நாம் சற்று தூரதேச சமாசாரங்களைக் கவனித்து வந்தோம். இனி சமீபமாயுள்ள தேசசமாசாரங்களையும் சற்று கவனிப்போம்.

1832-ம்-வருஷமுதல் இதற்கடுத்த-4-வருஷம் வரையிலும் இப் பெரும்பிணி நோயானது ஈரான் (Persia) தேசம், அதைச்சார்ந்த விடங்கள் ஆகிய இவைகளைச் சூழ்ந்து கொண்டிருந்ததனால் அங்குகனநஷ்டமுண்டாயிற்று. இதன் விபத்தை, ஈரான்தேசத்தில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகையில் ஒருலிகிதர் பின்வருமாறு எழுதுகின்றார்.

"பஸ்ரா, முகம்மரா ஆகிய இந்நகரங்கள் இக்கொள்ளை நோயினால் முற்றும் அழிந்துவிட்டன. பூஷைஹ்ராபட்டணத்திலிருந்து புர்ருக்மலை வரையில் இக்கொள்ளை நோயானது பரவி நிற்கிறது. பூஷைஹ்ராபட்டணத்தில் இதன் கொடுமையினால் அநேக குடும்பங்கள் பாழாயின. 30-32-பெயர்கள் வாசஞ்செய்த குடும்பத்தில் - ௨-௩-பெயர்கள்தான் நடமாடுகிறார்கள். எல்லா வீதிகளிலும் பிணக்காடாய்க்கிடக்கின்றன. மைபத்துகளை(பிரேதங்களைக்) கொண்டுபோய் அடக்கஞ்செய்ய வேண்டியதற்காக, உயர்ந்த சம்பளங்கொடுத்து நூறு பெயர்களை வே

குல் இஸ்லாம் (மதசம்பந்த விஷயங்களை நடத்தும் தலைமையானவர்) நியமித்திருந்தார்கள். அந்த அறு பெயர்களில் நான்கு பெயர்கள் தப்பினவர்கள். பஞ்சமானது பிளேகை விர்த்திசெய்கிறது. தாய் தந்தைமார்களை யிழந்து நிராதாரவான சிறுவர்கள் கடைத்தெருவில் பிச்சை யெடுப்பதைப் பார்க்க மனம்பதறுகிறது. ஜர்க்கிதேசமும், சால்டியாத்தின் தென்பாகமும், கொடுமையுள்ள இப்பிணியி லகப்பட்டுத் தவிக்கின்றன. பஸ்ராவின் கவர்னரும், அவர் உத்தியோகஸ்தர்களும் பிளேக் பரிசோதனைக் கர்த்தர்களாய் வேலைபார்த்து வருகிறார்கள். தினம் ஒன்றுக்கு சராசரி - 150 - பெயர்கள் பஸ்ராபட்டணத்தில் மாத்திரம் மரணமடைகிறார்கள். 80 - ஆயிரம் ஜனத்தொகையில்-5-ஆயிரந்தான் தப்பியிருப்பதாகத் தோற்றுகிறது. காஜியுல் குஜ்ஜாத் (பெரிய நியாயாதிபதியும்) அவரைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் மரணமடைந்தார்கள். பக்தாத் (Bagdad) பட்டணமானது பெரும்பாழாய்க் கிடக்கிறது."

1877-ம் வருஷத்தில் பெர்ஷியா, ஆப்கானிஸ்தான் ஆகிய தேசங்களின் எல்லையின் சில பாகங்களில் கொள்ளை நோயின் குறிகள் அறியப்பட்டன.

1878-ம் வருஷத்தில் இக்கொள்ளை நோயானது குர்டிஸ்தான் நகரத்தைச் சூழ்ந்துகொண்டது.

இந்தக் கொள்ளைநோயில் புயலானது 1878-ம் வருடமுதல் 1879-ம் வருடம் வரையில் வல்கா நதியோரமாய் அடித்துக் கொண்டிருந்தது.



இதனால் ஐரோப்பா முழுவதும் பயந்து கிலி கொண்டிருந்தது. வல்கா நதி தீரத்திலுள்ள கோலியில் இந்தவியாதி ஆரம்பமாயிற்று. நவம்பர்மாதக் கடைசிப் பாகத்தில் இது விர்த்தி யடைந்தது. அநேகர் கட்டிகள் காணுமுன்னே மணிக்கணக்கிற்குள் மாண்டார்கள். இவ்விதம் அதிக மும்மரமாயிருந்த இந்தவியாதி கண்ட ஒருவரும் தப்பிப் பிழைக்கவில்லை. இந்த பிளேக் சம்பந்த அபிப்பிராயமாவது.

அஸ்தரகான் நகரத்துச் சுற்றுப் பக்கங்களில் இவ்வியாதி யாரம்பித்து, அந்த விடங்களில் அசுத்தம்மலிந்து கிடந்ததினால் அதிசீக்கிரம் விர்த்தியடைந்ததென்பதே.

இங்கிலீஷ் சரித்திராசிரியர்கள் அபிப்பிராயமாவது, இந்தியாவில் இந்தஸ் நதிக்கிப்பால் இந்த நூற்றாண்டிற்கு முன்னே இக்கொள்ளை நோயின் பிரஸ்தாபமில்லை. இந்தேசத்து சுதேசிகள் இந்த பிளேகின் பெயரையும் கேட்காமலேயிருக்கக்கூடும் என்பதே. ஆனால் இவர்கள் அபிப்பிராயம் இப்படியாயினும் நாம் முன்சொன்ன ஆதாரங்களினால் இந்தியாவின் சில பாகங்களில் இதற்குமுன் இந்த வியாதியானது வந்திருந்ததென்பது நன்கு புலப்படும், அந்த விஷயத்தை மேற்படி சரித்திராசிரியர்கள் ஒருவேளை கவனிக்கவில்லைபோலும்.

ஆனால் 1815-ம் வருஷத்தில் குஜராத், காட்டியாவார், கச்ச, முதலிய விடங்களில், மூன்று வருஷம் தொடர்ந்து பஞ்சமாயிருந்து, அதன்பின் இக்கொள்ளை நோயானது உண்டாயிற்று. இரண்டாம் வரு

வருஷமும் அந்த ஜில்லாக்களிலேயே மறுபடியும் தோன்றி, ஒருபக்கம் ஹைதராபாத் (சிந்து) வரையிலும் பரவினது. மறுபக்கம் அகமதாபாத் வரையிலும் பரவினது. 1820-ம்-ஆண்டில் அல்லது 1821-ம்-ஆண்டின் ஆரம்பத்தில் இந்நோயொழிந்தது.

ராஜபுதானாவிலிருக்கும் கஸ்பாபல்லியில் இந்நோயானது ஆரம்பித்து, பீவாரிலும் உண்டாகி, கோடைகாலத்தில் தானே யொழிந்துவிட்டது.

1823-ம்-வருஷத்தில் குமாயூன்ஜில்லா கட்வாலைச்சார்ந்த கதாராகாத் நகரில் இக்கொள்ளைநோயுண்டாயிற்று.

1834-ம்-வருஷத்திலும், 1836-ம்-வருஷத்திலும் ராஜபுதானா முதலிய விடங்களில் மறுபடியும் இந்த வியாதியுண்டாயிற்று. அக்காலத்தில் கவர்ன்மெண்டார்களும் தங்களுடைய சொந்த கருணைபுரிந்தார்கள்.

ராம்பூரிலும் இந்த நூற்றாண்டின் மத்தியில் கனம் நவாப் யூசுப்கான் பஹதூர் அவர்கள் காலத்தில் பிளேக் உண்டாயிருந்ததாக அந்தவூர் சில முதியோர்கள் சொல்லக்கேள்வி. ஆனால், அதற்கு அக்காலத்தில் கட்டிவியாதியெனப் பெயர் வழங்கிற்று.

1849-1850-1852-இந்த ஆண்டுகளில் தென் இந்தியாவின் சில பாகங்களில் சில கொள்ளைநோயுண்டாயின.

1876-ம் வருஷமுதல் 1877-ம் வருஷவரையில் இந்தியாவில் சில பாகங்களில் [illegible] கொள்ளைநோ



யுண்டாயிருந்தது. இதனால் முக்கியமாய் எலிகளும் பாம்புகளும் மடிந்தன.

மேற்கு சீனதேசத்தைக் கவனித்தால், யின்னான், ஹான்கான்க், ஆகிய விடங்களில் 1871-ம் வருஷத்திலிருந்து 1882-ம் வருஷம் வரையில் இக்கொள்ளைநோயிருந்தது.

பக்காய் நகரமானது எப்போதும் கொள்ளைநோய்க்குச் சொந்தாய்வீடு. அப்பட்டணத்து அசுத்த நிலைமையே இந்த வியாதி அங்கு நிலைத்திருக்க ஏதுவாயிருக்கிறது.

இந்த நூற்றாண்டின் கடைசிப்பாகத்தில் இந்த 15-20 வருஷங்களுக்குள் பிளேக் இருந்த விடங்களாவன.

ஆபிரிக்காவிலுள்ள புந்தாலி, பெர்ஷியாவிலுள்ள குர்டிஸ்தான், தென் பெர்ஷியா; காஸ்பியன் சற்றுப்பக்கம், குட்வால், யன்னான், பக்காய் முதலிய விடங்களே.

—※—

## பிளேக் நோயுண்டாகும் பிரதானகாரணம்.

—※—

யூனானி அக்கிம்களும், இங்கிலீஷ் டாக்டர்களும் சொல்லும் இந்த வியாதியின் காரணத்தை நாம் சற்று கவனித்துப் பார்த்தால் இவ்விருதாத்தார்களும் சொல்வதில் அதிக விகற்பம் இல்லையென விளங்கும். இந்நோயுண்டாகும் காரணங்களைச் சிலர் அதிக விரிவாய்ச் சொல்லியிருக்கின்றார்கள்.

னினும், அவற்றால் அதன் பிரதானகாரணம் விலக்கப்படாது. மேலும் அப்படிச் சிலர் விரிவாய்ச் சொல்வதும் இதன் பிரதான காரணத்திற்கு உதவியாகவேயிருக்கும்.

பிரபல்லியமான அக்கீம் பூ அலி ஸீனா என்னும் பண்டிதர் தம்முடைய முஸ்லிமுல் ஸபூத் என்னும் வைத்திய கிரந்தத்தில் இந்தப் பிளேகின் காரணத்தைச் சொல்லியிருப்பதை முன்னர் எழுதி, பின்பு எல்லா யூனானி அக்கீம்களும், பிரபல்லியமான இங்கிலீஷ் டாக்டர்களும் பெரும்பான்மையும் இதே அபிப்பிராய முடையவர்களா யிருக்கிறார்களென்பதை நிரூபிப்போம்.

மேற்குறித்த விஷயத்தை யெழுதுமுன், பிரதமத்தில் ஒன்றைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது ஆவசியகம். அது நாம் சுவாசிக்கும் ஆகாயமே. இதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியவைகள் அதிக விரிவானபடியால் இவ்விடம் நமக்கு அவசியமானதை மாத்திரம் சங்கிரகமாய்த் தெரிந்து கொள்வோமாக. ஆகாயமானது ஜீவப்பிராணிகளுக்கு மற்றெல்லா வஸ்துகளைப் பார்க்கிலும் மிகவும் அவசியமான பொருள். ஆகாயமானது பூமியைச்சுற்றி - 45 - மயில் உயரமட்டும் வியாபித்திருக்கின்றது. அதினுடைய அசைவுதான் காற்று. சுருக்கிச்சொல்லில் ஆகாயத்தில் இரண்டுவகை வாயுக்கள் கலந்திருக்கின்றன. ஒன்று பிராணவாயு மற்றொன்று உப்புவாயு வெனச் சுருக்கமாய்ச் சொல்வோம். இந்தப் பிராணவாயுதான் மிகவும் முக்கியமானது. இது ஜீவப் பிராணிகள் ஜீவிப்பதற்கு



ஆதாரமானது. இது சமமா யிருக்கப்பெறுவதே சுகாதாரம் நிலைத்திருக்க ஏதுவாகும்; அப்படியில்லாமல் சுகாதாரமாகிய பிராணவாயு பேதிக்கப்பட்டால் பலவகைநோய்களுண்டாகும். வாசஸ்தானங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாமல்குப்பைமுதலான அசுத்தங்களைக்குவியும்படி செய்கிறதினாலும், வாசஸ்தானங்களுக்குச் சமீபத்தில் சகதி முதலானவைகள் உண்டாக விடுகிறதினாலும், மலசல விசர்க்கங்களாகிய குப்பைகளை யுடனுக்குடன் சுத்தம் பண்ணாமலிருக்கிறதினாலும், இவை போன்ற பலவிஷயங்களினாலும் பலவகைக் கொடியவிஷவாயுக்கள் உற்பத்தியாகி நாம் சுவாசிக்கிற ஆகாயத்தோடுகலந்து, பலவகை சுகவீனங்களை யுண்டாக்குவதுமன்றி, தொற்று வியாதிகளான விஷவியாதிகளை யுண்டாக்கவும் ஏதுவாகும். இப்போது நாம் சுவாசிக்கிற ஆகாயத்தில் பிராண வாயுவானது சமமாயிருக்கப் பெறுவதுநமது சுகாதாரம் நிலைக்க ஏதுவென்றும், அது பேதிக்கப்படுவது சுகவீனம் முதலிய வியாதிக்கு ஏதுவென்றும் தெரிந்து கொண்டோம். இனிப் பிளேக்கு உண்டாகும் காரணத்தை யெழுதுவாம்.

பண்டிதர் பூ அலி ஸீனா அவர்கள் பிளேக்கு உண்டாகும் காரணத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

" பூமியில் அழுகிப்போன அல்லது அசுத்தமான வஸ்துக்களில் உற்பத்தியாகும் விஷவாய்வானது நாம்சுவாசிக்கும் ஆகாயத்தோடு கலந்து விடுவதினால் அல்லது சுக ஆதாரத்திற்குப் பிரதானமாயுள்ள நாம்சுவாசிக்கும் ஆகாயத்தின் சுகஅம்சமாகிய பிரா

ணவாயுவை பேதித்து விடுவதினால் இக்கொள்ளை நோயுண்டாகிறது.

இதன் விபரம்:—மனிததேகத்தில் தம்முடைய குணத்தைக்காண்பிக்கின்ற அனேக வஸ்துக்கள்பூமியிலிருக்கிறதென இங்கு நாம் தெரிந்திருக்கவேண்டியது ஆவசியகம். அவை யெல்லாவற்றிலும் அதி முக்கியமானதும் பிரதான மானதும் நாம் சுவாசிக்கும் ஆகாயமே. இது தேகத்தோடு சம்பந்தப்பட்டிருப்பது போல மற்றவைகள் அவ்வளவாய் சம்பந்தப்பட்டிருக்கிறதில்லை. ஆகாரமில்லாமல் ஒரு வன் சிலநாள் ஜீவிக்கலாம். ஆகாயமில்லாமல் அவ்விதம் ஜீவிக்கமுடியாது. மேலும் தேகசுகத்திற்குத் தேவையான ஆகாயம் ரோமக்கால் வழியாகவும், சுவாசத்தின் மூலமாகவும் தேக முழுவதும் சதாசென்று கொண்டே யிருக்கிறது. ஆகையால் இந்த ஆகாயமானது சுத்தமான தாயும், சுகாதாரத்திற் கேற்கச் சமமான தாயும் இருந்தால்தான் இதனால் சுகுணங்களுண்டாம். அப்படிக்கில்லாமல் இது அசுத்தமானதாகவும் பிராணவாயு சமமாயில்லாமல்குறைந்து அல்லது மிகுந்து இருந்தாலும் சுகவீனமுண்டாவது திண்ணம்.

நாம் சுவாசிக்கும் ஆகாயமானது இரண்டுவகையாய்க் கேடடையப்படும். (1) மேற்கண்ட காரணங்களினால் அசுத்த முதலியவைகளில் நின்றும் உற்பத்தியாகும் விஷக்காற்றானது நாம் சுவாசிக்கும் ஆகாயத்தோடு கலத்தல் (2) மேற்படி விஷக்காற்றானது சுகாதாரத்திற் கேற்பட்டிருக்கிற பிராணவாயுவைப் பேதித்து மாற்றிவிடுதல். ஆகிய இரண்டு வகைகளேயாம்.



கொள்ளை நோயானது இந்த இரண்டு வகைகளில் முக்கியமாய் ஒன்றினாலேயே யுண்டாகும். ஆனால் இதன் வித்தியாசம் மேற்கண்ட விதமாய் உற்பத்தியாகும் விஷக்காற்றானது ஆகாயத்தோடு கலத்தலினால் உண்டாகும். இங்ஙனமுண்டான கொள்ளைநோயானது அந்த விஷக்காற்று உற்பத்தியான விடத்திலேயே பெரும்பாலும் சுற்றிக்கொண்டு நிற்கும். இதற்கு (Local causc) இடக்காரண மெனப்பெயர்.

மேற்படி விஷக்காற்றானது ஆகாயத்தோடு கலந்து பிராணவாயுவைப் பேதிப்பதினாலுண்டாகும் கொள்ளைநோயானது பெரும்பாலும் ஓரிடமிருந்து மற்றோரிடத்திற்குப் பரவிச் செல்லும். இதற்குப் புறக்காரணமெனப் பெயர்.

இதன்கருத்தாவது இக்கொள்ளை நோய்க்குப் பிரதானகாரணம் நாம் சுவாசிக்கும் ஆகாயம் விஷமித்தலாம். ஆகாயம் விஷமிக்க அசுத்தமே ஆதாரம். ஆகையால் இக்கொள்ளைநோய்க்குப் பிரதான காரணம் அசுத்தமே யென்பது நன்கு விளங்கும். இதுவன்றி மற்றக்காரணங்களுக்கும் இந்த ஆகாயமே முடிவில் மூலமாயிருக்கிறதென்பதும் பிரசித்தம். அசுத்தமே கொள்ளைநோய்க்குத் தாயென நாம் கிரகிக்கவேண்டியது ஆவசியகம். இனி அசுத்தம் பலவகைப்படும்; அவற்றுள் முக்கியமானவைகளாவன.

ஆகாய அசுத்தம், வாசஸ்தான அசுத்தம், தேக அசுத்தம், வஸ்திர அசுத்தம், அன்னபானாதி அசுத்தம் முதலியவைகளே: இவைகளே இதற்

குக் காரணமும் அநுகூலமுமானவைகள். அசுத்தக் குப்பை, அழுகின வஸ்து, சகதி, ஜனநெருக்கம் முதலியவைகள் ஆகாயத்தை அசுத்தப் படுத்தவும் கொள்ளைநோய் பரவவும் அநுகூலமானவைகள்.

நாம் இவற்றுள் ஒவ்வொன்றின் விபரத்தையும் பிளேகைத் தடுக்கும் தலைப்பில் எழுதுவோமாகையால் அசுத்தத்தைப்பற்றிய இரண்டொரு சங்கதியைச் சொல்வாம்.

கெட்ட ஆகாரங்களைப் புசித்தல், அசுத்தவஸ்திரங்களை யுடுத்திக்கொள்ளுதல், தேகம் முதலியவைகளை அசுத்தமாய் வைத்திருத்தல் ஆகிய இந்த அநாசாரங்கள் உள்ளவர்களே பெரும்பாலும் இந்த வியாதிக்குள்ளாகின்றார்கள். தற்காலத்தில் பம்பாயிலுண்டான கொள்ளைநோயில் இத்தகையினர்களே அதிகம் மாண்டார்கள் என்பதே யிதற்குப் போதுமான அத்தாக்ஷி. பம்பாயிலுள்ள இவ்வகையார்களின் வாசஸ்தானங்கள் எவ்வளவு நெருக்கமானவைகளென்றும், அவர்கள் சாப்பாடு முதலியவைகள் எவ்விதமானவைகளென்றும், அவர்கள் வஸ்திரம் முதலியவைகள் எவ்விதமானவைகளென்றும், கண்ணுறப்பார்த்தவர்களுக்கு நன்றாய் ஞாபகமிருக்கும். இத்தகையினர்களின் வாசஸ்தானம் முதலியவைகளே இக்கொள்ளைநோய்க்குப் பொதுவாய்ச் சாதகமாகி அபாயத்தை யுண்டாக்கினதென்பது அநேகருக்குத் தெரிந்தவிஷயமே.

ஆனால் இக்கொள்ளை நோயானது அசுத்தமாயிருப்பவர்களுக்குத்தான் வருகிறது, சுத்தமாயிருப்பவர்கள் இந்த வியாதியினின்றும் முற்றும் நீக்



கப்பட்டிருக்கிறார்களென்று சொல்வதும் அநிகஷ்டமே. ஆனால் முன் சொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும் பின் சொல்லப்பட்டவர்கள் இந்த வியாதிக்குட்படுவது மிகவும் குறைந்த அளவாயிருக்கும். அவர்களுக்கு இவ்வியாதி யுண்டாவதும் பெரும்பாலும் மேற்சொன்ன அசுத்தர் கூட்டுறவாலும், அசுத்த வாடையினாலும் இவைபோன்ற வேறு சில காரணத்தினாலுமிருக்கும்.

இவ்விதமே சலத்தில் அசுத்தங் கலக்கப்படுதலாலும் அல்லது அசுத்தங்கள் சுவறின சலசம்பந்தத்தினாலும் கொள்ளைநோ யுண்டாகவும் பரவவும் ஏதுவுண்டு. இந்த பிளேகிற்கு முக்கியஸ்தானங்களாயிருக்கிற விடங்களில் காணப்படுங்காரணங்களில் இதுவுமொன்றாய்க் காணப்படுகிறது. கொள்ளை நோய்க்கு மூலஸ்தானம் சீனதேசமென்பது பிரசித்தம். அங்கிருந்தே யெங்கும் பரவுகிறது. அசுத்தத்திலும் ஊழல்களிலும் சீனதேசமே பேர்போனது. அங்குள்ள சலமும் மிக அசுத்தமாயிருப்பதே இதற்கு முக்கிய காரணம்.

—※—

## பிளேகிற்கு முன்னுண்டாகும் சில விசேஷ அறிகுறிகள்.

—※—

சில சரித்திராசிரியர்கள் பிளேக் முதலிய கொள்ளைநோ யுண்டாவதற்குமுன் பலமுறைகளிலும் பலசம்பவங்களுண்டாயிருக்கின்றன. ஆகையால் அவ்விதக்குறிகளை யறிந்தவுடன், முன் ஜாக்

கிரதையாகவும் முன் எச்சரிக்கையாகவும் நாம் ஒவ்வொருவரும் இருக்கவேண்டியது அவசியகம், எனச்சொல்கின்றார்கள். அவ்வகை யற்குறிகளில் முக்கியமான வைகளை மாத்திரம் இங்கெழுதுவாம்.

(1) வானத்தில் வால் நக்ஷத்திர முளைத்தல், (2) நக்ஷத்திரங்கள் முறிந்து விழுதல், (3) சில பக்ஷி ஜாதிகள் தன் வாசஸ்தானத்தை விட்டோடிப்போதல், (4) பெரும்போர் நடத்தல், (5) பஞ்சமுண்டாதல், (6) சில பிராணிகள் நூதனமாய்த் தோன்றல், (7) சில ஜந்துக்கள் மரணமடைதல் ஆகிய இவ்விஷயங்களைக் கண்டால் ஏதோ ஒருவகையாபத்து அந்தப்பிரதேசங்களுக் குண்டாகுமென முன் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டுமென்பதே கருத்து.

(1) ஆகாயத்தில் வால்நக்ஷத்திரம் முளைத்தல் பிளேகின் முன்னறிகுறி யெனச் சொல்லப்படுவது நம்பத்தக்கதாய்க் காணப்படவில்லை. இது சாதாரணமாய் ஜனவதந்தியா யிருக்கலாம். பிளேகைப் பற்றி யெழுதியிருக்கிற சரித்திராசிரியர்களுள் பெரும்பாலார், பிளேகிற்குமுன் வால்நக்ஷத்திர முண்டாகுமென்றும் எழுதவில்லை. அவ்விதம் உண்டாயிருக்கிறதாகவும் எழுதவில்லை. தற்காலத்தில் பம்பாயில் உண்டான பிளேகிற்குமுன் அப்படியேதேனும் வால்நக்ஷத்திரத்தைக் கண்டதாக ஒருவரும் சொல்லவில்லை. ஆனால் எப்போதாயினும் ஒருகாலத்தில் தற்செயலாய் பிளேகிற்குமுன் வால்நக்ஷத்திர முண்டானதைப் பார்த்திருக்கலாம். அவ்விதம் பார்த்தவர்கள் மாத்திரம் இப்படி வால்நக்ஷத்திரம் முளைத்தல் பிளேகிற்கு அறிகுறியென எண்ணியிருக்கலாம்



இதுவே யவர்கள் எழுதினதற்குக் காரணமன்றி மற்றப்படியன்று.

(2) (3) ஆனால் பிளேகிற்குமுன் நக்ஷத்திரங்கள் முறிந்து விழுவதும், சில பக்ஷிஜாதிகள் தன்வாசஸ்தானத்தை விட்டோடிப் போவதும் ஆகிய விஷயங்கள் பிரதானமாய் யோசிக்கப்பட வேண்டியவைகளே. ஏனெனில் சர்வதயாபரகடவுளானவர், மிருகம், பக்ஷிகள் முதலியவைகளொவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சாதன உணர்ச்சியை யுண்டாக்கி யிருக்கிறார். அவற்றுள் சில பக்ஷிகள் காலபேதத்தைத் தெரிந்து கொள்கின்றன. சில பக்ஷிகள் அபாய முதலியவைகளைத் தெரிந்து கொள்கின்றன. நாம் வாயுநிர்மானியால் (Barometer) ரால், புயல் முதலிய சண்டமாருதத்தின் வரவையறிந்து கொள்வது போல், சில பக்ஷிகள் காற்றின் மாறுதலைத் தெரிந்து கொள்ளும் சுபாவமுடையனவா யிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவைகள் ஆட்காட்டிக்குருவி நாரை, கொக்கு, ஆகியவைகளே. பிளேக் உண்டாம் இடங்களிலுள்ள மேற்படி பக்ஷிகள் அவ்வூர் காற்றின் சுபாவமாறுதலை யறிந்துகொண்டவுடனே அவ்வூரைவிட்டோடிப்போகின்றன. இவ்விதமே காற்றின் சுபாவமாறுதலினால் நக்ஷத்திரங்கள் முறிந்து விழுகின்றன.

ஆகையால் நக்ஷத்திரங்கள் முறிந்துவிழுவதும், ஆட்காட்டிக்குருவி, நாரை, கொக்கு, முதலிய பக்ஷிகள் அவ்வூரைவிட்டோடிப்போவது மாகிய இவ்விஷயங்களும் முக்கியமாய்க் காற்றினது சுபாவமாறுதலடைவதினால் உண்டானவைகளாயிருக்க

லாம். அவ்விதம் பேதப்பட்டகாற்றானது பிளேக் நோயைஅல்லது வேறேதேனும் ஒருவித கொள்ளை நோயையுண்டாக்கலாம். இந்த அறிகுறி எந்தஊரில் சம்பவிக்கிறதோ அந்தவிடத்தில் கொள்ளைநோயுண்டாவது நிச்சயமாகும்பக்ஷத்தில் நாம்முன் எச்சரிக்கையாயிருக்க இதுமிகவும் உபயோகமானதாயிருக்கும். கொள்ளைநோயுண்டாவதற்கு முன்பே, மனிதர்களை யெச்சரிக்க சுபாவமாயுண்டாகும் அறிகுறிகளில் ஒருவேளை இதுவு மொன்று யிருக்கலாம். அப்படியாயின் நம்மைக்காப்பாற்ற எச்சரிக்கை செய்யும் சர்வதயாபர கடவுளின் பேரன்பிற்கு நாமெல்லோரும் எப்போதும் துதிசெலுத்த கடமைப்பட்டிருக்கின்றோம்.

(4) பெருத்தயுத்தம் உண்டாவதினால் அநேக ஜனங்கள் மாண்டுபோக நேரிடும். அவர்கள் இரத்தம், தசை முதலிய அங்கங்கள் பலவிடங்களிலும் சிதறி, அழுகி, அவற்றினின்றும் உற்பத்தியாகும் விஷக்காற்றானது ஆகாயத்தோடு கலந்து விஷமாக மாறிப்போக ஏதுவாகும். எப்போதும் இப்படியாக நேராவிட்டாலும் சிலசமயம் கொடிய விஷக்காற்றை யுண்டாக்கி விடுவதால் கொள்ளை நோய்க்கு ஏதுவாகும். ஆகையால் இவ்விதம் நேரிட்டவூரார் அல்லது அதற்கடுத்த வூரார் இந்த விஷயத்தைப் பற்றி முன்சாக்கிரதையா யிருக்கவேண்டியது மிகவும் அவசியகம்.

(5) பிளேக் வியாதியானது பொதுவான பஞ்சமுண்டானபின் பெரும்பாலும் ஆரம்பமா யுண்டாயிருக்கிறதாக, சரித்திராசிரியர்களுள் பெரும்பாலர்



ரும் அநேக பண்டிதர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் இது முற்றும் சரியான காரணமாகத் தோற்றப்படவில்லை. ஒருவேளை பின்வருகிறவிதமாயிருக்கலாம். மழையில்லாமையினால் காற்றில் வரட்சி அதிகரிக்க ஏதுவாகும். இத்தருணத்தில் சூரிய வெப்பமும் அதிகஉக்கிரமாயிருக்கும். இவ்விரண்டு விஷயமும் கூடி, காற்றின் சுபாவத்தைப் பேதமாக்கி விடுமாகையால் அதனால் கொள்ளை நோய் முதலியவைகளுண்டாகலாம். இதற் காதாரமாவது-16-ஆம் நூற்றாண்டின் அந்தத்தில் பஞ்சாப் முதலிய தேசங்களில் இரண்டு வருஷகாலம் தொடர்ச்சியாய் மழையில்லாதிருந்தது. அதன்பின்பு பஞ்சாப் தேசத்தில் பிளேக் நோயானது ஆரம்பித்து தில்லி நகரம் வரையில் பரவினது. இவ்விதமே மீவார் தேசத்தில் உண்டான கொள்ளை நோயும், இரண்டு வருஷம் தொடர்ச்சியாய், மழையில்லாதிருந்த பின்பே உண்டாயிற்று. இன்னும் இவ்விதமே ஐரோப்பாவில் பலதடவை யுண்டான கொள்ளை நோயும் மழைப்பஞ்சத்திற்குப் பின்பே யுண்டாயிருக்கின்றன. இப்போது இந்தியாவின் பல பாகங்களிலும் நடந்தேறிவரும் பம்பாய் பிளேகும் பெரும்பான்மையான பஞ்சத்தின் பின்பே யுண்டாயிருக்கிறது. இவ்விதமாயினும், கொள்ளை நோயுண்டாவதற்குப் பெரும்பஞ்சத்தை முன்னறிகுறியாய்ச் சொல்லப்பட்டது ஒருதக்குந்த ஆதாரமாகாது. ஆயினும் அநேக விடங்களில் பெரும் பஞ்சத்திற்குப்பின் இக்கொள்ளை நோயானது ஆரம்பமாகியிருந்தாலும் மழையில்லாமையும், பஞ்சமும் கொள்ளை நோயை

யுண்டாக்கச் சம்பந்தப்பட்டவைகளாகா. ஏனெனில் இவ்விதம் எல்லாவிடங்களிலும் நேரிடாததே காரணம்.

ஆனால் பஞ்சமுதலியவைகளைக் கொள்ளை நோய்க்கு ஒரு அறிதென என்னலாம். ஆகையால் பெரும் பஞ்சமுண்டானால், அதற்குப்பின் ஏதேனும் கொள்ளை நோயுண்டாமென எச்சரிக்கையா யிருப்பதே அதன் கருத்து.

(6) சில ஜந்துக்கள் நூதனமாய் வருதல். முக்கியமாய் ஈச்சகள்கூட்டங் கூட்டமாய் நூதனமாய் உண்டானால், பிளேக் வருவதற்கு அறிகுறியென, ஒரு ஆங்கிலேயடாக்டர் சொல்கின்றார். இதற்குத் தாக்ஷியாகப்பின் வருவதை உதகரிக்கின்றார். அரபு தேசத்தில் பாபிலோனிய நகரத்தில் ஒருதடவை ஈக்கள் ஏராளமாய் திரள் திரளா யுண்டாயின. உடனே கொள்ளை நோயு முண்டாயிற்று. இந்த ஈக்கள் மறைந்துபோனவுடன் கொள்ளை நோயும் போய் விட்டதென டாக்டர் ஜப்போதுரை யவர்கள் சொல்கின்றார்.

ஆனால் இந்த அபிப்பிராயமும் அவ்வளவாய் ஏற்றுக்கொள்ளத் தக்கதாய்க் காணப்படவில்லை. ஏனெனில் ஒரு கொள்ளை நோய்வந்தவுடன் நாம் முன் விவரித்தபடி சில ஜந்துக்கள் எப்படி யோடிப் போகின்றனவோ அப்படியே சில ஜந்துக்கள் வியாதி வருமுன் வந்துவிடுவதுமுண்டு. ஆகையினால் ஈக்கள் வந்து விடுவதினால் மாத்திரம் இந்த நோயுண்டாகி விடுமெனச் சொல்வது யுக்தமென்பது நமது சிற்ற



றிக்கெட்டவில்லை. ஆனால் அசுத்தமுள்ள விடத்தில் சாதாரணமாய் ஈக்கள் மொய்ப்பது வழமை. அப்படி ஈக்கள் ஏராளமா யுண்டாவதினால் அசுத்தம் நிறைந்து கிடக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. எங்கு அசுத்தம் மலிந்ததோ அங்கே கொள்ளை நோயுண்டாகவும் ஏதுவென்பதே திண்ணம்.

(7) சில ஜந்துக்கள் மரணமடைதல். இப்போதுண்டாயிருக்கிற பிளேக் வருவதற்குமுன் பெரும்பாலும் எலிகள் மரணமடைகிறது. இதுவும் இந்த பிளேகிற்கு ஒரு அறிகுறியா யிருக்கின்றது. மேலும் இந்த வியாதி பரவுதற்கும் இந்த எலிகளே பெருமூலமாகவும் இருக்கிறதெனத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் இதுவரையில் பிளேக் நோயின் முன்னறிகுறிகளில் சிலவற்றைத் தெரிந்துகொண்டோமாகையால், இக்கொள்ளை நோயுண்டாவதற்கு முன் சிலசமயம் இந்த லக்ஷணங்களுண்டா யிருந்தால், அப்படி யுண்டானது அக்கொள்ளை நோய்தானென நிச்சயிக்க இவைகளும் ஒருவித உதவியாமென்பதிற் சந்தேகமில்லை.

—*—

## பிளேக் நோய்க்கு முக்கியமாய் இலக்கானவர்.

—*—

நாம் முன் விவரித்தபடி இக்கொள்ளை நோய்க்குப் பிரதானகாரணம் அசுத்தமே யாதலின், அசுத்த ஆகாயம், அசுத்த வாசஸ்தானம், அசுத்த தேகம்,

அசுத்த வஸ்திரம், அசுத்த அன்னபானுதிகள் உடையவர்களே இதற்கு முக்கியமாய் குறிப்பானவர்கள். அவர்களுடன் துர்ப்பலப்பட்டவர்கள், தரித்திரர்கள் ஆகியவர்களையும் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

துர்ப்பலமும் தரித்திரமும் ஆகிய இந்த நிலைமைகள் கொள்ளை நோயைப்பற்றிப் பிடித்துத் தம் வசம் இழுத்துக் கொள்வதில் காந்த சக்தைப் போன்றன.

ஏனெனில். ஒருவன் தான் துர்ப்பலப்பட்டிருக்கும்போது கொள்ளைநோயின் விஷதருமத்தைத் தன் துர்ப்பலத்தின் நிமித்தம் எதிர்க்க வல்லாதவனாகி, அதைப் புறப்படுத்தக் கூடாதவனா யிருக்கிறான்.

தரித்திரமும் வறுமையும் ஜீவன விஷயத்தை யதிகமாய் பாதிக்கத்தக்கதா யிருக்கின்றன. ஆகையால் அதிக தரித்திரன், தன்னுடையவும் தன்னைச் சார்ந்தவர்களுடையவும் தேகம், வாசஸ்தானம், ஆகாரம், பானம் முதலியவைகளை யெவ்வளவு சீர்படுத்த வேண்டுமோ அவ்வளவையும் பூரணமாய்ச் செய்ய வலாதவனாயிருக்கிறான். சுத்தம், சீர்திருத்தம் ஆகியவைகளினால் இக்கொடிய வியாதியையெதிர்த்து வெல்லக்கூடும். அப்படிக் கியலாத தரித்திரன் எவ்விதம் எதிர்த்து நிற்கக்கூடும் என்பதே.

1664-ம்-ஆண்டுமுதல் 1666 - ம் ஆண்டுவரையில் லண்டனில் உண்டாயிருந்த கொள்ளைநோய்க்கு இதுவரையிலும் (வரியர் கொள்ளைநோய்) என வழங்கப்படுவதையே யிதற்கு அத்தாக்ஷியாய்க் காட்டுவாம்.



## குறிப்பு.

இந்தப் பிளேகின் ஆரம்பலக்ஷணம், பிரதான லக்ஷணம், பொது லக்ஷணம் முதலியவைகளை நாம் தெரிந்துகொள்ளுமுன், இந்தப் பிராண நாச கொள்ளைநோயானது ஒவ்வொரு நூற்றாண்டிலும், ஒவ்வொருவிடங்களிலும் சிற்சில பேதங்களுள்ளதாய்க் காணப்பட்டிருக்கின்றது. ஆயினும் இந்தப் பேதமானது அந்தப் பிளேக்நோயை யறிந்துகொள்ள ஒரு தடையுமாகாது. ஆகையால் தற்காலத்தில் இந்தியாவின் பல பாகங்களில் பரவி நிற்கும் இந்தக்கொள்ளைநோயின் லக்ஷணங்களை யிப்போது காணப்படுகிற அநுபவப்படியே யிங்கெழுதுவாம். நாம் அதைக் கவனமாய்த் தெரிந்துகொண்டால் இன்னின்னலக்ஷணங்களுள்ளவைகள்தான் பிளேக்நோயென்றும், இன்னின்னலக்ஷணங்களில்லாதவைகள் பிளேக்நோய் அல்லவென்றும் நாம் சந்தேகமறத் தெரிந்துகொள்ள ஏதுவாம்.

—*—

## பிளேக்நோயின் ஆரம்பலக்ஷணம்.

—*—

பெரும்பான்மையாய் இக்கொள்ளை நோயானது பரவிநிற்கும் இடத்திலுள்ளவர்களுக்கு; பசிமந்தப்படுதல், தலைநோயுண்டாதல், தேகச்சோர்வு, அவயவங்கள் நிசத்துவமாயிருத்தல், அடிக்கடி அல்லது வேளாவேளைகளில் குமட்டல் உண்டாதல், மூளை துர்ப்பலப்படுதல், ஆயாசங்காணல் ஆகியவைகளாம். இந்த லக்ஷணங்கள் சில வேறு வியாதி

களிலும் காண்பதுண்டு. ஆகையால் இந்தலக்ஷணங்களுடன் நித்திரை யில்லாதிருக்கில் இந்தநோயுண்டாகவதுவாகுமென அறியவேண்டியது. எந்தக் காரணத்தினாலேனும் இந்தக் கொள்ளை நோய் தோற்றின பத்துநாளைக்குள் எப்போதாயினும் மேற்கண்ட லக்ஷணங்கள் கண்டால் உடனேயதை கவனிக்கவேண்டியது ஆவசியகம்.

—※—

## பிளேகின் பிரதான லக்ஷணம்.

—※—

இதன் பிரதான லக்ஷணங்களைப்பற்றி யூனானி பண்டிதர்களும் இங்கிலீஷ் டாக்டர்களும் அதிக விரிவாய்ச் சொல்லியிருக்கின்றார்கள். அவைகளெல்லாவற்றையும் இங்கெழுதுவதானால் இச்சிறுநூல் விரிவெய்தும். ஆகையால் நாம் இப்போது அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைமாத்திரம் இங்கெழுதுவாம்.

இந்தக் கொள்ளைநோயானது முக்கியமாய் இரண்டுவகையாய்க் காணப்படுகிறது. ஒன்று கட்டியுள்ளது. மற்றொன்று கட்டியில்லாதது. கட்டியுள்ளது -௫- வகையாகவும், கட்டியில்லாதது -௬- வகைகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வியாதியானது ஒரு பிரமாணமாய் திடும் பிரவேசமாய் வேதனையோடு ஆரம்பமாகும். திடீரென சுரங்காணும். முகத்தோற்றம் வக்கங்கொண்டதாக விருக்கும். குமட்டலும், கடோர வாந்தியும் அடுத் தடுத்துக்காணும். தலைநோய்



அதிகமாயிருக்கும். மல்லாந்து படுத்துக்கொள்வதிலேயே யிஷ்டம். அடிக்கடியுண்டாகும்வாந்தியினால் அதிக களை முதலியவை சேரிடும். நித்திரை பிடியாது. (இதுவும் இந்த வியாதிக் குறிகளில் பிரதானமானது.)

நாவின் லக்ஷணமானது வரையறையானது. வியாதியஸ்தன் நாவைக்காண்பிக்க எரிந்துவிழுவான், ஒருவேளை காண்பித்தாலும் அதை நீட்டியிழுத்துக்கொள்வான் அல்லது அவசரமாய் அந்தப்பக்கமு மிந்தப்பக்கமும் பிதுக்குவான். நாவு ஈரமாயும் தடித்துமிருக்கும். அதன் ஓரமும் நுனியும் கொஞ்சமாயாவது அதிகமாயாவது சிவந்திருக்கும், மற்ற பாகங்களெல்லாம் இலேசான முள்கள் நிறைந்து மாவு படிந்ததுபோலிருக்கும். இது சற்று பிரகாசமுள்ளதாய் அல்லது இலேசான செஞ்சாயலான ஊதா நிறமாயிருக்கும். பேச்சுக் குழறும். குழறுதலை நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளக்கூடும்.

நாடியானது நடையிலும் பருமனிலும் பேதப்படும். நூறு முதல் நூற்றிநாற்பது வரையில் நடக்கும் நாடியானது பெரும்பாலும் நிறைந்ததாயிருக்கும். அது மிருதுவாயுமிருக்கும். இந்த நிலையானது வியாதியின் ஆரம்பத்திலேயே தெரிந்துகொள்ளத் தக்கதாயிருக்கும். இருதயத் தொழிலானது வரவர அபாயகரமாய் துர்ப்பலப்பட்டுப் போவதால் நாடியானது நூலைப்போல் மெலிந்து நடக்க ஆரம்பிக்கும். பெரும்பாலும் மலபந்தமுண்டாகும், எந்த மருந்தாலும் மலம் போகாமல்

அவ்வளவு பந்தமாய் அடிக்கடி அதி கடினமான நி
லைமையுமாகிவிடுவதுமுண்டு. சில சமயம் மல இ
காய்ப்போவதுமுண்டு. ஆனால் அதற்கு ஒருவி
விபரீத துர்வாசனையுண்டு.

கொஞ்சம் வரட்சியான இருமல், நிணநீர் நா
புகளுள்ள(மிருதுவான)சில பாகங்களில் கட்டியை
போன்ற குத்துண்டாகும், மூத்திரமானது அதி
புளிப்பாயிருக்கும். இதை அசையாமல்வைத்தா
அதிசீக்கிரத்தில் அடியில் வண்டல் படிந்துவிடும்
அதன் டிக்ரி-101° முதல் 103°-வரையிலிருக்கும்
உப்பு சத்து முதலியவைகள் குறைவாய்க் காண
படும்.

போகப்போக உஷ்ணமானது அதி சீக்கிரமா
ய் விர்த்தியாகும். ௩-ம் நாள் அல்லது ௪-ம்நா
103-லிருந்து 104-டிக்ரிவரையில் அதிகரிக்கும்
அசாத்திய கேஸ்களில் 140-வரையில் அதிகரித்த
24-அல்லது-28-மணிக்குள்ளாக மரணம் சம்ப
விக்கும்.

இந்தவியாதி கண்டவர்களுள் நூற்றிற்கு என்
பது அல்லது தொண்ணூறு பெயர்களுக்குக் கட்
டி காண்கிறது. இக்கட்டிகள் பொதுவாய் மிருது
வான பாகங்களில் காண்கின்றன. முக்கியமாய்
கக்கம், கவட்டி, கண்டம் ஆகிய ஸ்தானங்களில்
காணும். இக்கட்டிகள் சில சமயம் சுரத்துடனே
காண்கிறது. பெரும்பாலும், ௨-ம் அல்லது-௩-
நாள் காணும். தேகத்தின் ஒரு பாரிசத்திலாவது
அல்லது இரண்டு பாரிசத்திலாவது காணும். இ



கட்டியின் மேலுள்ள சருமம் சூடாயிருக்கும். இது
புருமனாகவும், மிருதுவாகவும், மிருக்கும். சிலநேரம்
அப்படியேஅழுந்திப்போகும். சிலசமயம்பழுத்தும்
உடையும். இந்தக்கட்டி வெளிக்காணும் போது
சுரம் மும்முரிப்பது சுபாவம்.

—※—

## பிளேக் பொதுலக்ஷணம்.

—※—

மேற்கண்ட ஆரம்பலக்ஷணங்களுண்டானவுடன்
ஏதோ வியாதியுற்றதாய்க் கவனிக்கநேரிடும். உடனே
சுரங்காணும்; சுரங்காண்பதற்கு முன்னே குளி
ரும்நடுக்கலும் சிலசமயமுண்டாவது முண்டாகும்.
எலும்புகளைத் துளைத்தல்போன்ற நோவு. முதுகு,
இடுப்பு ஆகிய ஸ்தானங்களிலும் நோவுண்டு. தலை,
பொருத்து ஆகியஸ்தானங்களில் வலி அதிகமாயிருக்கு
ம். முகம் சிவந்தும் தோற்றம், முகத்தோற்றமான
து மந்தமுள்ளதாகவும், ஏக்கங்கொண்டதாகவும் கா
ணப்படும். கண்களோ, பெரும்பாலும் சிவந்து இ
ரத்தமயமாயிருக்கும். நாவின் மத்தியபாகத்தில்
மாவு படிந்தாற்போலிருக்கும் அதன் ஓரமும் நுனி
யும் சிவந்திருக்கும். பேச்சில் தடுமாற்றம், குழ
றல் ஆகியவைகளிருக்கும், சிலவேளை வெடுவெடுப்
போடு விடைபகர்வான். வியாதி யாரம்பமான இர
ண்டாம்நாள் அல்லது மூன்றாம் நாள் சுரங் கொடூர
மாகி, டிக்ரி உயரும். வியாதியாரம்பமான இரண்
டாம்நாள் சில சமயம் அதற்குப் பின்னிட்டும் கட்
டி அல்லது கட்டிகள் காணும். இது முக்கியமாய்

கண்டம், கவட்டி, கக்கம் ஆகிய ஸ்தானங்களில் காணும். கட்டிகள் தேகத்தின் ஒரு பாரிசத்திலாவது இருபாரிசத்திலுமாவது காணும். (கட்டிகள் காண்பது இந்நோய்க்குப் பிரதான குறிகளிலொன்று) குமட்டலும், கடூரவாந்தியும் அடுத்தடுத்துக் காணும். புத்தி தடுமாற்றம், வியாதியஸ்தன் கேட்ட கேள்விகளுக்கு விடைசொல்ல கஷ்டப்படுவதுமன்றி தடுமாறியுழறல் ஆகியவைகளுண்டாகும். இந்த லக்ஷணங்களன்றி யின்னும் அநேகம் சொல்லப்பட்டிருப்பினும்பெரும்பாலும் இந்தலக்ஷணங்களே பொதுவாய்க் காணப்படுகின்றன.

—※—

## கொள்ளைநோய்க்கும் இதர நோய்களுக்கும் இடையிலுள்ள பேதம்.

—※—

வியாதியஸ்தனுக்குத் தன்னறிவு இருக்கிறதா? எனவும், காது கேட்கிறதா? எனவும், சுரமானது நிம்பிரவேசமாயுண்டானதா? எனவும், அந்தச்சுரமானது குளிரோடு ஆரம்பமானதா? எனவும், அந்த வியாதியஸ்தன் சொந்தக்காரர்களிடம் விசாரிக்கவேண்டும். கண் வெள்விழி சிவந்து அல்லது கலங்கியிருக்கிறதா? எனவும், நாடியைவிரலினால் அழுத்தினால் அதன் நடை நின்றுவிடுகிறதா? எனவும், நாவில் முட்கள் முளைத்திருக்கின்றனவா? அதன் மத்திய பாகங்களில் வெண்மையான அல்லது மஞ்சளான மாவு படிந்திருக்கிறதா? அதன் இரு ஓரங்களும் நுனியும் சிவந்திருக்கிறதா? எனவும், பேச்சு



மந்தமாகவும்; குழறலாகவும் இருக்கிறதா? எனவும். வியாதியஸ்தன் அமைதியாயிருக்கிறானா? எனவும், அவயவங்கள் தம் சக்தி அல்லது தொழில் அற்றிருக்கின்றனவா? எனவும், கைகள் சுபாவமாய் உபயோகிக்கக் கூடினவைகளா யிருக்கின்றனவா? எனவும், வியாதியஸ்தன் தாறுமாறு யிருக்கிறானா? எனவும், கண்டம், கக்கம், கவட்டி முதலியஸ்தானங்களில் ஏதேனும் வீக்கம், அல்லது கட்டியிருக்கிறதா? அது மிருதுவாயிருக்கிறதா? எனவும், குமட்டல், வாந்தி, மலபந்தம் ஆகியவைகளுண்டா? எனவும் தீர்க்கமாய் நிதானித்து இந்த லக்ஷணங்களுண்டாயிருந்தால் அது பிளேக் வியாதியெனவே தீர்மானிக்கவேண்டும்.

—※—

## சந்தேக பிளேக் லக்ஷணம்.

—※—

கட்டி அல்லது வீக்கமில்லாமை; இடுப்பில் நோவில்லாமை; இருமல் இல்லாமை, அல்லது கபம் வெளிப்படுகிற இருமல், வயிற்றுப் போக்கு, வாந்தி, வயிற்றுத்திரட்சி ஆகிய லக்ஷணங்களுடையவை சந்தேக பிளேக் ஆனபடியால் அதை முற்றும் நிதானித்தே தீர்மானிக்க வேண்டும்.

—※—

## பிளேகின் விசேஷ லக்ஷணங்கள்.

—※—

நாம் இப்போது பிளேகின் ஆரம்ப லக்ஷணம், ஸ்தான லக்ஷணம், பொது லக்ஷணம் ஆகியவைகளை

யும் இதற்கும் இதர வியாதிகளுக்குமிடையிலுள்ள பேதத்தையும், சந்தேக பிளேக் லக்ஷணத்தையும் தெரிந்து கொண்டோம். ஆயினும் பின்காணும் லட்சணங்களையும் கவனிப்பதினால் இந்த வியாதியைத் தெரிந்துகொள்ள உதவியாயிருக்கு மென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் அவற்றை நண்பர்கள் ஞாபகத்தில் நிலைக்கும்படி வரிசையாய் பிரத்தியேக முறையாய் எழுதுவாம்.

தலையானது கனத்திருக்கும். தலை வலியுண்டாம்.

நெற்றியும் அதன் நரம்புகளும் முறையே கனத்தும் தடித்து மிருக்கும்.

பொறியும் அங்குள்ள நரம்புகளும் முறையே கனத்தும் தடித்து மிருக்கும்.

கண்கள் சிவந்திருக்கும். அவற்றிலிருந்து நீர் வடியும்.

கன்னங்கள் சிவந்திருக்கும்.

மூக்கில் நின்றும் நீர்வடியும். அங்கு அரிப்பு முண்டு.

உதடுகள் வறண்டிருக்கும். அங்கு எரிவந்த முண்டு.

வாய் இனிப்பாயும் வறண்டு மிருக்கும், கொட்டாவியு முண்டு.

நாவு நடுவில் வெளுத்தும், அதன் ஓரங்களும் அதன் நுனியும் சிவந்துமிருக்கும். பேச்சு குழறல், பேச்சு தடுமாறல் ஆகியவைகளுமுண்டு.

தொண்டை வரட்சியா யிருக்கும். அதுகம்மியு மிருக்கும்.



கழுத்தும் அங்குள்ள நரம்புகளும் முறையே னத்தும் தடித்து மிருக்கும்.

எச்சில் குழம்பா யிருக்கும்.

மார்பில் சிலசமயம் பிடிப்பு முண்டு.

நீர் குண்டிக்காய் ஸ்தானத்தில் நோவுமுண்டு.

இடுப்பினும் சிலவேளை நோ வெடுக்கும்.

முதுகு நோவும். முதுகுபக்கம் படுத்திருக்க வ யிஷ்டம்.

கால்களில் நடுக்க முண்டாம்.

அவயவங்கள் தளர்ந்து சோர்வடையும். அவை ளும், அங்கு எரிவந்தம்உண்டாம். அவை கன த்து மிருக்கும்.

மூட்டுகளிலும் நோவுண்டு.

தேகத்தில் அரிப்பு, குற்றுதல், நடுக்கல் ஆகிய வைகளுண்டு. (இவை கட்டிகாணும்போது அதிக மா யிருக்கும்.)

நாடி நடையானது துரிதமாய் நிறைந்து, உயர்ந்து நடந்து முடிவில் சுஷ்கித்து நிற்கும்.

சுரமானது திடும்பிரவேசமாய்க் கண்டு தொடர்ந்து நிற்கும்.

மயக்கம், திகிலடைதல், அமைதியில்லாமை, நித்திரை யில்லாமை, பயப்படுதல், துள்ளுதல், குதித்தல், நித்திரையில் நடுக்கல், எழுந்து நிற்க முயற்சி செய்தல், வரட்டிருமல், ஆகாரத்தில் இஷ்டமில்லாமை, அருவருப்பு ஆகியவைகளேயாம்.

## குறிப்பு.

மேற்கண்ட லட்சணங்கள் எல்லாம் ஏகமாயிருக்கவேண்டுமென்பது அவசியமாகாது. இதர வியாதிகளைப்போலவே இந்த வியாதியிலும் பற்பல லட்சணங்கள் காண்பதும் சிற்சில லக்ஷணங்கள் காணாமலிருப்பதும் உண்டெனத் தெரிந்திருக்கவேண்டும்

—※—

## அசாத்திய பிளேக் லக்ஷணம்.

—※—

கன்னங்களில் வீக்கங்காணல், அறிவுகுன்றல், குமட்டலும் வாந்தியும் அதிகமாய்க்காணல், வயிறுப்புதல், வாந்தியில் இரத்தம் வெளிப்படுதல், மூக்கால் இரத்தம் வடிதல், பேதி, சீதபேதி, முக்கியமாய் இரத்தபேதி அல்லது இறைச்சியைக் கழுவின நீர்போன்ற பேதியாதல், சிறுநீருடன் இரத்தம் வெளிப்படுதல், மூத்திரம் கறுப்பாயிறங்கல், ஸ்திரீகளுக்கு மாதாந்தகாலங்கள் தவிர மற்றகாலங்களில் இந்த வியாதியினால் அபரிமிதமான இரத்தம் வெளிப்படுதல், மாதாந்தகாலங்களில் இந்த வியாதியினால் வழக்கமாய் வெளிப்படவேண்டிய இரத்தமானது கட்டுப்படல், இவ்விதமே மூலரோகிக்கு வழக்கமில்லாத காலத்தில் இரத்தங்காணுதல், வழக்கமான காலத்தில் இரத்தங் கட்டுப்படல், நீரடைப்புகாணல், மேல்மூச்சுண்டாதல், வயிற்றுக்கடுப்புண்டாதல், பிளேக்நோயின் லக்ஷணங்கள் கண்டும் அதிக தாமதமாய்க் கட்டியுண்டாதல், கட்டியில் நின்றும் துர்க்கந்தமான இரத்தம்



அல்லது சீழ் வெளிப்படுதல், முக்கியமாய் அப்போது மயக்கங்காணல், அமைதியில்லாமை, அரட்டல் புரட்டல், தேகத்தில் உள்ளே உஷ்ணமாகவும் வெளியே குளிர்ச்சியாகவும் இருக்கிறதாய்த்தோற்றல், சுரந் தணிந்திருக்கும்போது மார்பில் வேர்வையதிகமாயுண்டாதல், வியாதியாரம்பத்திலிருந்தே சகிக்கக்கூடாத தாகங்காணல், எந்தவிதத்திலும் ஆறுதலில்லாமை, அதிக கவலைப்படுதல், சித்தம் பேதித்தல், அடிக்கடி தன் மரணத்தைப்பற்றிச் சிந்தித்தல், இந்த வியாதியில் நின்றும் தான் தப்பிப்பிழையேன் என அடிக்கடிசொல்லி பயப்படுதல், நாவு கண் ஆகியவை கறுத்துப்போதல், கண்தெரியாமற்போதல், காது கேளாமை, குரலோசை கம்மிக்குன்றிப்போதல், வெளிச்சத்திலிருக்க வெறுப்பு, முகத்தேஜசுகெட்டு பிணமுகம்போல் மாறிப்போதல், கைகால் எரிந்து ஜில்லிடல், அதிக நேரம் அசைவற்றுக் கிடத்தல், சதா புலம்பல். சருமத்தில் நின்றும் சுவாசத்தினின்றும் ஈர ஆவி புறப்படுகிறதாக பரிசத்திற்குத்தோற்றல், ஆகிய இந்தலக்ஷணங்கள் கண்டால் அசாத்தியமாம்.

—※—

## சாத்திய பிளேக் லட்சணம்.

—※—

சுவாசம், சப்தம், நாடிபலம், புத்தி ஆகியவைகளெல்லாம் சுபாவஸ்திதியிலிருத்தல், அன்னபானாதிகளின்மீது இஷ்டம். ஆகியவைகள் சாத்தியலட்சணமாம்.

## பிளேகிற்கு நாளறிதல்.

—*—

ஆயுள்வேத சாஸ்திரங்களில், சுரம், ஜன்னிபாதம் முதலியவைகளுக்குச் சிலநாள்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுபோலவே இக் கொள்ளை நோய்க்கும் யூநாநி பண்டிதர்கள் முறைக்கிரமம் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அது பின் வருகிறவிதமாம்.

சில வியாதிகள் சில இரவுகளில் மும்மரித்து அதிகரிப்பதுண்டு. அப்படியே இந்த வியாதியும் முறைக்கிரமமாய்ச் சில இரவுகளில் மூர்க்கங்கொண்டு ஆளைவதைத்துவிடும். அந்த நாட்களாவன. வியாதியுண்டான, 4, 7, 9, 11, 14, 18, 21, 25. ஆகிய இந்த நாட்களின் இரவில் இது மும்மரித்து மூர்க்கங்கொள்ளு முறையையுடையது. இந்த இரவுகளில் சுரம், நடுக்கல், புலம்பல், தாகம், மூத்திரம் பெய்தல் ஆகியவைகளும் மற்றும் சில லட்சணங்களும் விர்த்தியாகும். ஆகையால் இந்த இரவுகளில். முக்கியமாய், 4, 7, 9, ஆகிய இந்நாள்களின் இரவின் ஆரம்பத்திலேயே நல்லறிவுஉண்டாகி, வியாதியின் லட்சணங்களும் படிந்துவந்தால் அந்த நோய் சவுக்கியமாகிவிட ஏதுவாகும். அப்படி யில்லையாயின் விரோதமாகவே முடியும்,

இன்னும் ஒரு மூர்க்கமுறையின் இரவின்முடிவிலாகிலும் அல்லது அதற்கடுத்த பகலிலாகிலும் அதிகரித்த வியாதியானது தணிந்து, ரோகிக்குத் தன்னறிவுஉண்டாகி, ஆகாரத்தில்கொஞ்சமேனும்விருப்பமுண்டானால், மறுமூர்க்க முறைவரையில் எதிர்



பார்க்க ஏதுவுண்டு. அப்படிக்கில்லாமல் அதிகரித்த வியாதியானது தன் வழியேசென்றால் மறுமுறைக்குள் அபாயம் நேரிடுமென நிதானிக்கவேண்டும். உதாரணம். முதல்மூர்க்க முறையாகிய-4-ம் நாளிரவின் கடைப்பாகத்தில் அல்லது அதற்கடுத்த பகலில் வியாதியின் லட்சணங்கள் படிந்து, ஆகாரத்திலும் கொஞ்சம் விருப்பமுண்டாயின் அடுத்தமுறையாகிய-7-ம் நாள் வரையில் தாங்குமென உத்தேசிக்கலாம். அப்படிக்கில்லாமல் முதல்மூர்க்க முறையில் மும்மரித்த வியாதியானது, அவ்விதமே அதிகரித்து நிற்குமாயின் மறுமுறைக்குள் அபாயம் நேரிடுமென உத்தேசிக்கவேண்டும். இவ்விதமே 2-ம் முறையாகிய-7-ம் நாளும், 3-ம் முறையாகிய-9-ம் நாளும் ஆகிய இந்நாட்களில் கிரமேணவாய் வியாதி படிந்து ரோகிக்குத் தன்னறிவு தனக்குண்டாகி, ஆகாரத்தின்மீது இஷ்டமுண்டாகிவிட்டால், 10-நாள்முதல் சுரமுதலியவைகள் குறைந்து அந்த வியாதிதீர்ந்து பூரணசவுக்கிய முண்டாய்விடுமென்பதிற் சந்தேகப்பட வேண்டியதில்லை. அப்படியந்த 10-நாளைக்குள் முன் சொன்னபடி வியாதி படியாமலும், ஆகாரத்தில் வெறுப்பும் பலக்குறைவும் உண்டானால்-4-ம் முறையாகிய 11-ம் நாளையும், அதிலும் தப்பினால்-5-ம் முறையாகிய 14-ம் நாளையும் இப்படியே முறையே 18, 21, 25, நாள்வரையில் நிதானித்து வரவேண்டும். இந்நாட்களில் வியாதி கொஞ்சத்திற் கொஞ்சமேனும் படிந்துவரின் சவுக்கியத்திற்கு ஏதுவென எதிர்பார்க்கலாம். அப்படிக்கில்லாமல் வியாதிபடியாமலிருந்தால் விரோதநேரிடும்,

இந்த 25 - நாள்களும் தப்பித்துக் கொண்டு; பின்பேனும் அறிவு, ஆகாரத்தில் இஷ்டம் முதலியவைகளுண்டாகி விட்டால் பிஞ்சிப்பிழைக்க ஏதுவாகும்.

—※—

## பிளேக் கட்டிகள்.

கட்டிகாண்பது இந்த வியாதியில் ஒரு பிரதான குறியாகையால் அது புறப்படும் ஸ்தானபேதம், வருணபேதம் முதலியவைகளையும் நாம் சற்று விபரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் ஆவசியகமானபடியால் அவற்றையிங் கெழுதுவாம்.

இந்த வியாதியில் கட்டிகாண்கிற ஸ்தானங்கள் நாம் சொன்னவைகளான கண்டம், கக்கம், கவட்டி முதலியவைகளே முக்கியமான ஸ்தானங்களாயினும் சில சமயம் மார்பு, வயிறு; குடற்கள் முதலிய ஸ்தானங்களில் நச்சுக்கட்டிகளும் காண்பதுண்டு. மேலும் தேகாதிபர்தமும் சிவந்த சிறு கொப்பிளங்கள் காண்பதுமுண்டு. இவ்விதங் காண்பது நிச்சயமான அசாத்திய வியாதியென தீர்மானிக்க வேண்டியது. இன்னும் இவ்வகைக் கொப்பிளங்கள் முடிவில் கறுத்து விடுவதுண்டு. இது நிமித்தமாகவே யிவ்வித பிளேகிற்கு பிளாக் டெத் (Black death) என ஐரோப்பியாவில் பெயருண்டாயிற்று.

இந்தக் கட்டிகளில் அதிகக்கடினமான எரிவந்தம், குற்றல் முதலிய வேதனைகளுண்டு. இந்தக் கட்டிகளிலிருந்து சில சமயம் மஞ்சள் வருணமான நீரும், சிலசமயம் சீழும் வெளிப்படுவதுமுண்டு. நாம் முன்சொன்னபடி இவைபழுக்காமலே யமுங்கிப் போவதும் பழுத்துடைவதுமுண்டு.



கொடூரமான பிளேகில் கட்டிகாணாமலே நோயாளி மரணமடைவதுமுண்டு. இன்னும் பிளேக் ஆனது அதிகக்கொடூரமாய்ப் பரவிநிற்கும் காலங்களில், கட்டியும் சுரமும் காணுதற்கு முன்பே திடீரென மரணம் சம்பவிப்பதைப் பல தடவைகள் காணப்பட்டிருக்கின்றன. பிளேகின் லக்ஷணக் கிரமமாய் இவ்வித மரணத்தை பிளேக்மரணமென சொல்லலாகாதெனினும், அந்த பிளேக் ஆனது கொடூரமாய்ப் பரவிநிற்கும் காலங்களில், அதன் விஷதருமம் இருதயத்தில் தாக்கி, கட்டி, சுரம் முதலியவைகளுண்டாவதற்குமுன்பே ஆளைக்கொன்று விடுகிறதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆயால் அந்தநோய் கொடூரமாய்ப் பரவிநிற்கும் காலங்களில் இவ்விதம் நேரிடும் மரணத்தையும் பிளேகினாலுண்டானதென தீர்மானிக்க வேண்டும்.

—※—

## பிளேக் கட்டிகளின் வகைகள்.

—※—

இக்கட்டிகள் பலவகை வருணமுள்ளனவாகவும் பலவகை ரூபமுள்ளதாகவுமிருக்கும். வருணங்களில் பெரும்பாலும் சிவப்பு, கறுப்பு, மஞ்சள் நீலம் ஆகிய வருணமுள்ளவைகளாய்க் காணப்படுகின்றன. சிலசமயம் சிறுபான்மை வேறுவித வருணங்களுடனும் காணப்படுகின்றன. இந்த வருணங்களின் பேதத்திற்கு இரண்டுவகை காரணங்களுண்டு. (1) கட்டியை யுண்டுபண்ணும் ஜந்துக்களின் வர்ணபேதம் (2) ஜந்தானது அளவில் ஏற்றக்கு

றைச்சலாயிருப்பதின் பேதம் ஆகிய இரண்டே பிரதானம்.

சந்தக்களில் ஒன்றாகிய இரத்தத்தைப்பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். இரத்தமானது குறைந்தால் தேகம் மஞ்சணித்து மினுமினுக்கிறது. இரத்தமானது சமமாயிருந்தால் தேகமும் முகமும் சிவந்திருக்கிறது. வழக்கத்தைப்பார்க்கிலும் இது அதிகமாயிருந்தால் கறுத்துக் காண்பிக்கின்றது. இதை இரத்தக் கட்டியிற்காணலாம்.

இன்னும் கடல் ஜலம் ஒன்றேயாயினும் அந்தந்த விடத்தின் ஆழத்திற்குத் தகுந்ததுபோலவே அதன் வருணமும் பேதப்பட்டுக் காண்கிறது. ஆகையால் ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்றதுபோல், கருங்கடல் செங்கடல் என பலவகைப் பெயர்களிடப்பட்டிருக்கின்றது இதுபோலவேயாம்.

பிளேக் கட்டிகள் யூனானி பண்டிதர்களினால் பெரும்பாலும்-8-வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன.

(1) மசூரிகைக்கட்டி, (2) கோத்திரவக்கட்டி, (3) அருணக்கட்டி, (4) காஞ்சனிக்கட்டி, (5) சாமளக்கட்டி, (6) பனப்ஸஜிகட்டி, (7) விபுலக்கட்டி, (8) மாயக்கட்டி ஆகியவைகளாம்.

(1) மசூரிகைக்கட்டி. இது கடலைப்பிரமாணமுள்ளது. இது இரத்தசிலேஷ்ம சம்பந்தச் சத்தினாலுண்டாகிறது. இது மற்றவகைகளைப் பார்க்கிலும் மிதமானது. ஆனால் இது கஷ்டத்தோடு பழுக்கும். ஒருவேளை பழுக்காமலே அப்படியேயிருக்கும். இது கண்டபின் ரோகியின் புத்தி தடுமாற்றங்கண்டால் அசாத்தியமாம்.



(2) கோத்திரவக்கட்டி. இது வரகைப்போல கடினமாயுள்ளது. இதுவும் இரத்த சிலேஷ்ம சம்பந்த சத்தினாலுண்டாகும். இது-௬-நாளையில் அசாத்தியமாம்.

(3) அருணக்கட்டி, இது மிகுசிவப்பையுடையது. இரத்தமானது விஷதருமத்தைப் பெற்றாலுண்டாகிறது. தேக சருமத்தின்மீது, ஈர இரத்தத்தைத் தெளித்ததுபோல அவ்வளவு மிகு சிவப்பாயிருந்து, தேக சருமத்திற்கு மேலெழும்பாமல், அதன்மேல் பூசினதுபோலிருக்கின் மிகக்கொடியது. ஆளையுடனேகொல்லும். ஆனால் குறைந்த சிவப்பையுடையது மசூரிகைக்கட்டியைப் பார்க்கிலும் சற்று இலேசானதே. இந்த இரத்ததோஷக் கட்டியானது மிகு சிவப்பாயிருந்து, 9 - நாட்சென்றால் 10-ம் நாள் ரூபாயைப்போல அகன்றுகாணும். அதைக் கீறினால் துர்க்கந்தமான இரத்தம் வெளிப்படும். அது உண்டாயிருந்த அவயவத்தை முகர்ந்தாலும் அதுவும் அழுகல் துர்க்கந்த நாற்றமாகவே நாறும். இது பதினெட்டுநாளைக்குமேல் மனிதனை விடாது,

(4) காஞ்சனிக்கட்டி. இது செஞ்சாயலான மஞ்சள் வருணமுள்ளது. இது பித்ததோஷத்தினால் உண்டாகிறது. இது முன் சொல்லப்பட்ட அருணக்கட்டியைப் பார்க்கிலும் சற்றுகொடியது. ஆனால் இதில் எரிவந்தம், தீக்ஷணியம் ஆகியவைகளிருந்தால் அசாத்தியமே.

(5) சாமளக்கட்டி. இது பச்சைநிற முடையது. இது பித்தவாத தோஷத்தினு லுண்டாகிறது. இதுவும் கொடியதே.

(6) பனப்ஸஜிக்கட்டி. இது பனப்ஷாபூவின்வருணமுடையது. இது இரத்த வாததோஷ சம்பந்தத்தினு லுண்டாகிறது. இதுவும் விஷத்தன்மையுடையதே.

(7) விபுலக்கட்டி. இது மண் வருணத்தைப் போன்றது. இது வாததோஷ இரத்த சம்பந்தத்தினு லுண்டாகிறது. இதுவும் கொடியதே.

(8) மாயக்கட்டி. இது கறுப்புவருண முடையது. இது இரத்தவாத தோஷங்களினு லுண்டாகும். இது எல்லாவகைகளைப் பார்க்கிலும் மிக்க கொடியது.

—※—

## பிளேக் கட்டிகளின் சாத்தியா சாத்தியம்.

—※—

இந்தக்கட்டியுடன் சுரமும் இருதயத்துடிப்பும் இல்லையாயின் சாத்தியமாம்.

கண்டம், கக்கம் ஆகிய ஸ்தானங்களைத் தவிர மற்ற ஸ்தானங்களில் கட்டி கண்டால் அசாத்தியமாகாது.

கண்டம், கக்கம் ஆகியஸ்தானங்களில் கண்டால் அசாத்தியமே.

சிலசமயம் அமுங்குகிறதும் சில சமயம் எழும்புகிறதுமாயிருக்கிற கட்டியானது கொடியது, முக்-



கியமாய் பனப்ஸஜிக்கட்டி யெப்படியானும் அசாத்தியமாம். இது அமுங்கும்போதும் அழுந்தும்போதும் மயக்கமுண்டாவதே யிதன் லக்ஷணமாம்.

மண்வருணமுள்ள கட்டியெழும்பி அதன் மத்தியில் கரும்புள்ளிகள் விழுந்தால் கொடியது.

எழும்பும் கொப்புளமானது உருண்டையாயில்லாமல் கோணலுள்ளதா யிருப்பதும் அல்லது அதைச்சுற்றிலும் பலவகை ரூபமுள்ள கொப்புளத்தையுடைத்தாயிருப்பதும் கொடியதே,

அக்கிம்-பூ-அலி-சீனுவும் மற்ற பண்டிதர்களும் சொல்லியிருக்கிறதாவது - குறைந்த சிவப்பு வருணமுள்ளது சாத்தியமாம். மஞ்சள் வருணமுள்ளது குறைந்த சிவப்புள்ள கட்டியைப்பார்க்கிலும் அதிக அபாயகரமானது.

பச்சை, நீலம் ஆகிய வருணங்களுள்ளது மஞ்சள் வருணமுள்ளதைப் பார்க்கிலும் அபாயகரமானது.

கறுப்பு வருணமுள்ளது எல்லாவற்றைப் பார்க்கிலும் கொடியது என்பதே,

## விண்ணப்பம்.

இந்தப் பிளேக்நோயில் சுரம் ஆதியா? கட்டி ஆதியா? என்னும் சந்தேகம் வெகுநாளா யிருக்கிறதாகக் காணப்படுகிறது. இதைப்பற்றி யொவ்வொருசுகவித்காரரும் அநேகமாய் எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது.

பிளேக்நோயில் சுரந்தான் ஆதியென்று சொல்கிறவர்களெல்லாம், இந்த நோயாளிகளில் அநேகருக்கு சுரங்கண்டே கட்டியுண்டாயிருக்கிறதென்றும், சிலருக்கு இதன் ஆரம்பமுதல்முடிவுவரையில் கட்டி கண்டதில்லையென்றும் ஆகையால் பிளேக் என்பது ஒருவித சுர வகையேயென்றும், கட்டிமுதலியகள் அதன் லட்சணமென்றும்சொல்கின்றார்கள். இதற் காதாரமாக பம்பாயில் அநேகருக்குக் கட்டி காணவில்லையென்றும், பெங்களூரில் பெரும்பாலார்க்கு கட்டிகாணுமலே சுர மாத்திர மிருந்ததாகவும் தெரியவருகிறது.

இது வாஸ்தவமேயாயினும், சாதாரணசுரத்திற்குமுன்பு தலைநோய், ஓக்காளம், சோர்வு தேகத்திலுளைச்சல் முதலிய லக்ஷணங்கள் காண்கின்றன.

சிலசமயம் சுரங்காணுமலே தலைவலி, மூளையதிர்ச்சி, மயக்கம் முதலியவைகளுண்டாகின்றன.

இன்னும் சந்நிபாத சுரங்களிலும் இந்தப் பிளேக் நோயில் காணப்படும் லக்ஷணங்களான புத்திதடுமாற்றம், அரட்டல் புரட்டல், நாவில் முள் முளைத்தல் முதலிய தோஷ லக்ஷணங்கள் காணப்படுகின்றன.

வேறு சிலர் இந்த பிளேகிற்கு கட்டியே பிரதானமென்கிறார்கள். சுர முதலியவைகள் அதன் லக்ஷணமென்கிறார்கள். இதற்காதாரமாக இப்போது பம்பாயில் இந்த நோயினு லிறந்தவர்களுள் நூற்றிற்கு எண்பது தொண்ணூறு பெயர்களுக்குக் கட்டியுண்டாயிருந்ததே காரணம் என்கிறார்கள்.



இதுவும் வாஸ்தவமேயாயினும் சாதாரணக் கட்டிகளிலும், அரையாப்புக் கட்டிகளிலும், வீக்கங்களிலும் சுர முதலிய லக்ஷணங்கள் காண்கின்றன. மேலும் சாதாரண கட்டியின் தீக்ஷணிய சத்து எவ்வளவாய் அதிகரித்திருக்கிறதோ அவ்வளவாய் கடின சுரம், அரட்டல், புரட்டல் முதலிய சந்நிபாத லக்ஷணங்களும் காணப்படுகின்றன.

ஆகையால் ஒருவருக்கு சுரமும் கட்டியுமிருந்தாலும், சுரமின்றி கட்டிமாத்திரம் கண்டாலும், கட்டியின்றி சுரமாத்திரங் கண்டாலும், முன்சொல்லப்பட்ட ரோக லக்ஷணங்களுடன் ஊர்நிலைமை, ரோகியின் நடவடிக்கை முதலியவைகளையும் தீர்க்கமாய்க் கவனித்து நிச்சயப்படுத்த வேண்டியது முக்கியத்திலும் முக்கியம். அப்படிக்கில்லையாயின் இருவழியாலும் அபாயத்திற் கேதுவாகும்.

—※—

## இந்தப்பிளேக் தொற்றிப் பரவுமென்

—※—

நாம் முன் வாசித்த சரித்திரங்களினால் இது தொற்றிப்பரவும் சுபாவம் முடையதெனத் தெரிந்தே யிருக்கிறது. ஆயினும் அந்தச் சரித்திரங்களுள் சிலவற்றையும், வேறு சிலவற்றையும் இங்கு ஆதாரமாய்க் காண்பிப்பாம். தொற்று அல்லது ஒட்டு இரண்டுவகைப்படும். (1) ஒரு ரோகியை அல்லது ரோகி உபயோகித்த வஸ்துக்களைத் தொடுவதினால் சுகமாயிருக்கிறவர்களிடம் தொற்றுதல். (2) அந்த ரோகியையும் அவ னுபயோகித்த வஸ்துக்களையும் தொடாமலே சுகமாயிருக்கிறவர்களிடம்

தொற்றுதல். ஆகிய இந்த இரண்டு விதத்தொற்றும் இந்தப் பிளேகிற்கு உண்டு. இந்த விஷயம் பின் காணப்படும் சங்கதிகளால் நன்கு விளங்கும். அவையாவன.

1603-ம் வருஷத்தில் லண்டனில் உண்டான இக்கொள்ளை நோயானது எந்த வீட்டில் நுழைந்ததோ அந்த வீட்டிலுள்ள எல்லோரையும் தனக்கிரையாக்கிக்கொண்டது.

டாக்டர் பர்னீர்துரையவர்கள் தன் தேசசஞ்சார சரித்திரபுத்தகத்தில் பின் வருமாறு எழுதுகிறார் "டாஸ்டியா நகரத்திலுள்ள மான்ஷியர் தி பர்மக் என்னும் துரை தன் கிரகத்தில் ஒரு இரவு ஒரு விருந்து செய்தனர். அந்த விருந்தை யருந்தின எல்லோரும் தட்சணமே அந்த இரவிலேயே பிளேக் நோயில் சிக்குண்டார்கள். நானும் இந்தத் தொற்றுவியாதியில் சிக்குண்டு கஷ்டப்பட்டேன். ஆனால் உடனே வாந்திபவுடத்தை யுட்கொண்டு வாந்தி[illegible]பின் தப்பிப்பிழைத்தேன்" தொற்றுவியாதியஸ்தன் கைப்பட்ட சில வஸ்துக்கள் விருந்தில் வைக்கப்பட்டதே யிதற்குக் காரணம்.

ரஷ்யாதேசத்தில் பிளேக்நோயினால் மரணமடைந்தவர்களை படக்கஞ்செய்து கொண்டிருந்த எல்லோரும் அந்த வியாதியினாலேயே மாண்டார்கள்.

1832-ம் வருஷம் பூஷ்க்ரா நகரத்தில் உண்டான பிளேகினாலிறந்தவர்களை படக்கஞ்செய்ய பாரிய சம்பளத்தில் நியமிக்கப்பட்ட 100-பெயர்களில் 4-பெயர்கள் பிழைத்தார்களென நாம் முன் வாசித்திருக்கிறோம்



1835-ம் வருஷம் எகிப்திலுள்ள இரண்டு குற்றவாளிகள், பிளேக் நோயினால் மரணமடைந்த இருவர்களின் படுக்கையில் படுக்கவைக்கப்பட்டார்கள். அவர்களுக்கும் அந்தவியாதியுண்டாயிற்று.

1665-ம் வருஷம் லண்டன்நகரத்தினின்று டர்பைஷயரின் சில நாடுகளுக்கு அனுப்பப்பட்ட சில பார்சல் (தபால் மூட்டை) மூலமாய் அவ்விடங்களில் கொள்ளைநோய் பரவினது.

1723-ம் வருஷத்தில் கார்பூவிலிருந்து ஸிஸிலியிலுள்ள மீஸீனிற்கு ஒருகப்பல்வந்தது. அதன் மூலமாய் அந்த நகரத்தில் கொள்ளைநோய் பரவி 40-அல்லது 50-ஆயிரம் ஜனங்களைக் கொன்றுபோனது. இக்கொள்ளை நோயானது தொற்றுவியாதிதான் என நிச்சயப்படுத்த இன்னும் அநேக சரித்திராதார அத்தாக்ஷிகளுள.

ஆனால் சொற்பகாலத்துக்கு முன் பம்பாய் பிளேகைப்பற்றி விசாரிக்கும்படி ஏற்படுத்தப்பட்ட சில டாக்டர்கள், அங்குண்டாயிருக்கிற அந்தநோயானது அந்த ஸ்தானத்திற்குரிய காரணத்தினால் (Local cause) ஆல் உண்டானதாகையால் அது தொற்றாதென முன் அபிப்பிராயப் பட்டதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது. சுகாதார ரட்சகர்த்தர்களும், போலீஸ் ஆபீஸர்களும் அதிககோரமான பிளேக் நோயாளிகளிடத்தில் போகநேரிட்டும், அவர்களுக்குக் கொள்ளைநோய் தொற்றவில்லையென அவர்கள் சாக்ஷி பகர்ந்திருக்கிறார்கள்.

தொற்றுவியாதியென்னும் நோய்களெல்லாம் ஒவ்வொருவரிடமும் ஊடுருவிச்சென்று தொற்ற

வேண்டுமென்பது ஆவசியகமல்ல. வசூரிகைநோய், குஷ்டம், முதலிய இன்னும் சில வியாதிகளானவை, தொற்றுவியாதிகளென எல்லாவகைப் பண்டிதர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டவைகள், ஆனால் இந்த வியாதியஸ்தர்களோடு கூடிக்குலாவி யிருப்பவர்களுள் அநேகர் அந்த வியாதிகளில் சிக்கிக்கொண்டிருப்பதையும், அநேகர் அந்த வியாதியஸ்தர்களோடு கூடிக்குலாவியிருந்தும் அந்த வியாதிகளுக்குள் சிக்காமலிருப்பதையும் நாம் கண்ணினாற்காண்கின்றோம். ஆகையால் சிலருக்கு அவர்கள் தேகப்பிரகிருதி விகற்பத்தினால் ஒருவியாதி தொற்றவில்லையென்றால் அந்த வியாதி தொற்றல்லவென்பது அழகாகாது. அப்படியே பம்பாய், பெங்களூர் முதலிய இந்தியாவின் பல விடங்களில் இப்போது உண்டாயிருக்கிற பிளேகானது சிலருக்குந் தொற்றவில்லை, ஆகையால் அது தொற்றுவியாதி யல்லவென்பது ஒருக்காலும் நியாயத்திற்கு நிற்காது.

இப்படிச்சொல்வது இவர்கள் மாத்திரமல்ல. ஐரோப்பாவிலுள்ள பண்டிதர்களுள் ஒரு கூட்டத்தார், கொள்ளைநோயானது தொற்றல்லவெனச் சொல்லி அநேக அத்தாக்ஷிகள் காண்பித்திருக்கின்றார்கள், அவற்றுள் சில வற்றையும் இங்கு சுருக்கமாய் எழுதுவாம். அவையாவன.

1735-ம் வருஷம் கெய்ரோபட்டணத்தில் இக்கொள்ளை நோய்க் குள்பட்ட மூவாயிரம்பெயர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டுவந்தார்கள். அவர்கள் உபயோகப் படுத்தின படுக்கைகளையே (அந்த நோயில்லாத வேறு சிலரும் உபயோகித்து வந்தும் அவர்களுக்கு அந்த வியாதி தொற்றவில்லை.



1878-ம் வருஷம், ருஷியாவின் சில நாடுகளில் 2-மாதம் வரையில் இக்கொள்ளைநோய் பரவியிருந்தது. இந்த இரண்டுமாசத்திற்குள் இக்கொள்ளைநோய்கண்ட ஊரார்கள் மறு ஊர்களுக்கு வரத்துப்போக்காயிருந்தும் மற்ற ஊரார்களுக்குத் தொற்றவில்லை.

1734-ம் வருஷத்தில் 8-மாதம் வரையில் ஸ்கந்திரியாப்பட்டணத்தில் கொள்ளைநோயுண்டாயிருந்தது. ஆனால் அதனால் அவ்வூர் வியாபாரம் ஒன்றும் பாதிக்கப்படவில்லை.

இன்னும் இவ்வித அநேக சம்பவங்கள் சரித்திரங்களினால் நிச்சயப்படுகின்றன. நாம் அவற்றையெல்லாம் சரியென ஒப்புக்கொண்டபின் நாம் பின்வருகிற விதமாய் யோசிக்கவேண்டியது ஆவசியகம்.

பிளேக் வியாதியானது ஆரம்பமுதல் இலேசாக விருந்தாலும், அல்லது அது ஒழிந்துபோகும் சமயமாயிருந்தாலும், அந்தச் சமயங்களில் அது தொற்றுதலும் பரவுதலும் குறைந்த அளவாயிருக்கும். சில சமயம் தொற்றாமலே யிருக்கிறதாகவுங் காணப்படுகிறது. இன்னும் சிலவகுப்பார்களின் பழக்க வழக்கங்களும், வேறு சிலர் அநுஷ்டிக்கும் பரிசுத்தம், ஆகாரம், பானம், சலம் முதலிய பராமரிப்புகளும், இக்கொள்ளை நோயானது, சுபாவமாய்த் தொற்றுனதாயினும், அதனின்றும் தப்பித்துக்கொள்ள ஏதுவாகின்றன. நமது தேசத்தில் விஷபேதி முதலிய தொற்றுவியாதிகளினால் பிராமணர்கள், மற்ற சாதிகளைப்போல அவ்வளவாய் சேதப்படுகிற

தில்லை. இதற்குக் காரணம் அவர்கள் ஸ்நாநம் பரிசுத்தம் முதலியவைகளே.

நாகரிகமும் சீர்திருத்தமுமுள்ள ஒவ்வொரு அரசாங்கத்தாரும், இதர தேசங்களில் இந்த வியாதியுண்டானால், உடனே ஆங்காங்கு குவாரன்டைன் சட்டம், பிரிவினைசட்டம் (Segregation) முதலிய ஏற்பாடுகளை நியமித்து, அந்த வியாதியானது தங்கள் தேசத்திலும் தொற்றிப் பரவாதபடி அதிக எச்சரிக்கையா யிருக்கின்றார்கள். ஏனெனில் தங்கள் பிரஜைகள் இக்கொடிய வியாதியினின்றும் காப்பாற்றப்பட வேண்டுமென்னும் நன்னோக்கமே பிரதானம்.

பம்பாயில் பிளேக் உண்டானவுடன் நமது காருண்ணிய கவர்னமெண்டார் இந்தியா முழுவதிலுமுள்ள றயில்வே சந்திகளிலும், ஆங்காங்குள்ள எல்லைப் பிரதேசங்களிலும் இந்த வியாதியுள்ள விடங்களிலுள்ளவர்கள் வேறிடங்களிற்சென்று அவ்விடத்திலும் பரவச்செய்யாமல் தடுக்கும்படியாகவும், இந்த வியாதியுள்ளாரென சந்தேகப்பட்டவர்களை பரீக்ஷித்துத் தடுக்கும்படியாகவும் டாக்டர்மார்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஏனெனில் இந்தப்பிளை வியாதியினின்றும் எல்லோரும் காக்கப்படவேண்டுமென்பதே. பம்பாயிலுள்ள சில நோயாளிகள் பூனா, கராச்சி, பெங்களூர் முதலிய சிலவிடங்களில் கள்ளத்தனமாய் வந்தபடியால் அவ்விடங்களிலும் இந்தவியாதி உலாவித் திரிகின்றது. அப்படியும் அது பரவாதிருக்கும்படி எவ்வளவோ முயற்சிகள் செய்துவருவது எல்லோருக்கும் பிரசித்தமாய்த் தெரிந்திருக்கிறது. அந்தவியாதி இந்த மத்ராஸில் வரா



மல்தடுக்க என்னென்ன முயற்சிகள் செய்துவருகிறார்களென்பதை நாம் கண்ணாறக் காண்கின்றோம்.

இத்தியாதி விஷயங்களையும் நாம் யோசிக்குங்கால் இந்தப் பிளேகானது எல்லாவிதத்திலும் மற்ற தொற்று வியாதிகளைப்போலவே தொற்றி ஒட்டிப்பரவும் என்பதில் ஒருவித சந்தேகமுமில்லையென்பதே தீர்மானம்.

—*—

## பிளேகைத் தடுக்க முன் எச்சரிக்கை.

—*—

மருந்தைவிட மறிப்பே நலம் (Prevention is better than cure) என்னும் ஆன்றோர் வாக்கியப்படி இந்தத் துஷ்ட நோயானது இங்குதலைகாட்டுமுன் அதைத்தடுக்க நாம் எல்லோரும் முயற்சி செய்யவேண்டியது மிகவும் முக்கியம். மேலும் நமது மாட்சிமைதங்கிய கவர்னமெண்டாரும் இந்தப்பிளை நோய் இங்கு வாராமலும், வந்தாலும் பரவாமலும் தடுக்கும் பொருட்டு ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களையும் விதிகளையும் மனதிற் கொண்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிந்து, நாமொவ்வொருவரும் மனப்பூர்வமாகவும் உண்மையாகவும் அவர்களுக்குதவி செய்யவேண்டியது முக்கியத்திலும் அதிமுக்கியம். ஆகையால், புத்திமான்களாகிய ஒவ்வொருவரும் அந்தச்சட்டங்களையும், விதிகளையும், பிரத்தியேக விதிகளையுமறிந்து, அதன்படியே நடக்க முயற்சிசெய்யவேண்டியது. அப்படியே தம் பந்துஜன

மித்திரர்களையும் அவ்விதம் நடக்கத் தூண்டுதல் செய்யவேண்டியது. அப்படிச்செய்வதினால் தமது சுகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், இந்தக் கொடியவியாதி வாராமல் தடுத்துக் கொள்ளவும், ஒருவேளை வரினும் இலகுவாய் போக்கிக்கொள்ளவும் கூடும். மேலும் பிறருடைய சுகமுதலியவைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும், முக்கியமாய் நமது மனைவி மக்களுடைய சுகத்தைப் பாதுகாக்கவேண்டியதாகின்றோம். இவ்விதம் நாமொருவருக்கொருவர் உதவியாகி, குடும்பம், ஊர், நாடு, தேசம் முழுமையும் இந்தப் பிராணநாசகாரி வியாதி வாராமல் சுகம் பெற்றிருக்க உதவிசெய்கின்றவராகின்றோம். நாம் இதற்காக (1) வாசஸ்தான சுத்தம். (2) தேகசுத்தம். (3) மகா மாரிப்பால் குத்திக்கொள்ளல் ஆகியவைகளைக் கவனித்து அந்த விதிகளையனுஷ்டிக்கவேண்டியது.

—※—

## 1. வாசஸ்தானம்.

—※—

இதைப்பற்றிய விதிகள், ஸர்ஜன், லெப்டினண்ட் கர்னல் கிங் துரையவர்கள் செய்திருக்கிற (சுகாதார விளக்கச்சுருக்கம்) (Simple sanitary Rules) என்னும் நூலில் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருப்பதால் அந்தவிதிகளையே முன்னர் எழுதுவோம். அவை பின் வருகிறவிதமாம்.

(1) ஒவ்வொருவீடும் பூரணமாகவும் திருத்தமாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டும். அதாவது எல்லாவித விசர்க்கங்களையும், அசுத்தசலத்தையும்



மாடு முதலிய மிருகங்களின் தொழுவங்கள் கழுவப்பட்ட சலத்தையும், மற்றெந்த வித குப்பையையும் பூர்த்தியாய் அப்புறப்படுத்தவேண்டும்.

(2) அப்படி அப்புறப்படுத்திய பின், தரையானது ஈரமாயும் அசுத்தமாயும் இருக்குமாயின், அவ்விடத்தை வெட்டி, காய்ந்ததும் சுத்தமானதுமான மண் காணப்படுகிற வரையில், தோண்டியெடுக்கவேண்டும்.

(3) அப்படி யெடுக்கப்பட்ட பழய மண்ணைப் பட்டணத்தினின்றும் அப்புறப்படுத்தித் துலைவிலிருக்கும் வயல் முதலியவைகளுக்கு எருவாக உபயோகப் படுத்தலாம். அப்புறப் படுத்திய பழய மண்ணுக்குப் பதிலாய் சுத்தமான வேரிடத்திலிருந்தெடுத்த புது மண்ணைப்போடவேண்டும்.

(4) வீடுகளை உள்ளும் புறமும் சுண்ணாம்பு வெள்ளையடிக்கவேண்டும். வெளிப்புறத்தைச் சுண்ணாம்பு அடிக்க சக்தியில்லாத ஜனங்கள் உட்புறத்தையாவது சுண்ணாம்பு வெள்ளையடிக்கவேண்டும்.

(5) துணி மூட்டைகளையும், தூலங்களிலே தொங்கிக்கொண்டிருக்கும் அல்லது ஜனங்கள் நித்திரைசெய்யும் அறைகளில் அடைத்துக் கொண்டிருக்கும் சாமான்களையும் அப்புறப்படுத்தவேண்டும்.

(6) காற்று விசாலமாயுலாவுதற்குக் கதவுகளையும் ஜன்னல்களையும் கூடுமானபோதெல்லாம் திறந்து வைக்கவேண்டும்.

(7) வீடுகளிற் பிரத்தியேகக் கொல்லை (புறக்கடை) களிருந்தால், அவைகளில் மலஜல விசர்க்கங்

கள் குவியாதபடிக்குப் பிரதிதினமும் குறைந்தபட்சம் இருமுறையாகிலும், அவற்றை யப்புறப்படுத்திச் சுத்தமாக வைக்கவேண்டும்.

(8) வீட்டிலுள்ள ஜலதாரைகள் பிரதிதினமும் இருமுறை சுத்திசெய்யப்படவேண்டும்.

(9) ஜலதாரைத் தண்ணீர் சேர்ந்து நிற்குமிடங்களையும், மாடு குதிரைகள் பெய்யும் மூத்திரம் விழும் குழிகளையும் பிரதிதினமும் அவற்றிலுள்ளவைகளை நீக்கிச் சுத்திசெய்யவேண்டும்.

—*—

## 2. தேகம்.

—*—

(1) தேகத்தையும் வஸ்திரத்தையும் எச்சரிக்கையுடன் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். மென்மையான சுபாவமுடையவர்கள், குளிர்ந்தசலத்தைத் தவிர்த்து, வெந்நீர் ஸ்நாநம் செய்யவேண்டும்.

(2) ஆகாரம் சாதாரணமானதும், போஷணையுள்ளதும், தகுந்த குணமுள்ளதாயு மிருக்கவேண்டும்.

(3) வயிற்றுப்போக்கை யுண்டாக்கும் எல்லாவித மரக்கறிபதார்த்தங்களையும், கீரைகளையும், பழங்களையும் விலக்கவேண்டும்.

(4) மிதம்மீறின எல்லாவித மதுபானம், தூர்த்தத்தனம், பெருந்திண்டி, நெடுநேரம் இரவில் நித்திரையின்றிக் கண்விழித்தல், பனியிலும் வெயிலிலும் திரிதல் முதலியவற்றை விலக்க வேண்டும்.



(5) சமைத்து ஆறிப்போன போஜனத்தைச் சாப்பிடலாகாது. போஜனத்தின் பேரில், ஈக்கள் உட்கார விடலாகாது. மரக்கறி பதார்த்தங்களையும், கீரைகளையும், சமைக்காமல் சாப்பிடலாகாது. இந்தப் பதார்த்தங்களை சமைக்கிறதற்குமுன், சுடவைத்து சு[illegible]யா[illegible]பட்ட வெந்நீரினால் இவைகளை செவ்வையாகக் கழுவி சுத்திசெய்ய வேண்டும். போஜன பதார்த்தங்களில் உப்பை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் வயிற்றுப் போக்கையும், உபத்திரவத்தையும் உண்டாவதற் கேதுவாகவும் அபரிமிதமாய்ச் சேர்க்கலாகாது.

(6) கீழ்த்தரமான ஜலத்தை வீட்டில் வைத்திருக்கலாகாது. கிடைக்கக்கூடுமான சுத்த ஜலத்தையே யுபயோகப்படுத்த வேண்டும்.

(7) பானம் பண்ணுவதற்கும், வாய்கழுவுவதற்கும், போஜனபானம் செய்யும் பாத்திரங்களைக் கழுவுவதற்கும் உபயோகிக்கும் சலத்தையும் பாலையும் அப்படி யுபயோகிப்பதற்குமுன் காய்ச்சவேண்டும்.

(8) வெட்டுக்காய முள்ளவர்களும், கைகால் முதலிய திறந்த விடங்களில் தோல் உராய்ந்து தேய்ந்திருக்கப் பெற்றவர்களும் இந்த பம்பாய் பிளேக் வியாதி கண்டவர்களோடு நெருங்கியிருப்பது அவசியமானால் காயம்பட்டவிடங்களை மூடிக்கொண்டிருக்க வேண்டும். அப்படி நெருங்கியிருந்து சிற்சில சமயம் அவர்களை விட்டு நீங்கும்போது மேற்படி காயம்பட்ட விடங்களை விஷநிவாரண திராவகங்களால் கழுவவேண்டும். இந்தத் திராவகம் சானிட்டேரி டிபார்ட்மென்ட் உத்தியோகஸ்தரைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட விதிகளெல்லாம் நாம் ஒவ்வொருவரும் இலகுவாய் அநுசரிக்கக் கூடியவைகளே. ஆனால் சிலர் இதன் கருத்தை யறியாமலே தங்களிஷ்டம் போலும் மனம்போனவழியாகப் பேசுவார்கள். அத்தகையினர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர்கள் விளங்கிக் கொள்ளும்படி ம[illegible] புக்[illegible]ான்கள் இதனைப் படித்துச் சொல்ல வேண்டியது ஆவசியகம்.

—※—

## மஹாமாரிப்பால் குற்றல் (Inoculation)

—※—

இந்த விஷயம் நமது ராஜதானியி லுள்ளவர்களில் அநேகருக்கு, பிளேகானது இங்கு எப்படி நூதன வியாதியோ அப்படிப்போலவும் இதுவும் நூதனமானதா யிருக்கும். இதன் பிரயோஜனத்தை பெறுமுன், இந்த மஹாமாரிப்பாலை யுண்டாக்கும்விதம், அது கண்டுபிடிக்கப்பட்டவிதம், அதைக் குத்தும் விதம் அதனால் இதுவரையில் உண்டான பிரயோஜனம் முதலியவைகளைத் தெரிந்துகொண்டால், இப்போது அதிலுள்ள பயம், சந்தேகம் ஆகியவைகளொழிந்து அதை யாவரும் அநுஷ்டிக்க ஏதுவாகும். ஆகையால் அந்த விஷயங்களை, மேஜர்பான்னர்மான் துரை யவர்களும் இன்னும் வேறு சிலரும் இதைப்பற்றிச்செய்த பிரசங்கங்களின் கருத்தையும், வேறுவித ஆதாரப்படி கிடைத்தவைகளின் கருத்தையும் சுருக்கமாய் எழுதுவாம்.

அம்மைப்பால் குத்துவதினால் அந்த வைசூரி நோயானது வராமல் தடுக்கப்படுகிறது. ஆகையால் அது ஒரு நிச்சயமான மறிப்பென்பது எவ்



ராலும் மறக்கப்படாத விஷயம். இது ஒவ்வொருவருக்கும் அநுபவத்தினால் பிரசித்தமாய்த் தெரிந்தகாரியம். அம்மைப்பால் குத்திக்கொள்ளும் விதியேற்படுமுன், நம்மவர்களுள் அநேகர் கண்ணிழந்தார்கள். அநேகர் லக்ஷணமாயுள்ள முகமானது அவலக்ஷணமடையப் பெற்றார்கள். இவ்விதம் பலவகை துன்பத்திற்குள்ளானதுமன்றி அநேகர் அதற்கிரையுமானார்கள். அம்மைப்பால் குத்தும் ஏற்பாடுண்டான பின், அவ்வித அபாயங்களில்லை, எல்லோரும் அந்த வியாதியினின்றும் காக்கப்படுகிறார்கள். அப்படியொருவேளை அந்த வியாதிவந்தாலும் மிகவும் சொற்பமாயொழிகிறது. இத்தியாதி விஷயங்களும் நாமெடுத்துச் சொல்லாமலே பிரமாணசாக்ஷியாய் யாவருக்குந் தெரிந்தேயிருக்கின்றன.

ஒருகாலத்தில் இந்த அம்மைப்பால் குத்திக் கொள்வதற்கு எத்தனையோ ஆக்ஷேபனை முதலியவைகளிருந்தன. அவையெல்லாம் ஒழிந்து, அம்மைப்பால் குத்திக்கொள்வது பெரும் பிரயோஜனமும் மிகு அவசியமுமானதென யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு இப்போது ஒருவிதத்தடையுமின்றி அநுஷ்டானத்தி லிருக்கிறது.

அந்த அம்மைப்பால் குத்தும் ஆதாரத்தின் மேலே இந்த மஹாமாரிப்பால் குத்துதலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த அம்மைப்பாலைக் குத்துவதனால் அந்த அம்மைநோய் எப்படி தடுக்கப்படுகிறதோ அப்படியே இந்த மஹாமாரிப்பால் குத்துவதனால் இந்தநோயும் தடுக்கப்படுகிறதாய் அநுபவத்தினாலும் பரீக்ஷையாலும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

மற்ற தொற்றுவியாதிகளி லுள்ளனபோலவே இந்த பிளேக் நோயிலும் விஷக்கருக்கள் (Germs) உள. இந்தக் கருக்களுக்கு உயிரிருக்கிறதென பிற்காலத்துப் பண்டிதர்களினால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு தொற்றுவியாதியின் விஷக்கருக்கள் எவ்விதமேனும் ஒருவரிடம் தொற்றினால் உடனே அவை யதிகரித்து, தனக்குச் சொந்தமாகிய விஷத்தை யுண்டாக்கிவிடும். அப்படியே இந்தப் பிளேகின் விஷக்கரு எவ்விதமேனும் ஒருவரிடம் தொற்றிவிட்டால், அதிசீக்கிரத்தில் மட்டில்லாமல் விர்த்தியடைந்து தேகத்தில் விஷதருமத்தை யுண்டாக்கி, வெகு துரிதமாய் பிளேக் லக்ஷணங்களைக் காண்பித்து அபாயத்திற் கிடமாக்கிவிடுகின்றது.

இந்தப் பிளேகின் கருக்கள் குட்டையாய் தடித்த கண்டத்தைப்போ லிருக்கின்றன. இதன் இரண்டு முனைகளும் திரண்டதா யிருக்கின்றன. இவை பிளேக் கட்டிகளில் அதிகமாயிருக்கின்றன. நோயாளியின் இரத்தத்திலும் இவை இருக்கலாம். நோயாளியின் வாயினால் புறப்படும் கபத்திலும் நோயாளியின் மலமூத்திரங்களிலும் இவை இருக்கும். கொழுப்பு அதிகரித்த செயற்கையான போஷணையினால் இந்தக் கருக்களை விர்த்திசெய்யவுங் கூடும்.

புரொபெஸ்ஸர் ஹாப்கின் துரையவர்கள், அம்மைப்பால் குத்துவதினால் அந்த நோய் தடுக்கப்படுவது போல விஷபேதி முதலிய தொற்றுவியாதிகளின் பாலைக்குத்தி, அந்த வியாதிகளைத் தடுக்கும்பொருட்டு பலவித ஆராய்ச்சிசெய்துவந்தார். அக்காலத்தில்



பம்பாயில் இக்கொள்ளைநோ யுண்டாகி, அது மும்மரமாயிருந்தது. மாட்சிமைதங்கிய இந்திய கவர்ன்மெண்டார், இந்த பிளேக் வியாதியைத் தடுக்கும் ஒருவழியைக் கண்டுபிடிக்கும்படி, அவரை நியமித்தார்கள். பம்பாயில் வேறுசில டாக்டர்கள் இந்த பிளேகைத்தடுக்க; குதிரை முதலிய மிருகங்களினின்றும் எடுக்கப்பட்ட ஒருவித மஹாமாரிப்பாலைக் குத்திவந்தார்கள். இவ்விதப்பால் ஹாங்காங்தேசத்தில் இந்த பிளேகைத்தடுத்ததுபோல் இவ்விடம் குணம் செய்யவில்லை. ஷை புரொபெஸ்ஸர் ஹாப்கின் துரையவர்களும் இந்த விஷயத்தைக்குறித்து பலவித முயற்சிசெய்தும், பிரதமத்தில் அதிக வெற்றி பெறவில்லை; அப்படியாயினும் மனந்தளராமல் விடாமுயற்சியினால் மென்மேலும் புத்தியையும் கவனத்தையையும் செலுத்தி, முடிவில் இந்தக் கருவை வளர்த்து விர்த்திசெய்யும் ஒருவித பிரயோகத்தைக் கண்டுபிடித்தார். அந்த அவுடதத்தை ஒரு சீஷாவில் விட்டு, இந்தப் பிளேக்கட்டிகளிலிருந்து எடுக்கப்பட்ட விஷக்கருக்களை சீஷாவிலுள்ள அந்த பாணிதத்தில் விட்டு, ஆறுவாரம்வைத்தால் அதற்குள் அவை விர்த்தியாகின்றன. இந்த ஆறுவாரம் வரையில் இந்தக்கருக்களின் கழிவுகள் (விசர்க்கங்கள்) அந்த சீஷாவில் சேகரிக்கப்படுகின்றன. இந்த ஆறுவாரங்களும் ஒவ்வொருவாரங்களின் கடைசியில் ஒவ்வொரு மணிநேரம் அந்த சீஷாவானது வெந்நீரில் வைக்கப்படுகின்றது. இவ்விதம் ஆறு வாரம் செய்வதனால் அந்தக்கருக்கள் மாண்டுபோகின்றன. பின்பு அந்த சீஷாவில் கொஞ்சம் கார்பாலிக் ஆஸிட் திராவகத்தை விட்டு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்படி சித்

தப்படுத்தப்பட்டதே மஹாமாரிப்பால் எனப்படுகிறது. இவ்விதம் பாகப்படுத்தினதே மஹாமாரிப்பால் குத்தயோக்கியத்தை யுடையது. மேற்சொன்னபடி வெந்நீரில் வைத்து அந்த விஷக்கருக்கள் கொல்லப்பட்டுபோகின்றபடியால், அந்த விஷத்தின் கொரூரம் சாந்தப்படுத்தப் படுகிறது. நேர்வாளம், எட்டிக் கொட்டை முதலிய நஞ்சினங்களைச் சுத்தி முதலியவைசெய்தலினாலும், அவற்றுடன் சேர்க்கப்படும் வேறு சரக்குகளினாலும் அவற்றின் தீக்குணம்கொரூரம் ஆகியவைசாந்தமாகின்றன. பின்பு அவற்றைப் பிரமாணப்படியும் கிரமமாகவும் உபயோகித்தால் அபாயகரமான ஒருவித தொந்திரவுமில்லாமல் அநேக கொடியவியாதிகள் தீர்ந்துபோவது போலவே, இந்த விஷக்கருக்கள் கொல்லப்பட்டுப் போவதால், அவற்றாலுண்டான விசர்க்கங்களில் அந்த விஷக்கொரூரம் நீங்கி அது சுத்தியாகி விடுகின்றது.

இப்படிச் சுத்தப்படுத்தப்பட்ட பாலை ஆரம்பத்தில் குதிரை, வெள்ளாடு, பசு, செம்மறியாடு இவற்றின்மேல் உபயோகித்துப் பரீக்ஷித்தார். இவற்றுள் வெள்ளாடுதவிர மற்றவைகளெல்லாம் சுகமேயிருந்தன. குத்தினவிடத்தில் மாத்திரம் கொப்புளமுண்டாகிப் பின்பு சவுக்கியமாகிவிட்டது. நிறைசினையாயிருந்த ஒரு பசுவிற்குக் குத்தினார். அதுவும் அது ஈன்ற கன்றும் சுகமேயிருந்தன. இவ்விதம் பலதடவையும் பலவிதம் பரீக்ஷைசெய்து இதனால் ஒருவித அபாயமுமுண்டாகாதென்றும், அந்த வியாதிலக்ஷணம் இதில் இருக்கிறதென்றும் கண்டுகொண்டார்.



1897-ம் ஆண்டு ஜனவரிமீ 10உ மனிததேகத்தில் குத்திப் பரீக்ஷிக்கும்படியாக பிரதமத்தில் தன் தேகத்திலேயே அந்த மஹாமாரிப்பாலைக் குத்திக்கொண்டார். அதனால் சொற்பசுரமும் குத்தின இடத்தில் நோவுமிருந்தது. அதுவும் இரண்டுமூன்று நாள்தான் இருந்தது. இதன்பின்பு இந்தப்பால் மனிததேகத்தில் குத்துவதினாலும் அபாயமுண்டாகாதெனத் தெரிந்துகொண்டார். அதுமுதல் மனிததேகத்தில் அந்தப் பாலைக்குத்த ஆரம்பித்து, பரீக்ஷித்து அதிலுள்ள குறை குற்றங்களையும் சீர்திருத்தி அந்தப்பால் குத்திக் கொண்டவர்களுக்கு அந்த பிளேக் வியாதி வருகிறதில்லையென்றும், ஒருவேளை வந்தாலும் அபாயமில்லையென்றும் பரீக்ஷித்து நிச்சயித்தார். இதன்பின்பு - 1897 - ஆம் வருஷம் பிப்ருவரிமீ - 17-உ தான்வெற்றியடைந்ததை மாட்சிமை தங்கிய இந்தியா கவர்ண்மெண்டாருக்குத் தெரிவித்தார். பின்பு அநேக இடங்களில் பகிரங்கமாய் பரீக்ஷிக்க ஆரம்பித்தார்கள், அவற்றுள் சிலவற்றை யிங்கு உதாரணமாகவும் எழுதுவோம்.

(1) பரோடாவில் இந்தப் பிளேக்நோயுண்டான போது, ஜெயிலிலிருந்த-500-கைதிகளும் தங்களிஷ்டத்தின்பேரில் இந்தப்பால் குத்திக் கொண்டார்கள். இவர்களிலிரண்டே பெயர்தான் ஆஸ்பத்திரியிலிருந்தார்கள். அவர்களிலொருவனுக்குப் பாண்டுவியாதியும் மற்றொருவனுக்கு நுரையீரல் தாபன ரோகமும் இருந்தது. இந்த இரண்டு வியாதிகளும் பால்குத்திக் கொள்வதில் ஒருவித சம்பந்தமுமில்லையென மேற்படி புரொபெஸ்ஸர் எடுத்துக் காண்பித்தார்.

(2) போர்ச்சுகீஸ் ஸ்டேஷனாகிய தாமோன் நகரத்திற்குச் சுற்றுப் புரங்களில் இப்பால் குத்திக்கொண்ட-2197-ஜனங்களுள்-36-மரணந்தான் நேரிட்டன. இந்தப்பால் குத்திக்கொள்ளாத-6033-ஜனங்களுள்-1482-மரணங்கள் சம்பவித்தன. இந்தப்பால் குத்திக்கொண்டவர்கள், இதைக் குத்திக்கொள்ளாதவர்களைப் பார்க்கிலும் சுமார் நூற்றுக்கு-89-பெயர் மீந்தார்கள்.

(3) தாமோனின் குடி ஜனங்கள் 306. இவர்களுள் இப்பால் குத்திக்கொண்ட 277 ஜனங்களுள் எட்டுப் பெயர்களுக்கு இந்தப் பிளேக் வியாதி கண்டது. அதிலும் ஒரு மரணமே நேரிட்டது. இந்தப்பால் குத்திக்கொள்ளாத-29-பெயர்களுள்-4-பெயர்களுக்கு இந்தப் பிளேக் கண்டது. இந்த-4-பெயர்களும் மரணமடைந்தார்கள்.

(4) ல[illegible]னவ்லி யென்னும் ஊரின் ஜனத்தொகை-700-ல் இந்தப் பால் குத்தப்பட்டவர்கள்-323-பெயர்கள். இவர்களுள்-14-பெயர்களுக்கு இந்தப் பிளேக் வியாதிகண்டது. இந்த-14-பெயர்களுள்ளும், 7-மரணங்களே யுண்டாயின. இந்தப்பால் குத்தப்படாத பாக்கி 377 பெயர்களுள் 7[illegible]-பெயர்களுக்கு இந்த பிளேக் வியாதி கண்டு; அவர்களுள் 58-மரணங்கள் உண்டாயின. இதிலும் சுமார் நூற்றுக்கு 85-பெயர்கள் மீந்தார்கள்.

(5) கர்க்கியென்னுமூரில் ஜனத்தொகை 1530-ல் 671-பெயர்கள் இந்தப்பால் குத்தப்பட்டார்கள், மற்ற மிகுதிப் பெயர்களான 959-ஜனங்கள் இப்பா



ல் குத்தப்படவில்லை. இந்தப்பால் குத்தப்பட்டவர்களுள் 32-பெயர்களுக்கு பிளேக் வியாதிகண்டது. அவர்களுள் 17-மரணங்கள்மாத்திரம் நேரிட்டன. இப்பால் குத்தப்படாதவர்களுள் 143-பெயர்களுக்கு இந்த வியாதிகண்டது. அவர்களில்-98-பெயர்கள் மரணமடைந்தார்கள். இதிலும் சுமார் நூற்றுக்கு 77-பெயர்கள் மீந்தார்கள்.

குறிப்பு.

முன் கண்டவைகளில் 100-க்கு 89, 85, கண்டிருக்கிறதே இதில் மாத்திரம் 100-க்கு 77-ஆக குறைந்த லாபங்கிடைத்ததே யென்று யோசிக்க ஏது வுண்டு. அதற்குக்காரணமாவது புரபெஸ்ஸர் அவர்கள் ஆரம்பத்தில் ஒருதடவை பால் எடுத்த கருக்களிலிருந்தே இரண்டாந் தடவையும் எடுத்தார். ஒருதடவை யெடுத்தவுடன் அந்தக் கருக்கள் அதிகம் கெ[illegible]ய்ந்து அல்லது அதிகம் கெட்டுப் போகிறதென அப்போது அவருக்கு தெரியாமலிருந்தது. அவ்விதம் - உ - ம் தடவை சித்தப்படுத்தப்பட்ட பாலை கர்க்கியில் உபயோகப் படுத்தப்பட்ட படியால் அந்த வித்தியாசங் காணப்பட்டது. இப்போது அப்படிச் செய்யப் படுகிறதில்லை அப்போதைக்கப்போது எடுக்கப்படுகிற புதுக்கருக்களினால் சித்தப்படுத்தப்படுகிறது. இனி அவ்வித வித்தியாசத்திற் கேது விராது.

(6) பரோடாவிற்குச் சமீபத்திலுள்ள ஆண்டெரி என்னும் ஊரிலுள்ள-950-ஜனங்களில்-513-பெயர்கள் இந்தப் பால் குத்தப்பட்டார்கள். மற்றவர்கள் குத்தப்படவில்லை. அவ்விடத்தில்-28

விட்டார்களாகிய 135-ஜனங்களும் ஒரேவித ஜீவன முடையவர்கள். இந்த ஜனங்களுள்-71-பெயர்கள் இந்தப்பால் குத்தப்பட்டவர்கள். மற்ற-64-பெயர்களும் இந்தப்பால் குத்தப்படவில்லை. இந்தப்பால் குத்தப்பட்ட-71-பெயர்களில் - 8 - ஆசாமிகளுக்கு இந்த பிளேக் வியாதிகண்டது அவர்களுள்-3-மரணமே நேரிட்டது. இப்பால்குத்தப்படாத - 64 - பெயர்களில்-27-பெயர்களுக்கு இந்த வியாதிகண்டு எல்லோரும் மரண[illegible] இதில் நூற்றுக்கு 89-லாபமெனத் தெரியவருகிறது.

இந்த விஷயம் சர்ஜன் ஜெனரல் ஹார்வி துரையவர்களின் சமுகத்தில் புரொபெஸ்ஸர் ஹாப்கின் துரையவர்களால் நிரூபித்துக் காண்பிக்கப்பட்டது.

(7) பம்பாயிலுள்ள கோஜா வகுப்பார்களில் இந்த மாரிப்பால் குத்தப்பட்ட-3314-பெயர்களில்-3-பெயர்கள் மாத்திரம் மரணமடைந்தார்கள். இந்தப்பால் குத்தப்படாத-9516-பெயர்களுள் - 72 - மரணங்கள் நேரிட்டன. இந்தக் கணக்கின்படி நூற்றுக்கு - 89 - பெயர்கள் மீந்தார்கள்.

(8) பம்பாய் ராஜதானியிலுள்ள தார்வாட் நகரத்தில் இப்பால் குத்தப்படாத-1014-ஜனங்களில் 293-ஜனங்கள் இந்த வியாதியினால் பீடிக்கப்பட்டார்கள். இப்பால் குத்தப்பட்ட- 37196 - ஜனங்களில், 32-பெயர்களுக்கு மாத்திரம் இந்த வியாதி கண்டது. இப்படிக் கண்டதும் மிகவும் கவனிக்கத்தக்க தொகையே.

(9) சென்ற ஜூன்மீ 21௳ ஹூப்ளி நகரத்திலுள்ள தெற்கு மராட்டா பஞ்சாலையிலுள்ள-1173-



ஆட்களில்-1040-பெயர்கள்; இரண்டுதடவை இந்தப்பால் வைக்கப்பட்டார்கள். 51-பெயர்கள் ஒருதடவை யிந்தப்பால் குத்தப்பட்டார்கள். 75 - பெயர்கள் குத்திக்கொள்ள மாட்டோமென மறுதலித்து விட்டார்கள். இவர்களுள் இரண்டுதடவை குத்தப்பட்ட-1048-பெயர்களில் - 22 - மரணமும், ஒருதடவை குத்தப்பட்ட-51-பெயர்களில் - 8 - மரணமும் இப்பால் குத்தப்படாத -75-பெயர்களில்-20 மரணமும் நேரிட்டன. மேற்கண்ட 1048-பெயர்கள் இரண்டு தடவை இந்தப்பால் குத்தப்படாவிட்டால் அவர்களில் - 276 - மரணங்கள் நேரிட்டிருக்க வேண்டும். அதற்காக இப்போது-22-மரணம் மாத்திரம் சம்பவித்திருக்கிறதெனத் தெரியும்.

இன்னும் இவ்விதமே பல விஷயங்களிலும் பரீட்சித்து இந்தப்பால் குத்திக்கொள்வதினால் நற்பயனேயுண்டாகிறதென அநுபவயுக்தமாய் நிச்சயித்தறிந்த பின்பே நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் இதனை அங்கீகரித்து 1898-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17௳ உத்திரவு செய்தார்கள். அதன் கருத்து பின் வருகிற விதமாம்.

இந்தப்பால் குத்திக்கொள்ளும்படி ஜனங்களை நிர்ப்பந்திக்க வேண்டுமென்பது கவர்ன்மெண்டாருடைய கருத்தல்ல. இஷ்டமானவர்கள் மாத்திரம் இந்தப்பாலைக் குத்திக் கொள்ளலாம். இப்படிக் குத்திக்கொண்டு சர்டிபிகேட் அல்லது சீட்டு பெற்றவர்கள் வேறே பாஸில்லாமல் பிரயாணம் போகலாம். அவர்கள் எங்கும் நிறுத்தப்படமாட்டார்கள். ஆனால் அவர்கள் வஸ்திரங்கள் மாத்திரம் விஷநிவாரணஞ்செய்து பரிசுத்தப் படுத்தப்படும்.

பிரயாணத்தில் பிளேக் நோய்கண்டால் அப்போது
மாத்திரம் தடுக்கப்படுவார்கள். இந்தப்பால் குத்திக்
கொண்டவர்களுக்கு ஸிக்ரிகேஷன் (Segregation)
(பிரிவினை) விதியில்லை. ஆனால் அவர்களிருக்கும் வீட்
டில் இந்த பிளேக் நோய்கண்டால் அந்த வீட்டைக்
காலி செய்யவேண்டும்.

ஆகையால் நாம் ஒருவித சந்தேகமுமின்றி இந்
தப்பாலைக் குத்திக்கொள்ளலாம். நம்முடைய பந்
து ஜன மித்திரர் முதலியவர்களையும் குத்திக்கொள்
ளும்படி செய்விக்கலாம் என நன்றாய்ப் புலப்படும்.

இன்னும் இ[ந்]தப் பாலைக்குத்துகிற விதத்தைப்
பற்றி நம்மவர்க[ள்] பலவாராய்ப் புலம்புகிறார்கள்.
சிலர், டாக்டர்மா[ர்]கள் சதையைத்துவாரத்துவையு
கலக்கிறார்கள், சிலர் எலும்பைக்குடைந்து விடு
கிறார்கள் என்கி[றா]ர்கள். இதெல்லாம் அறியாமை
யும் பேதமையுமே யல்லாமற் சந்தேகமில்லை.
இதைக் கு[த்]தும்வகை பின் வருகிறவிதமாம்.

முன்கண்டபடி சித்தப்படுத்தின இந்தப்பாலி
ல் தேகசுபாவத்திற்கேற்ற விதமான அளவை, ஜல
மேற்றும் ஊசியில் நிறைத்து, புஜத்தின்மேல் பக்
கத்தில், அந்த ஊசியினால் கொஞ்சங்கீறி, அங்கு
செலுத்தப்படுகிறது. இந்த ஊசியானது தேகத்
தின்மேல் தோலில்மாத்திரம் செல்லும். தேகத்தின்
சதை, எலும்பு ஆகியவைகளில் ஒருபோதும் செ
லுத்தப்படுகிறதில்லை. ஒரு சிறுமுள்ளினால் கீறினால்,
அல்லது எறும்புகடித்தால் எப்படியிருக்குமோ
அப்படியேயிருக்கும். அதற்குமேல் ஒருவிததொ
ந்திரவுமிருக்காது. பின்பு இதனால் ஒருவித அபாயமு
மின்றி சொற்ப சுரமுண்டாகும். குத்திக் கொ
ண்ட இடத்தில் மாத்திரம் கொஞ்சம்நோவிருக்கும்.
இந்த சுரமும் இந்த நோவும் இரண்டு மூன்று தினந்
தானிருக்கும். சில நாட் சென்றபின்பு முன்குத்தி



புஜத்திற்கெதிர் புஜத்தில் முன்பாய்ச்சின அளவைப்
பார்க்கிலும் கொஞ்சம் அதிகமாய் மறுபடியும் முன்
மாதிரியாகவே செலுத்தப்படும். ஆயினும் முன்
போலவே சுரமும் வேதனையுமிருக்கும். பெரும்பா
லும் அதிகக் குறைந்த அளவாகவே யிருக்கும். இது
வும் இரண்டொருநாள்தான் இருக்கும். பின்பு சுபா
வம்போலாகிவிடும். இவ்விதம் ஒருமுறை இந்தப் பா
ல் குத்திக்கொள்வதினால் ஒருமுறை இந்த வியாதிக்
குள்பட்டதுபோலாயிருக்கும். ஒருதடவை யிந்த
வியாதிக்குட் பட்டால் பெரும்பாலும் மறுபடியும்
அது வரவதில்லை. மறுபடி ஒருதடவை யிந்த
வியாதி கண்டால் அது அந்தவியாதி மறுதடவை
காண்பதைத் தடுக்கும். விஷதருமமுள்ள வஸ்துவை
நாம் சகிக்கப்பழகி விட்டால் அந்த வஸ்துவினால் நம
க்குத் துன்பமுண்டாகாது. எட்டிக் கொட்டையைத்
தின்னப் பழகிவிட்டால், பின்பு அந்தவிஷம் ஒருவித
கெடுதியும் செய்யாது. அப்படியே இந்தப் பிளேக் பா
லைக் குத்திக்கொள்வது இந்த பிளேக் விஷத்தைத்
தடுக்க ஏதுவாகின்றது. ஒரு வேளைமிஞ்சி அந்த நோ
ய் வந்தாலும் அனேகமாய் சவுக்கியமாகிவிடும். இந்
தப்பால் பாய்ச்சப்பட்ட தேகத்தில் இந்த வியாதி
யைத்தடுக்கும்விஷமயிப்புகளின்கூட்டம்சேகரிக்கப்
படுவதால் இந்த வியாதி தொற்ற ஏது வில்லாமற்
போகின்றது. இவ்விதம் ஒருவீட்டிலுள்ள ஒவ்
வொருவரும் குத்திக் கொண்டால் அந்த வியாதி
தொற்றவிடமிராது. நெருப்புப்பற்றியெரிய விறகு
முதலியவைகளில்லாவிட்டால் அதுதானே அவிந்து
விடுவதுபோல, இந்த வியாதியும் தொற்ற விடமில்
லாவிட்டால் அதுவும் தானே யொழிந்து போய

சிறுவர்கள், ஸ்திரீகள் முதலியவர்களும் குத்திக் கொள்ளலாம். ஒருவித அபாயமும் உண்டாகிறதில்லை. மத்ராஸில் இது வரையில் எத்தனையோ பெயர்கள் இந்தப்பால் குத்தப்பட்டார்கள். அவர்களுள் ஒருவருக்கேனும் அபாயம் நேரிடவில்லை. இப்போது நாம் பிளேக் பால் குத்திக்கொள்வதினால் இந்த வியாதி தடுக்கப்படுகிற தென்பது நன்கு விளங்கும். ஆகையால் இந்த பிளேக் வியாதி தொற்றாமல் தடுக்க, வாசஸ்தான சுத்தம்? தேகசுத்தம் முதலியவைகளை யனுசரிப்பதுடன் இந்த பிளேக் பாலையும் குத்திக் கொண்டால் அந்த வியாதி வருமென்கிற சந்தேகத்தை யொழித்து நிர்ப்பயமாயிருக்கலாம்.

இது வரையில் நாம் பிளேகைத் தடுக்கும் விதிகளைத் தெரிந்து கொண்டோம். இனி பிளேக் பரவி நிற்கும்போது கவனிக்கவேண்டிய விதி முறைகளை யெழுதுவாம்.

—※—

## பிளேக் பரவி யிருக்கையில் கவனிக்கவேண்டிய விதிகள்.

—※—

முன்கண்ட விதிகளை யனுசரிப்பதுடன், அதிகம் சூடான பதார்த்தங்களைச் சாப்பிடலாகாது. கடினமான தேகவுழைப்பு, கடினமான மனோவியாபாரம் ஆகியவைகளை நீக்கவேண்டியது. மலபந்தப்படுத்தும் வஸ்துக்களையும் சாப்பிடலாகாது. ஒருவேளை மலபந்தமுண்டானால் அதையுடனே நீக்கவேண்டியது. கூடுமானால் பிளேக்கண்ட விடத்தைவிட்டு நீங்



கிவிடவேண்டியது. அப்படிக் கூடாதவர்கள் முன்கண்ட விதிகளையும் பின்காணும் விதிகளையும் கையாடிவரவேண்டியது முக்கியம். அவையாவன:

இந்தக் கொள்ளைநோயின் விஷத்தை யெந்த வஸ்துவானது தக்ஷணமே விலக்கக்கூடுமோ அந்த வஸ்துவைத் தன்னிடம் வைத்திருப்பதுடன் அடிக்கடி அதை முகரவும்வேண்டும்.

பாஜில் ஷம்ஸன் என்னும் பிரபல்லியபண்டிதர்சொல்கிறார் "பெருங்காயத்தைக் காடியிற்கரைத்து வீட்டில்தெளித்து வருவதனால் அந்த வீட்டாருக்கு இந்த பிளேக் நோயுண்டாகாது".

இன்னும் அகரு, சந்தனம், கோஷ்டம், நெரியரிசிப்பால், குந்திரிக்கம், முதலியவைகளில் ஒன்றை அல்லது பலவற்றைப் புகைப்பதினால் காற்றிலுள்ள விஷகருமம் நீங்கிப்போம்.

எல்லாவகைப் பண்டிதர்களின் அபிப்பிராயம் பின்வருகிற விதமாம்.

பிரதி தினமும் வீட்டில் நாலாபக்கங்களிலும் நெருப்பெரித்து வந்தால் இந்த விஷக்காற்றானது நீங்கிவிடும். ஆனால் இந்த ஏற்பாடானது ஊர்முழுவதுஞ்செய்து, அந்த ஊரிலுள்ள விஷக்காற்றை நீக்கினால் உசிதமே. பின் வருபவைகள் இதற்காதாரமாக சொல்லப்பட்டிருக்கின்றன.

(1) பூனா தேசத்தில் ஒருதடவை கொள்ளைநோயுண்டாயிற்று. அவ்வூரார், பிரபல்லிய பண்டிதராகிய பக்ராத் அவர்களிடம்போய் அதற்காக பரிகாரங் கேட்டார்கள். அவ்வூரின் நாலாபக்கங்

களிலும் வாசனைவஸ்துகளைக் குவித்துக் கொளுத்தி விட்டால், அந்தப் புகையானது ஊரிலுள்ள காற்றோடுசேர்ந்து, அதிலுள்ளவிஷத்தை மாற்றிவிடுமெனச் சொன்னார். அவர்கள் அப்படியே செய்ய அந்தக் கொள்ளைநோ யொழிந்துபோனது.

(2) லண்டனிலுண்டாயிருந்த கொள்ளைநோயானது ஒரு பெருந்தீ விபத்திற்குப்பின் நீங்கிவிட்டபடியால் அந்தத்தீயினால் அங்கிருந்தவிஷம் மாற்றப்பட்டது என்பதே.

வீட்டில் சுகந்த புஷ்பங்கள், சுகந்தவாசனையுள்ள வஸ்துகள் அதிகமாயிருப்பதினால், வீட்டிலுள்ள காற்றுடன் இச்சுகந்த வஸ்துகளின் வாசனையும் சேர்ந்து, அந்தக் காற்றிலுள்ள விஷத்தை மாற்ற ஏதுவாம்.

வாசஸ்தானமானது உயர்ந்ததாயிருந்தால்மிகவும் உத்தமம். ஏனெனில் தாழ்ந்த வாசஸ்தானம் இந்த வியாதிக்கு அதிக இலக்காகும்.

காய்ச்சிச் சுத்திசெய்து குளிரவைத்த சலத்துடன் காடியைச்சேர்த்துப் பானஞ்செய்து வருவது பிளேக்நோயைத் தடுக்கும்.

முக்கால் விராகனெடை சொர்ணக் காவியைக் காடியிற்கரைத்துப் பானஞ்செய்து வருவதும் இந்த வியாதியைத் தடுக்க ஏதுவாகும் என அநேகபண்டிதர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கால் விராகனெடை ஐத்வார் (நிர்விஷா) சூரணத்தைக் கொஞ்சம் பசுவின் நெய்யிற்குழைத்து, அதனுடன் கொஞ்சம் பன்னீரும், கொஞ்சம் காவு



ஜாபான் திராவகமுங்கலந்து உட்கொண்டு வருவது இந்த வியாதியைத்தடுக்க ஏதுவாகும்.

புளிப்பு மாதுளம்பழ ஷர்பத்து, எலுமிச்சம்பழ ஷர்பத்து, சுக்காங்கீரை ஷர்பத்து, துரிஞ்சு நாரத்தம்பழ ஷர்பத்து, நாரத்தம்பழ ஷர்பத்து, ஆகிய இந்த ஷர்பத்துகளில் இரண்டு தோலா நிறை எடுத்து அதில் கொஞ்சம் பன்னீரும் கொஞ்சம் கஸ்தூரிப் பிரம்பு திராவகமும், கொஞ்சம் காவுஜாபான் திராவகமும் கலந்து பிரதி காலையிலும் உட்கொண்டு வந்தால், இந்த பிளேக் நோய்தொற்றாதென அநேக யூனானி பண்டிதர்கள் அநுபவமாய்க்கண்டு நிச்சயித்திருக்கிறார்கள்.

நீப கர்ப்பூரத்தை (சூடனை) தன்னிடத்தில் வைத்திருப்பதும், அதை யடிக்கடிமுகர்வதும் பிளேக்நோயைத்தடுக்கும்.

தேன் மெழுக்கை முகர்தல் விஷக்காற்றானது சுவாசத்துடன் உட் செல்வதைத்தடுக்கும்.

மெழுக்கைப் புகைப்பது, பெருஞ்சண்டைக்குப் பின்பிணம் முதலியவைகள் அழுகி யுண்டான விஷக்காற்றை முறிக்கும்.

துரிஞ்சு நாரத்தம்பழத்தோலை முகர்வது விஷக்காற்றைமாற்றி அதைச்சமப்படுத்தும்.

வெங்காயத்தை நசுக்கி முகர்வது பலவித விஷக்காற்றை மாற்றுகின்றது.

ஆகாரங்களில் கூடினவரையில் இனிப்பு வஸ்துக்களை நீக்கவேண்டும்.

வெங்காயம், காடிமுதலிய புளிப்புப் பதார்த்தங்கள் இந்தக் கொள்ளைநோய் பரவியிருக்கும் காலங்களில் போஜனத்திற்கு அதிகம் பொருந்தினவைகள்.

இந்தச் சமயங்களில் சுகத்தைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும், காடி, புளி, எலுமிச்சம்பழம், ஜரிஷக்பழம் ஆகியவைகள் புளிப்பாயிருப்பதுடன் விஷசாந்தியாகவு மிருக்கிறபடியால் இவ்வகைப் பதார்த்தங்களை ஆகாரத்துடன் சேர்த்து உபயோகிக்கவேண்டும்.

—※—

## பிளேகைத்தடுக்கும் மாத்திரை.

—※—

அரபிபோளம் விராகனெடை-கஅ,உ, வெள்ளைபோளம், குங்குமப்பூ இவை வகை-க-க்கு விராகனெடை-கூவ, வெண் சந்தனத்தூள், தருனஜ் அக்ரபி வேர்ச்சூரணம் சொர்ணபூங்காவி, நிறமானஜத்வார் (நிர்விஷா) சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-ஙிவ, பச்சைகர்ப்பூரம்விராகனெடை-வனு.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு பன்னீர் வார்த்து, ச-சாமம் அரைத்துச் சிறு மாத்திரைகளாய்ச் செய்து வைத்துக் கொள்ளவும்.

மாத்திரை:—விராகனெடை-ஞ-க, காலையில் மாத்திரம் உட்கொள்க.

உபயோகம்:—பிளேக் வியாதி வராமல் தடுக்கும்.



## குறிப்பு.

இந்த மாத்திரையை பிளேக் வியாதியைத் தடுக்க உபயோகப் படுத்த வேண்டியதே யொழிய, பிளேக் வியாதி கண்டிருக்கும்போது கொடுக்கலாகாதெனத் தெரிந்திருக்க வேண்டும்.

## விண்ணப்பம்.

இந்தப் பிளேகைத் தடுப்பதற்காக, பிளேக் வாரண சஞ்சீவியென ஒருவித நூதனப் பிரயோகம் செய்யப்பட்டு விற்பனைக்கு சித்தமா யிருக்கிறது. விஷத்தைத் தடுக்கும் பலவிதமான உயர்ந்த சரக்குகளினால் செய்யப்பட்டது. இதைப்பற்றி பலவைத்திய சிரோமணிகளும் தம்தம் அநுபவத்தில் அதன் சிறந்த குணத்தை நிச்சயித்து வெகுவாய் எழுதியிருக்கின்றார்கள், இந்த மாத்திரைகளை உபயோகப்படுத்தும் கிரமப்படி யுபயோகித்தவரின் கடவுளினது கிருபையால் இந்தப் பிளேக் தொற்றியணுகாது. இதன் விலை முதலியவைகள் இதன் விளம்பரத்தினால் தெரிந்து கொள்ளலாம்.

—※—

## பிளேகின் பொது சிகிச்சை.

—※—

இந்தக் கொள்ளை நோய்க்கு நிச்சயமான சிகிச்சை கிடையாதெனவே சொல்லவேண்டும், சிகிச்சை கிடையாதென ரோகியையும் அஜாக்கிரதையாய் விட்டு விடலாகாது. சிகிச்சையினால் அனேகர் தப்பிப்பிழைத்து மிருக்கிறார்கள். ஆகையால் கூடினவரையில் அந்த வியாதியைச் சமப்படுத்த முயற்சி

செய்ய வேண்டியது. அதற்கான முறைகளையும் சிகிச்சைகளையும் வல்லபண்டித சிரோமணிகள் அனுபவப்படி யிங்கெழுதுவாம்.

நாம் முன் பிள்ளைகளைத்தடுக்கச் சொல்லி யிருக்கப்பட்ட வாசஸ்தான சுத்தம், தேகசுத்தம் முதலியவைகளையே பெரும்பாலும் கவனிக்க வேண்டியது. இந்த வியாதியின் சிகிச்சையில் பொதுவாய் இருதயத்தைப் பலப்படுத்தவும், விஷகுணத்தை முறிக்கவும், சமமாய்க் குளிர்ச்சியான வஸ்துக்களை உபயோகிக்க வேண்டுமென்பதை பிரதானமாய்க் கவனிக்க வேண்டியது. ஏனெனில் இந்த வியாதியில் விஷகுணமே பிரதானமென எல்லாவகைப் பண்டிதர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் இந்த விஷமானது இருதயத்தையே தாக்குகின்றது. ஆகையால் அதைப் பலப்படுத்தும் பக்குவங்களைச் செய்வதே மிகவும் முக்கியமானதும் அவசியமானதுமாம். மேலும் நாமுன் சொன்னதுபோல முகர்கிற வஸ்துகள், பான வகைகள், ஆகாரம் ஆகியவைகளையும் இந்தச் சமயத்தில் சமயோசிதமாய் உபயோகிக்க வேண்டியது.

இக்கொள்ளைநோ யாரம்பத்தில் அந்த ரோகியின், இசிப்புவலி, தலைநோய் முதலியவைகளை நீக்க முயற்சி செய்யலாகாது. பலமான மருந்துகளும் ஆரம்பத்திற் கொடுக்கலாகாது. ஆனால் ஆரம்பத்தில் * காக்ஷிவிதையை, வயது, தேகசுபாவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி-௫-கிராகனெடை முதல்-௩௰-கிராகனெடை வரையில் குறைத்தும் அதிகப்படுத்தியும் தாமரைப்பூதிராவகம் அல்லது கஷாயம் காஜர்க்கிழங்கு ரசம், தண்ணீர் ஆகியவைகளிலொன்றில் கொடுத்துக்கொண்டு வரவேண்டும்.

* இதன் உருவம் முதலியவைகள் பின்னெழுதப்பட்டிருக்கின்றன.



ரோகியானவன் மிருதுவானவும் உஷ்ணமானவும் வஸ்திரங்களைப் போர்த்துக்கொள்ளும்படி செய்ய வேண்டியது. அதனால் மயிர்க்கால்களிலிருந்து வெயர்வையுண்டாகுவதாம்.

சூடான தேகிகளுக்குச் சூடான மருந்துகளைக் கொடுக்கலாகாது. எந்தத் தேகிக்கும் அதிகக் குளிர்ச்சியானவைகளை உபயோகப்படுத்துவதும் நன்றன்று.

(1) இந்தவியாதியில் இரத்தாதிக்கம் பிரதானமாயிருந்தால், சீமையிலந்தைப்பழம், சீமை நாவிப்பழம், ஆகியவைகளி லொன்றைச்சேர்த்துக் காய்ச்சப்பட்ட யவைக்கஞ்சியைக் கொடுக்கலாம். சீமையிலந்தம்பழ ஷர்பத்து, தாழை ஷர்பத்து, தாமரைப்பூ ஷர்பத்து, கசகசா ஷர்பத்து ஆகியவைகளிலொன்றை யவைக்கஞ்சியிற்கலந்து குடிப்பாட்டலாம். இருமல் இல்லாதிருந்தால், சந்தன ஷர்பத்து, இனிப்பு மாதுளம்பழ ஷர்பத்து, புளிப்பு மாதுளம்பழ ஷர்பத்து, எலுமிச்சம்பழ ஷர்பத்து, நாரத்தம்பழ ஷர்பத்து, ஜா[...]க் ஷர்பத்து, ஆகியவைகளிலொன்றை யுபயோகித்து வரலாம்.

(2) இந்த வியாதியில் [...]த்தாதிக்கம் பிரதானமாயிருந்தால் காவுஜபான் [...]நீர், கஸ்தூரிப் பிரம்புத்தீநீர் ஆகியவைகளி லொன்றை யுபயோகிக்க வேண்டும்.

(3) இந்த வியாதியில் தனிச்சூடாதல் அல்லது தாகமாயிருந்தால் காவுஜுபான் நீர், சந்தனத் தீர் ஆகியவைகளி லொன்றை உபயோகித்து வர வேண்டும்.

(4) இந்த வியாதியில் மலபந்தமானது எவ்வி தம் அபாயத்தை யுண்டாக்குமோ அப்படியே மலப் போக்கும் அபாயத்தை யுண்டுபண்ணுமென நிதா னிக்கவேண்டியது.

மலபந்தத்தை நீக்க அவசியமானால் சாந்த மான இலகுபேதிமருந்துகளான புளி, மேனு ஆகிய வைகளிலொன்றை மாதுளம்பழ ரசத்தில், அல்லது தண்ணீரில் சர்க்கரையும் கலந்து கொடுக்கலாம். கடினமான பேதிமருந்துகளை உபயோகிக்கலாகாது. பின்காணும் முறையையும் உபயோகிக்கலாம். அந்த முறையிது.

* காவுஜபான், தாழம்பூ, மணத்தக்காளிவற் றல், தாமரைப்பூ ஆகிய இவற்றின் நீர் அல்லது கஷாயம் வகை-௧-க்குப்பலம்-௧. இவை யெல்லா வற்றையும் ஒன்றாய்க்கலந்து அதில் பத்து சீமையி லந்தப்பழங்களைப் போட்டுக்காய்ச்சி அரைபாகமா ய்ச் சுண்டினபின் னிறக்கி வடிகட்டி வைத்துக்கொள் ளவும். ௪-துலா சீமை யிலந்தப்பழம் (Apple) ஷர்பத்தில் ௩ - ௫ - குன்றிமணி யெடை துலோபாத் தன்முத்தையும் - வ விராக னெடை * விஷமுறி (Mineral Bezoar) க்கல்லையும் இழைத்து முன் சித்

* இதற்கு அறபியில் பாத்ஜஹறு-ம அதனியெ ன்றும், பார்ஸியிலும் ஹிந்துஸ்தானியிலும் பாத்ஜஹ ரே காணி என்றும், இங்கிலீஷில் மினரல் பீசோர்



தப்படுத்தின கஷாயத்துடன் கலந்து பானஞ்செய்ய வும். இவ்விதம் பிரதிதினமுஞ்செய்துவர மலபந்த முண்டாகாமல் மலந் தாராளமா யிருப்பதுடன் பிளேக் வியாதியின் லக்ஷணங்கள் தணிந்து இருத யம் பலப்பட்டுவரும்.

(Mineral bozoar) என்றும், தமிழில் விஷமுறிக்கல் என்றும் நஞ்சுமுறிக்கல் என்றும் பெயர்.

(உருவம்) இதுகல்லினம் வரையறுப் பற்றது சலவைக் கல்லைப்போல அல்லது மற்றக் கல்லைப் போல மிகவும் ஒழுங்கற்றதும் மூலைகளுள்ளதுமான பல்பலவகை உருவமுடையது. பொதுவாய்க் கரடு முரடான பரப்பையுடையது. ஆனால் அதன்மேல் வெள்ளைக்களிமண் படிந்திருக்கும்போது சமமாயி ருக்கும். அனேகமாய் இப்படியே யிருக்கும். இ லேசா யிருக்கும் (வருணம்) வெள்ளையும் பச்சையுங் கலந்தது போலிருக்கும் ஆனால் பொதுவாய் வெ ளுத்த பச்சை வருணமுள்ளது, அதன்மேல் இரண் டொரு மஞ்சள் சாயலுமிருக்கும்.

(சுவை) இலேப்பு. (இயற்கைக் குணமும் தர மும்) சீதோஷ்ணம் சமமானது.

(செய்கையும் உபயோகமும்) இது எல்லாத் தே கிகளுக்கும் பொருந்தும். பலவித விஷங்களை முறி க்கும். வாத பித்த முதலிய எல்லாச்சத்துருகளின் துர்க்கந்தத்தை நீக்கும். [illegible]த்தை யுண் டாக்கும். ஆன்மசக்தியை விர்த்தி செய்யும், இ ராஜ கருவிகள், வெண்ணரம்புகள் ஆகியவைகளைப் பலப்படுத்தும். சுகத்தை பாதுகாக்கும். விஷக்

துளையிடாத நன்முத்தையேர்தவிதமாயேனும் பிரதிதினமும் உபயோகப் படுத்துவதினால் இருதயம் பலப்படும். குறைந்த ஆத்மசக்திகள் விர்த்தியாகிவரும்.

மலப்போக்கானது மிதமாயிருந்து தேகத்தில் ஒருவித தூர்ப்பலமுண்டாகாமல் தேகம் இலேசாகவும் சவுக்கியமாகவுமிருந்தால் அந்தப் போக்கைக் கட்டமுயற்சி செய்யவேண்டியதில்லை.

மலப்போக்கானது அதிகமாகித்தேகத்தில்தூர்ப்பலமுதலியவைகளுண்டானால், அதை யுடனே கட்ட முயற்சிசெய்ய வேண்டும். ஆனால் கடினபந்த முறைகளை யுபயோகிக்கலாகாது.

சிலருக்கு மூக்கிலிருந்து இரத்தம் புறப்படுவதுமுண்டு. இது கறுப்பாயதாக இருப்பதுடன் தேகத்தில் தூர்ப்பலம், களை முதலிய வைகளில்லாமல் தேகம் இலேசாகவும் சவுக்கியமாகவும் இருந்தால் அதைக்கட்ட முயற்சிசெய்ய வேண்டியதில்லை. அதனால் சுகுணமுண்டாகும். அந்த இரத்தமானது அதிகஞ் சிவந்து இருப்பதுடன் அபரிமிதமாய் வெளிப்பட்டாலும் இரத்தம் வெளிப்படுவதனால் தேகத்தில் ஏதேனும் களை,தூர்ப்பலம் முதலியவைகளுண்டானாலும் உடனே அதைத்தடுக்க முயற்சி செய்யவேண்டும். இதற்காக, கஹ்ருபா அதிகம் உபயோகமானது. இதனை மைபோலத் தூள்செய்து மூக்கில் ஊதுவதினால் இரத்தம் நின்றுபோம்.

---

காற்றையுமுறிக்கும். விசனம், பேதி வாந்தி, விஷ பேதி ஆகியவைகளைக் கண்டிக்கும். பாலருக்குண்டாம் பச்சை நிறப் பேதியையும் கட்டும். (தூர்க்குணம்) இல்லை. (பரிகாரம்) இல்லை. (பதில்) மாசதம். (பிரமாணம்) விராகனெடை-வ-கிரகாம்பத்தப சனி.



## பிளேக் விசேஷ சிகிச்சை.

—*—

முக்கால் விராகனெடை சொர்ண பூங்காவியை முன் சொல்லப்பட்ட ஒருவகை ஷர்பத்தில் கரைத்து உட்கொள்வதினால் இந்த பிளேகைத்தடுக்க உபயோகப்படுவதுபோலவே, இந்த வியாதி கண்டிருக்கும் போதும் கொடுக்க உபயோகமாம்.

* கஸ்தூரிப் பிரயோகம், சீதகுணாகலதி முதலியவொன்றில் வேளை-க-க்கு முக்கால் விராகனெடை பிரமாணம் தினம்-உ-ங-தடவைகள் கொடுத்துவர வேண்டும்.

பிளேக்கண்ட ஆரம்பமாயிருந்தால், ஜத்வார் (நிர்விஷா) விஷமுறிக்கல் இவை யிரண்டும் வகைக்கு-க-க்கு விராகனெடை-வ. இவ்விரண்டையும் பொடித்து, பசுவின் தயிரில் குழைத்துக் கொடுக்க வேண்டும். இவ்விதம் பிரதி தினமும் இரண்டு மூன்று தடவை கொடுத்துவர வேண்டும். தயிர்ச்சாதம் இரண்டு வேளையும் சாப்பிடக் கொடுக்கவும். * புளியங்காய் முறப்பா, உபயோகிக்க வேண்டும். தண்ணீருக்குப் பதிலாக, பன்னீர், காசினித் தீநீர், கஸ்தூரிப்பிரம்பு திராவகம், சந்தனத் தீநீர் முதலியவைகளைப் பனிக்கட்டிக்குள் வைத்துக் குளிர்ச்சியுண்டாக்கிக் குடிப்பாட்ட வேண்டும். இப்படிச் செய்வதினால் அநேகருக்குச் சுகுணங் காணப்பட்டிருக்கிறது.

---

* இதன் முறைகள் பின்னெழுதப்பட்டிருக்கின்

ஒரு ரூபாயெடை கற்பூரத்தை உள்ளிற்குச் சாப்பிடக்கொடுத்தாச் சிலருக்கு ஒருநாளையிலேயே குணமுண்டானதாக, அக்கிம் ஆமித்சர்ஹிந்தியென்னும் பண்டிதர் சொல்லியிருக்கின்றார்

பின் காணும் ஜீவரக்ஷாமிர்த பாணிதத்தில் இந்தக் கொள்ளைநோய்க்குச் செய்யவேண்டியவைகளெல்லாம் இதில் அடங்கியிருப்பதால் அதுமிகவும் தகுந்த சிகிச்சையென தெரிந்திருக்க வேண்டியது.

—※—

## ஜீவரக்ஷாமிர்தயோக பானம்.

—※—

விஷமுறிக்கல் (The Mineral Bezoar), மூங்கிலுப்பு, துளையிடாத நன்முத்து, பச்சைநிறமான யஷப் என்னும் மாணிக்கம், மரகதம் (Emerald) மாதுளம்பழவிதை இவை வகை-க-க்கு விராகனெடை-வ, இவையெல்லாவற்றையும் மைபோல அரைத்து, கவ-விராகனெடை சீதகுதூகலதி அவுடதத்தில் மிஸ்ரமித்து சாப்பிடக்கொடுக்க வேண்டும். அதன்மேல்-கவ-விராகனெடை திருநீற்றுப்பச்சை விதையைமென்று தின்னக்கொடுக்க வேண்டும். அப்படிச்செய்ய வலாதவர்களுக்கு ஏதேனும் ஒருவகை திநீரில் ஊறவைத்துக் குடிப்பாட்டவேண்டும். அதன்மேல், ஜரிஷ்க்பழம், காசினிவிதை, இவை வகை-க-க்கு விராகனெடை-தெ, ரு-ஆறுபுகாராபழத்தைச் சலத்திலூறவைத்துக் கசக்கியெடுத்த ஊறல் கஷாயம், சந்தனத்திநீர், கஸ்தூரிப்பிரம்பு திராவகம், பன்னீர், இவைவகை-க்கு துலா-ச, திராக்ஷாக்



காய்ஷர்பத்து, மாதுளம்பழஷர்பத்து, இவைவகை-க-க்குத் துலா-உ, இவை யெல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்துக் குடிப்பாட்டவேண்டும்.

—※—

## பிளேக் இருதய அதிர்ச்சிமுதலியவைகளின் சிகிச்சை.

—※—

பிளேக் நோயால் பெரும்பாலும் இருதய அதிர்ச்சியுண்டாகிறது. நாம் முன் சொன்னதுபோல் இந்தவியாதியில் எப்போதும் இருதயத்தின் நிலைமையைக் கவனிக்க வேண்டியது மிகவும் ஆவசியகமாகையால், அதற்காகவேண்டிய சிகிச்சைகளையெல்லாம் சுருக்கமாகச்சொல்வாம்.

முன் சொல்லப்பட்ட ஜீவரக்ஷாமிர்த யோக பானமும் இருதய துடிப்பிற்கு உபயோகப்படுகிறதாகையால் பானங்களில் இதுமுக்கியமானது. இன்னும் வேறு சிலயோகங்களையுந் தெரிந்திருந்தால் இந்த வியாதியைப் பூரணமாய் சிகிச்சை செய்து நிவர்த்திசெய்யக்கூடும்.

பன்னீர், கஸ்தூரிப்பிரம்பு திராவகம், காவுஜபான் திராவகம், சந்தனதிராவகம் ஆகிய இவைகளிலொன்றை அல்லது பலவற்றைக்கலந்து, தண்ணீருக்குப்பதிலாய்க் குடிப்பாட்டவேண்டும்.

பிளேக் கட்டியின்மீது அல்லது வீக்கத்தின் மீது வெந்நீரைத் தாரையாகவிடவேண்டும். இவ்விதம்-உ-ங-தினம் கொஞ்சநேரம் செய்துவந்தால்

இருதயத்துடிப்பு அடங்கப்படுமென ஈலாகி என்னும் பண்டிதர்சொல்கின்றார்.

சீமை சாமந்திப்பூ, சதகுப்பைக்கீரை ஆகிய இவற்றைப் போட்டுக் காய்ச்சின வெந்நீரை முன் சொன்னபடி பிளேனக்கட்டி அல்லது வீக்கத்தின்மீது தாரையாய் விடுவதனால் இருதய அதிர்ச்சி நிற்குமென முன்சொன்ன ஈலாகி பண்டிதர் சொல்கின்றார்.

வெண்சந்தனம், செஞ்சந்தனம், ரோஜாப்பூ இதழ் ஆகிய இவற்றைப் பன்னீர்வார்த்து கரைத்து பனிக்கட்டியில் வைத்துக் குளிர்ச்சியாக்கி இருதயஸ்தானத்தில் பற்றிட, இருதயத்துடிப்பு குணமாகுமென அக்கீம் ஜகரியாசாஹிப் சொல்கிறார்.

மேற்படி முறையில் கொஞ்சம் பச்சைக் கர்ப்பூரத்தைச் சேர்த்து உபயோகித்தால் அதிக குணஞ் செய்யும்.

அவசியமானால் முன்சொல்லப்பட்ட ஜீவரக்ஷாமிர்த யோக பானத்தில் முக்கால் விராகனெடை கொத்தமல்லி விதையைச் சேர்த்துக் கொள்ளலாம்.

எலுமிச்சம்பழச் சாறு, நாரத்தம்பழச் சாறு, பன்னீர் இவை வகை-க-க்குத் துலா-௫, சர்க்கரை துலா-௨, இவை யெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரித்துப் பனிக்கட்டியில் வைத்துக் குளிர்ச்சியாக்கிக் குடிப்பாட்டவும்.

சந்தனத்தைப் பன்னீர்விட்டிழைத்து, அதில் கொஞ்சம் காடியுங்கலந்து, அதில் வஸ்திரத்துண்டை நனைத்துக் குளிரக்குளிர இருதயஸ்தானத்திற் போடலாம்.



பின்வரும் பிரயோகங்களும் அநுபவமாய்க் கண்டவைகளாதலின் அவற்றையும் எழுதுவாம்.

துளையிடாத நன்முத்து, விராகனெடை-௩, சிவமுருக்கல் விராகனெடை-௨. இவ்விரண்டையும், பருப்புக் கீரைரசம், தாமரைப்பூ ஷர்பத்து இலந்தம்பழ ஷர்பத்து ஆகியவைகளொன்றில் ஊறவைத்துக் கரைத்து, அ[illegible]-க-துலா காசனி விதையைப் போட்டுக்கலந்து கொடுக்கலாம். இவ்விதம் தினம் உ-௩ தடவை செய்துவந்தால் இருதயதாபம் முதலியவை நீக்கும்.

பன்னீர் விட்டு-௪-ஜா[illegible]ம் அரைத்துலர்த்தின துளையிடாத நல்முத்து விரா[illegible]னெடை-வ, இதை, காவுஜபான் திராவகம், தா[illegible]பூ திராவகம் ஆகியவைகளொன்றில் கரைத்து அதி[illegible] கொஞ்சம் தாமரைப்பூஷர்பத்தும் விட்டு உட்கொள்க. இவ்விதம் தினம் உ-௩-தடவை செய்யில், இருதயமும் மற்ற உள் அவயவங்களும் பலப்படும்.

கர்ப்பூரத்தை அல்லது பச்சைக் கர்ப்பூரத்தைச் சலத்தில் கரைத்து, அந்தச்சலத்தை கொஞ்சங் கொஞ்சமாய் மிடறு மிடறாய்த் தாமதித்துத் தாம பானஞ் செய்விப்பதும் இருதயத்தைப் பலப்படுத்த ஏதுவாவதுமன்றி, விஷத்தை வெளிப்படுத்தவும் உதவும்.

மெல்லிய வஸ்திரத்துண்டை தண்ணீரில் நனைத்து இருதயஸ்தானத்திற் போட்டுவைக்க வேண்டும். அதன் ஈரம் உலர்ந்தவுடன் மறுதுண்டை நனைத்துப் போட்டுவைக்க வேண்டும். இவ்விதம் மாற்றி மா

ற்றிச் செய்துவர வேண்டும். இவ்விதம் செய்வதனால் இருதயத்துடிப்புத் தீர்ந்திருக்கிறதென அக்கீம் மீர் ரோஷன் அலிபண்டிதர் சொல்லியிருக்கிறார்.

மேற்படி சலப்பிரயோகத்தினால் குணங்காணாவிட்டால், சந்தன திராவகம் அல்லது கஷாயம், தாமரைப்பூ திராவகம் அல்லது கஷாயம் அல்லது கஸ்தூரிப் பிரம்பு திராவகம் ஆகியவைகளொன்றில் முன்சொன்ன மாதிரி செய்ய[illegible]ப்படும். இதனாலும் குணப்படாவிட்டால் தண்ணீரைச் சிறுகச் சிறுகக் குடிப்பாட்டிக் கொண்டிருக்கத் தீர்ந்துவிடுமென முன்சொன்ன மீர் ரோஷன் அலி பண்டிதரே சொல்கின்றார்.

—※—

## பிளேக் வியாதியில் உண்டாகும் குமட்டல் வாந்திமலப்போக்கு ஆகியவைகளின் சிகிச்சை.

—※—

குமட்டல், வாந்தி, மலப்போக்கு ஆகிய இம்மூன்றின் சிகிச்சையும் ஒன்றேயாதலின் அவை மூன்றையும் ஏகமாய் எழுதுவது யுக்தமாய்க் காணப்படுகிறது.

காடி, பன்னீர், ரோஜாப்பூ எண்ணெய், இந்த மூன்றையும் சமனளவாய் மிஸ்ரமித்து, அதில் வஸ்திரத்துண்டை நனைத்து நெஞ்சுக்குழியில் போடவும். அதிலுள்ள ஈரமுலர்ந்தவுடன் அதையெடுத்து நீக்கிவிட்டு வேறேதுண்டை நனைத்து போடவேண்டும். இவ்விதம் மாற்றிமாற்றிச் சிலதடவை செய்யின் மேற்கண்ட வியாதிகள் தீரும்.



பனிக்கட்டியை நெஞ்சுக்குழியில் வைப்பதினாலும் குமட்டலும் வாந்தியும் நிற்கும்.

ரோஜாப்பூ, ரோஜாப்பூக்கீரா, சொர்ணபூங்காவி, வெண்சந்தனம், மாதுளம்விதை, ஜரிஷ்க், ஸம்மாக்விதை, விழுமிக்கல் மூங்கிலுப்பு, பச்சைக்கர்ப்பூரம் இவை வகை-க-க்கு விராகனெடை-வ, இவையெல்லாவற்றையும் பன்னீர்வார்த்தரைத்து அதில் கொஞ்சம் காடியுஞ் சேர்த்து நெஞ்சரையில பற்றிட, மேற்படி வியாதி தீரும். இந்தப் பிரயோகமானது எந்தவஸ்துவை வாயில்வைத்தாலும் உடனே வாந்தியாகி, ஒருவித ஔஷதமும் கொடுக்க ஏதுவில்லாதிருக்கும் சமயத்தில் செய்தாலும் தீராத வாந்தியும் நிற்கும்.

இந்தப் பற்றிட்ட அரை அல்லது முக்கால் மணிக்குப்பின் கீழ்க்காணும் குடிநீரை உபயோகிக்கவும்.

குச்சி, காம்பு, முதலியவைகள் நீக்கி சுத்திசெய்த ஜரிஷ்க், ஸம்மாக், இவை வகை-க-க்குப் பலம்-க, மாதுளம்விதை விராகனெடை-கக, ரோஜாப்பூ இதழ், மூங்கிலுப்பு, இவை வகை-க-க்கு விராகனெடை-ரு, பிஸ்தாக்கொட்டையின் மேல்தோல், உலர்ந்தின பொதினா இவை வகை-க-க்கு விராகனெடை-உ, அகரு விராகனெடை-க. இவையெல்லாவற்றையும் ஒன்றாயிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்க. கவ-க௦-விராகனெடை சூரணத்தை மாதுளம்பழ ரசத்தில் குழைத்துச் சாப்பிடவும். இவ்விதம் செய்வதனால் வாந்தி, மலப்போக்கு ஆகியவைகளைக் கண்டிக்கும்.

புளிப்புடன் துளசிவிதை, ஸம்மாக், [...]தும்பைப் பூ, மூங்கிலுப்பு, ரோஜாப்பூ, திராக்ஷப்[...]ம், இவை வகைக்கு விராகனெடை [...], [...]காக்கொட்டை மேல்தோல், விராகனெடை[...], இவையெல்லாவற்றையும் மைபோல் [அரை]த்து வடிகட்டி, மாதுளம்பழ ஷர்பத்துடன் [க]லந்து சீமை இலந்தைப்பழ ஷர்பத்துடன் சாப்பிட வாந்தி முதலியவைகள் நிற்கும்.

புளியைக் கரைத்து வடித்து எடுத்த புளித்தெளிநீர், துலா-௨, ஆலுபுகாரா ஆல[...]ப்பூத் திநீர் துலா-௨, கிர்[...]ப்பானம் துலா-௨. இவையெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து வடிகட்டிப் பானம் செய்விக்கவும்.

ஜீவரக்ஷாமிர்த யோகபானத்தில் சொல்லப்பட்டிருக்கிற இந்நீற்றுப் பச்சை விதைக்குப்பதிலாக, புளித்தெளிநீர் சேர்த்துக் கொள்வதினால் அதிக குணமுண்டாகும்.

—*—

## பிளேகில் உண்டாகும் மயக்கச் சிகிச்சை.

—*—

இந்த வியாதியில் மயக்கங் கண்டவர்கள் முகத்தில் பன்னீரினால் அல்லது தண்ணீரினால் விசையாய் அடிக்க வேண்டும்.

பச்சை திராக்ஷை ஷர்பத்தை, பன்னீரிலும் கஸ்தூரிப் பிரம்பு திராவகத்திலும் கலந்து குடிப்பாட்ட வேண்டும்.



[...]க்கால் விராகனெடை சேர்த்துக் குலகியைச் சாப்பிடச் செய்ய வேண்டும்.

சீமை இலந்தைப்பழம், (Apple) ஷர்பத்து, மாதுளங்கனி ஷர்பத்து ஆகியவைகளும் உபயோகப்படும்.

கையிலும் காலிலும் துணி முதலிய மிருதுவான வஸ்துக்களைச் சுற்றிக் கட்டுவதினாலும் மயக்கந் தீரும்.

ஆர்ப்பலத்தினால் மய[க்க]முண்டானால் பலகாரிப் பிரயோகங்களையுபயோ[கப்]படுத்தவேண்டியது. இதன் முறைகள் பின்னமு[...]டும்.

விஷதருமத்தினால் மயக்க முண்டானால், ஜீவரக்ஷாமிர்த யோகபானத்தை உள்ளிற்கு உபயோகப்படுத்தி, முகத்தில் ஜலப்பிரயோகம் செய்தல் முதலிய வெளிப்பிரயோகங்களையும் செய்யவேண்டியது.

பிளேக் நோயில் மேற்கண்ட இரண்டு காரணங்களினால் பெரும்பாலும் மயக்கங்களுணும். சிலசமயம் வேறு காரணங்களினால் கண்டால் அதற்குத் தகுந்த சிகிச்சை செய்ய வேண்டியது.

பச்சைக் கற்பூரம், வெள்சந்தனம், சொர்ணபுஷ்காவி, கொத்துமல்லி விதை, மூங்கிலுப்பு, ஆகிய இவற்றைச் சமனிடையா யெடுத்துப் பன்னீர்விட்டரைத்து, அதனுடன் கொஞ்சம் வெள்ளரிக்காய்ச் சாறு, கொஞ்சம் ரோஜாப்பூ அத்தர் முதலிய சுகந்த அத்தர்களையும் சேர்த்து ஒருசீசாவில் வைத்துக் கொண்டு அடிக்கடி முகர்ந்து கொண்டுவரவும். இதனால் அதிகப் பிரயோசன முண்டாகும். இவ்வி

தமே சுகந்த முள்ளவைகளும் பலகாரிகளுமான குளிர்ச்சியான அவுடதங்களை முகரச் செய்யலாம்.

—※—

## பித்தினால் உண்டாம் புலம்பல் புத்திதடுமாற்றம் இவற்றின் சிகிச்சை.

—※—

ஒவ்வொரு வேளை பித்தத்தில் தீக்ஷண்ணியம் மதிகரித்து அது அதிக அளவாய் மூளையிற்சென்றால் ரோகி புலம்ப ஆ[ரம்]பிக்கிறான். மேலும் மூளையின் ஜவ்வில் வீக்கமு[ம்] முண்டாகி விடுகிறது. இந்தச் சமயத்தில் பித்[த][illegible]னி சிகிச்சை செய்யவேண்டியது.

சந்தனத்தைப் பன்னீர் விட்டரைத்து அதில் கொஞ்சம் காடியும் சேர்த்து, அதில் வஸ்திரத்துண்டை நனைத்து மூளை ஸ்தானத்தில் போடவேண்டும். அதன் ஈரம் உலர்ந்து போனவுடன் அதை நீக்கிவிட்டு வேறு ஒருதுண்டை நனைத்துப் போடவேண்டும். இவ்விதம் துண்டை மாற்றி மாற்றிப் போட அதிக சீக்கிரங் குணங்காணும்.

வெண்சந்தனம், செஞ்சந்தனம், ரோஜாப்பூ விதம் ஆகிய இவைகளை பன்னீர்விட்டரைத்து, பனிக்கட்டியில் வைத்துக் குளிர்ச்சி யுண்டாக்கி மார்பில் பற்றுப் போடலாம்.

ரோஜாப்பூ எண்ணெய், பன்னீர், காடி, காடூ எண்ணெய் ஆகிய இவை சமனெடை. இவையெல்லாவற்றையும் ஒன்றாய் மிஸ்ரயித்து, இதில் மெல்லிய வஸ்திரத்துண்டை நனைத்துத் தலையின் மீது போட்டு வருவதினால் குணமுண்டாகும்.



மலத்தைப் போக்க வேண்டியது அவசியமானால் இலகுபேதி அவுடதத்தை யுபயோகப்படுத்த வேண்டியது. பின்காணும் ஊறல் கஷாயம் அதிகம் உபயோகப்படத் தக்கது.

பனைப்பூ விராகனெடைகளே, தாமரைப்பூ, காவுஜபான்பூ, காவுஜபான், காசினிவிதை இவை வகைக்கு விராகனெடை-க, ஆலுபுகாரா, சீமை விலந்தைப்பழம் (Thorn Apple) இவை வகைக்கு அஞ்சஞ்சு பழங்கள். காசினித் தீநீர், காவுஜபான் தீநீர், பன்னீர் இம்மூன்றையும் வகைக்குப் பலம்-க, ஆய் எடுத்து மிஸ்ரயித்து மேற்கண்டவைகளைப்போட்டு ஒருஇரவு ஊறவைத்து மறுநாள் காலையில் பிசைந்து வடிகட்டி அதில் -[illegible] குல்கந்தைச் சேர்த்துக் கரைத்துக் கொடுக்கவும். அவசியமானால் அதில் மேனா, புளி, தரஞ்சபீன் ஆகிய இம்மூன்றில் ஒன்றை சமயோசிதமாய்ச் சேர்த்தும் உபயோகிக்கலாம். இவ்விதம் மூன்றுநாட் காலையில் செய்துவர மலமிளகி மேற்படி லக்ஷணம் நீங்கும்.

எவ்விதத்திலும் ஒருகாரணத்தினால் ரோகியானவன் இந்தக் கஷாயத்தைக் குடிக்கக் கூடாமையாயிருந்தால், ரோஜாப்பூ எண்ணெய், புளி முதலிய இலகுபேதி அவுடதங்கள் ஆகியவைகளினால் திரிப்பிரயோகஞ் செய்யவேண்டியது.

இந்த இலகுபேதி அவுடதமும் திரிப்பிரயோகமும் பிரயோசனப்படவில்லையானால் சமயோசிதமாய் சரக்கொன்றைப்புளியை அவசியமான அளவு முன் பிரயோகத்தோடு சேர்த்து உபயோகிக்க வேண்டியது.

இந்த இலகுபேதி, திரிப்பிரயோகம் முதலியவைகள் இந்த வியாதியிலன்றி, இதர வியாதிகளிலும் உபயோகிப்பிக்கத் தக்கவைகள். ஆனால் இம்முறைகள் வைத்தியர்களின் அநுபவம், சமயோசித புத்தி நுட்பம் முதலியவைகளைச் சார்ந்த[illegible]

ஜீவரக்ஷாமிர்த யோகபானத்தில் -ரு- கிராக்னெடை பேதாளுக் கோழையைச் சேர்த்துக்கொடுப்பதினாலும் மேற்படி லக்ஷணங்கள் சாந்தப்படும்.

இவ்விதம் சிகிச்சகர்கள் வியாதியின் ஏற்றக்குறைவிற்குத் [illegible]தக்கபடி முன் சொல்லப்பட்டவைகளில் குறைத்தும் அதிகப் படுத்தியும் கொடுக்கக் கூடும். இவைகளெல்லாம் அநுபவசாலிகளுக்குத் தெரிந்தவைகளே.

பன்னீரில் இழைத்த சந்தனம், பச்சைக்கற்பூரம், ரோஜாப்பூ அத்தர், தாழம்பூ அத்தர் இவைகளைத் தனியாகவும் பலவாகவும் சேர்த்து முகரலாம். சீமையிலந்தைப் பழத்தையும் (Apple) முகரலாம். இதனால் மூளைப்பலப்படும்.

மூளையில் வரட்சியுண்டாகி பஞ்சேந்திரிய உணர்ச்சிகள் குறையின், மூக்கில் முலைப்பாலைச் சொட்டவும். இப்படி யிரண்டொருதடவை செய்தும் குணப்படாவிட்டால் மறுதடவை மூக்கிலும், காதிலும் சொட்டவும். முலைப்பால் அகப்படாவிட்டால் வெள்ளாட்டுப்பாலையும் உபயோகிக்கலாம். மேற்கண்ட சிகிச்சையினாலும் பிரயோசனப் படாவிட்டால் மெல்லியவஸ்திரத்துண்டை முலைப்பாலில் அல்லது வெள்ளாட்டுப்பாலில் நனைத்து உச்சியிற்போட



வும். இதனாலும் குணங்காணாவிட்டால், நெல்லிவற்றலையிடித்துத் தூளாக்கி அதை யுச்சியில் வைத்துக் கட்டவும்.

வெள்ளரிக்காய், கெக்[illegible]க்காய் ஆகியவைகளின் [illegible] யு[illegible]ற் பூசியும் வைக்கலாம்.

—*—

## பிளேக் ரோகியின் ஆகார வகைகள்.

—*—

நாம் முன் சொல்லியிருப்பதுபோல[illegible]த்திப்புள்ளவைகளையும், சூடான வஸ்துக்களையும் பொதுவாய்த்தவிர்க்கவேண்டியது முக்கியம். இந்த ரோகிகளுக்குப் பின்காணும் ஆகாரங்கள் ஏற்றவைகள். அவையாவன:—பவையரிசிக் கஞ்சி, ஜவ்வரிசிக் கஞ்சி, பருப்புக்கீரை, சுரைக்காய், தயிர்ச்சாதம், காடிசேர்த்தகாசினி, மசூரிப்பருப்பு, பச்சைப்பயறு ஆகிய இந்த வகைகளெல்லாம் பிளேக் ரோகிக்கு ஏற்றவைகள். ஆனால் இவை[illegible]ளில், புளி, ஜரிஷ்க், ஆலுபுகாரா [illegible]ச்சேர்த்தே யுபயோகிக்க வேண்டியது.

பவையரிசிச்சத்து, கோதுமைச்சத்து, மசூரிப்பருப்பு ஆகியவைகளின் பாயசங்களுமாகும். ஆனால் இனிப்பு மிகவும் குறைந்த அளவாகவே யிருக்க வேண்டும்.

பாலை அரைப்பாகமாய்ச் சுண்டக்காய்ச்சி, பாலேட்டை நீக்கிவிட்டு, குடிப்பாட்டலாம். இந்தப் பாலில் -வ- கிராக்னெடை பாகப்பிசின் சூரணத்தை

யும் வ-விராகனென்டை கொம்பாக்குச் சூரணத்தை யும் மிஸ்ரமித்துக் கொடுக்கலாம். பாலொத்துக் கொள்ளாமல் மலப்போக் குண்டானால் பாலை அளவில் குறைத்துக் கொள்ளலாம். திக்திப்புக் குறைவாய் வேறுவஸ்துக்களோடு சேர்த்துப் பாயசமாகச் செய்தும் கொடுக்கலாம். [illegible] வற்றுக் கொள்ளாவிட்டாலும், அல்லது அதில் பிரியப்படாவிட்டாலும் அதை நீக்கிவிடவும். முன்சொன்னபடி மாதுளிப்பருப்பு, பச்சைப்பயறு, காஜர்க்கிழங்கு, ஆகியவைகளை இஷ்டப்படி யினிப்பில்லாமல் பக்குவமாக [illegible] கொடுக்கவும். இனிப்பில் பிரியமிருந்தால் மிகவும் குறைந்த அளவாய் சீனி அல்லது கற்கண்டு சேர்த்துக் கொள்ளவும். அல்லது இனிப்பிற்காக வகைவாம் ஒருவகை ஷர்பத்தில் கொஞ்சம் சேர்த்து உபயோகிக்கலாம். இதற்காக, இலந்தை, தாமரை, நாவுலாபான், சந்தனம் ஆகிய ஷர்பத்துகள் மிக நலமானவைகள்.

உஷ்ணகாலங்களில் தாகமும் வரட்சியும் அதிகமாயிருந்தால் குளிர்ந்த சலத்தைக் குடிப்பாட்டலாம். மழைக் கால[illegible] கட்டி, வெடியுப்புப் பிரயோகம், குளிர்ந்த காற்று ஆகியவைகளில் வைத்துக் குளிர்ச்சி செய்யப்பட்ட சலத்தை யுபயோகிப்பது நலமல்ல. இந்தக்காலங்களில் தண்ணீர்க்குப்பதிலாய், முன்சொன்னபடி அரைப்பாகமாய்ச் சுண்டக்காய்ச்சின பாலைக் குடிப்பாட்டலாம்.

இந்த வியாதியில் புதிய இளநீர் சலத்தைக் குடிப்பாட்டுவதும், அதன் வழுக்கையைச் சாப்பிடுவதும் அதிகம் பிரயோசனத்தைக் கொடுக்கத்தக்க



வைகள். இளநீர் குடிப்பதினால் முக்கியமாய், வாய், தொண்டை முதலியஸ்தானங்களிலுள்ள வேதனைகள் நீங்குகின்றன. இளநீரில் நெற்பொரியை யூறவைத்துக் கொடுக்கலாம். பேயன் வாழைப்பழமும் இதில் உபயோகப்படத் தக்கதே.

நமது தேசத்தில் பெரிய அம்மைநோயில் உபயோகப்படுத்தக் கூடிய ஆகாரங்கள் முதலிய பரிகாரங்களை இந்த மஹாமாரி நோயில் முக்கியமாய் உபயோகிக்க வேண்டியது. இந்த வகைகளெல்லாம் நமது வீட்டிலுள்ள பெரிய அம்மைமார்களுக்குத் தெரிந்தவைகளே.

இந்தரோகிக்கு, இறைச்சி, மதுபானம் ஆகியவைகளையுபயோகப் படுத்துவதில் விகற்ப அபிப்பிராயங்களுள்ளன. சில பண்டிதர்கள் இந்தச்சமயத்தில் இந்த இரண்டுவஸ்துவும் கட்டாயம் கூடாதென்கிறார்கள். சில பண்டிதர்கள் இந்தச்சமயத்தில் இவை யிரண்டும் அவசியம் வேண்டுமென்கிறார்கள், ஆயினும் பெரும்பாலார் கருத்துப்பின்வருகிறவிதமாம்.

பிளேக் நோயில் விஷதருமமும் நிசக்தியுமும் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆகையால் இந்த வஸ்துக்களைக்கூடியவரையில் நீக்கிவைப்பதே யுத்தமம். இது வைத்தியசாஸ்திர சிகிச்சாக்கிரமத்திற்கும் ஒத்தேயிருக்கிறது. ஆனால் இந்த ரோகி மிகவும் துர்ப்பலப்பட்டு, அசக்தனாயிருக்கும்போது பலமுண்டாக்க அவசியமானால் அப்போது இறைச்சியையும் கொத்துமல்லி விதையும் சேர்த்து சத்தெடுத்து உபயோகிக்கலாம். இல்கு

வான திராக்ஷாபானத்தை கஸ்தூரிப்பிரம்பு திராவகம், காவுஜபான் திராவகம் ஆகியவைகளோடு மிகவும் குறைந்த அளவாய்க் கலந்துகொடுக்கலாம். ஆயினும் இந்த இரண்டையும் பலமுண்டாக்க கட்டாயம் அவசியமான காலங்களில் மாத்திரம் ஏதேனும் ஒன்றுடன் கலந்து அவற்றைச் சாந்தப்படுத்தி யுபயோகிக்கலாமென்பதாம்.

—※—

## பிளேக்கட்டியின் சிகிச்சை.

—※—

இந்தக் கட்டியின்மீது குளிர்ச்சியான அவுடதங்களைப் பற்றிடலாமா? பற்றிடலாகாதா? என பல விகற்ப அபிப்பிராயங்களுண்டு. இவ்விரண்டு அபிப்பிராயங்களின் முடிவானது கட்டியாரம்பத்தில் குளிர்ச்சியானவைகளைப் பற்றிடவேண்டுமென்பதும், அதன்பின்பு சூடான அவுடதங்களைப்பற்றிட உபயோகப்படுத்த வேண்டுமென்பதே.

வீக்கங்காணும்போது, காடி, பன்னீர், சந்தனம் இம்மூன்றையும் ஒன்றாய் மிஸ்ரமித்து அதில் படற்பஞ்சை நனைத்து வீக்கத்தின்மீது வைத்துக் கட்டவேண்டும்.

கொத்துமல்லிக் கீரைச்சாறு, காடி ஆகிய இவ்விரண்டையுங்கலந்து அதில் ஜத்வாரை (நிர்விஷாவை) இழைத்து வீக்கத்தின்மீது பற்றிடலாம்.

இதன்பின்பு கோழிமுட்டையின் கருவைமாத்திரம் தனியாய்ப்பற்றிடலாம்.

வீக்கத்தின்மீது வெந்நீரை தாரையாய் விடுவதினாலும் குணமேயுண்டாகும்.



இந்தக் கட்டிகளை சத்திரம்செய்யலாம் எனச் சிலரும் செய்யலாகாதெனச் சிலரும் சொல்கின்றார்கள். சுரம் முதலிய துர்க்குணங்கள் நீங்கி தேகத்தில் பலமிருந்தால் சத்திரம்செய்யலாம். அவை பழுத்துப் பக்குவமாயிருந்தால் சத்திரஞ் செய்யலாம். மற்ற காலங்களில் நிதானிப்பதே உத்தமம்.

இந்தரோகத்தில் இரத்தங்குத்தி வாங்கலாமா, வாங்கலாகாதாவென அபிப்பிராயபேதங்கள் காணப்படுகின்றன. இந்தக்கொடிய வியாதியில், இந்த பலவீனப்பட்ட சமயத்தில் இரத்தங்குத்தி வாங்காமலிருப்பதே உத்தமம்.

—※—

## பிளேக் வியாதியில் உபயோகப் படுத்தக்கூடிய யோக முறைகள்.

### இரத்தினாதி பிளேக் நிவாரணி.

—※—

செந்நீர்ப்பத்துள்ள மாணிக்கம், துளையிடாத நன்முத்து, கஹருபா, விஷமுறிக்கல், சுத்தியான சீமைக் காவிக்கல், தருனஜ் அக்ரபி, பல்லாயின் விதை, சீமைத்தண்ணீர் விட்டான் கிழங்கு, பஹமன்சுபேத், பஹமன்சுருக், ஊப்புல்கார் (Ghar) முங்கிலுப்பு, இலவங்கப்பட்டை, இவை வகை-க-க்கு விராகனெடை-க, குங்குமப்பூ விராகனெடை-[illegible] உயர்ந்த அம்பர், அசல்தரமான கஸ்தூரி, தங்கரேக்கு, வெள்ளிரேக்கு, இவை வகை-க-க்கு குன்றிமணியெடை-௫.

செய்முறை:—இரத்தினவகைகளை நன்னிக்கல் கல்வத்தில் பன்னீர்வார்த்து-௪-ஜாமம் அரைத்துக் கொள்க. தங்கரேக்கையும், வெள்ளிரேக்கையும் கருவேலம்பிசினை யூறவைத்து வடிகட்டின சலத்தில் ஒன்றாய் மத்தித்துக்கொள்ளவும். குங்குமப்பூவையும் கஸ்தூரியையும் பன்னீர்வார்த்து நன்றாய் அரைத்துக் கொள்ளவும். அம்பரை ஒரு விராகனெடை பல்சான் எண்ணெய்வார்த்து அரைத்துக் கொள்ளவும். மற்ற சரக்குகளை பொன்றாயிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். பின்பு எல்லா[illegible]வும் ஒன்றாய் மிஸ்ரமித்து கொஞ்சம் அரைத்து[illegible]லைப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலுலர்த்திக்கொள்ளவும்.

அளவு - பெரியவர்களுக்கு - ௪-மாத்திரைகள். [illegible]௧-துலா பன்னீரிலிழைத்து உட்கொள்ளவேண்டும்.

உபயோகம்:—இருதயத்தையும் பொதுவாய் தேகத்தையும் பலப்படுத்தும், கொள்ளைநோய்க் காற்று, விஷக்காற்று, வாதபித்தசிலேஷ்மதோஷங்கள், விஷவஸ்துக்களின் கொடூரம் ஆகியவைகளை நீக்கும்.

—※—

## கஸ்தூரிப் பிரயோகம்.

—※—

பன்[illegible]ர்வார்த்து -௪-ஜாமமரைத் துலர்த்தின துளையிட[illegible]க நன்முத்து, பன்னீர்வார்த்து-௪-சாமம் அரைத்[illegible]லர்த்தின கஹருபா, கத்தரிக்கப் பட்டபட்டு, மு[illegible]லுப்புச்சூரணம், ரோஜாப்பூச்சூரணம்,



கொத்துமல்லிவிதைச் சூரணம், காஹூவிதைச் சூரணம், காவுஜபான் சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-௪, வெண்சந்தனச்சூரணம், குச்சி, காயப்பு நீக்கப்பட்ட ஜரிஷ்க், இவை வகை-க-க்கு விராகனெடை-உ, பவழப்புற்று, விராகனெடை-க, (இதைப் பன்னீர்வார்த்து-௪-சாமம் அரைத்துக் கொள்ளவேண்டும்) வெள்ளிரேக்கு விராகனெடை-க, உயர்ந்தகஸ்தூரி விராகனெடை-கஉ, உயர்ந்த அம்பர் விராகனெடை-க, சீமையிலந்தைப்பழம் (Apple) சாறுபலம்-௪0, சீனிசருக்கரை பலம்-ஙூ, தேன்பலம்-எ.

செய்முறை:—ஜரிஷ்க் பழத்தை கல்வத்தில் மைபோலரைத்துக்கொள்க. கஸ்தூரியைக் கொஞ்சம் பன்னீர்விட்டரைத்துக் கொள்க. வெள்ளிரேக்கைப் பிசின்சலத்தில் மத்தித்துக்கொள்க. அம்பரை பல்ஸான் எண்ணெய்விட்டு அரைத்துக் கொள்க. பின்பு எல்லாச் சரக்குகளையும் ஒன்றாய்ச் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்துக் கொள்க. பின்பு இலந்தைப் பழரசத்தைக் காய்ச்சி சுண்டிக் குழம்புபதமயான வுடன், சீனிசர்க்கரை, தேன் ஆகிய வைகளைச் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் முன் சித்தப் படுத்தின சூரணங்களைக் கொட்டிக்கிளறிக் கிழிறக்கி ஆறினபின் பீங்கான்பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—துலா-க-கூ-ஆக [illegible]ம்-௩-௪-தடவைகள் கொடுக்கலாம்.

உபயோகம்:—பிளேக் வியாதியினுண்டாகும் இருதய அதிர்ச்சி, இருதயத் துடிப்பு, ஆகியவைகளை நீக்கி, இருதயம், ஈரல், மூளை ஆகியவைகளைப் பலப்படுத்தும்.

## வேறு.

௪-சாமம் பன்னீர் வார்த்தரைத்துலர்த்தின துளையிடாத நன்முத்து, ௪-சாமம் பன்னீர் வார்த்தரைத்துலர்த்தின கஹறுபா, ரோஜாப்பூ சூரணம், வெண் சந்தனச் சூரணம், மூங்கிலுப்புத்தூள், சுத்தரித்த கோராப்பட்டு, கொத்துமல்லி விதைச் சூரணம், காவுஜுபான் பூ சூரணம், பருப்புக்கீரை விதைச் சூரணம், இவை வகை-௩-க்கு விராகனெடை ௫வ, உயர்ந்த கஸ்தூரி விராகனெடை-அ, கற்கண்டு பலம்-௩, சீமை யிலந்தைப்பழ (Apple) ச்சாறு பலம்-௫0.

செய்முறை:—கஸ்தூரியைக் கொஞ்சம் பன்னீர் வார்த்து அரைத்து மற்றெல்லாச் சரக்குகளையும் ஒன்றாய் மிசிரமித்துக் கொள்ளவும். பின்பு சற்கண்டையும் சாற்றையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தினவைகளைக் கொட்டிக் கிளறிக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

மாத்திரை:—விராகனெடை-க-உ-தினம் இரண்டு மூன்று தடவை யுபயோகிக்கலாம்.

உபயோகம்:—இந்தப் பிளேக் வியாதி, தொற்று வியாதி முதலியவைகளினுண்டான இருதய பலஹீனம், பயம், திகிலடைதல் முதலியவை தீரும்.



## குறிப்பு

சூடதிகரித்திருந்தால் இந்தப் பாகத்துடன் -ற, விராகனெடை பச்சைக் கற்பூரத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். இந்த முறையில்-௰ விராகனெடை வெள்ளி ரேக்கையும், வ-விராகனெடை தங்க ரேக்கையும் சேர்த்துக் கொண்டால் குணம் இன்னும் விசேஷமாயிருக்கும்.

—*—

## சிதகுதூகலதி.

—*—

சீமை வெள்ளரிவித்துப் பருப்பு பலம்-உ, நாட்டு வெள்ளரிவித்துப் பருப்பு பலம்-உ, சுரை விதைப் பருப்பு பலம்-[illegible], முலாம்பழ விதைப் பருப்பு பல[illegible], ரோஜாப்பூ, மூங்கிலுப்பு, பஹமபேத், காவுஜுபான்-இவை வகை-க-க்குப் பலம்-உ, சந்தனம் பலம்-வ, கொத்துமல்லி விதை பலம்-வ, பருப்புக்கீரை விதை பலம்-க, ஜரிஷ்க் பலம்-அ, மேல்தோல் நீக்கப்பட்ட பாதம்பருப்பு பலம்-அ, சீனி பலம்-௫0.

செய்முறை:—சரக்குகளை யிடித்து வஸ்திரகாயம் செய்து கொள்க. பருப்பினங்களை யரைத்துச் சூரணத்துடன் கலந்து, சீனியுடன் ஜரிஷ்க் பழத்தைச் சேர்த்துக் கொஞ்சம் சலம்விட்டுக் காய்ச்சி வடிகட்டித் திப்பிநீக்கிப் பின்பு காய்ச்சிப் பாகுபதத்தில் சூரணத்தைச் சேர்த்து, சந்தனக்கட்டையின் மத்தினாற் கடைந்து எடுத்துக் கொள்க.

மாத்திரை:—விராகனெடை-௫-ற-சாப்பிடலாம்.

உபயோகம்:—சூடு, விடாச்சுரம், அஸ்திச்சூடு, தேக அழலை முதலிய பிளேக் நோயின் துர்க்குணங்கள் நீங்கி தேகபலம் முதலியவை யுண்டாக்கும்.

—※—

## மஹா சீதகுதூகலநி.

—※—

மேற்கண்ட சாமான்களுடன், ஆரோக்கிய விர்த்தி போதினி முதற்பாகத்திற் சொல்லியபடி பக்குவப்படுத்தின அரையிடாத மன்முத்து, நற்பவளம், கஸ்தூரி இவை வகை-க-க்கு விராகனெடை-க, சேர்த்து முன்பாகப்படியே செய்துகொள்ளவும்.

மாத்திரை:—விராகனெடை-கஅ-உற-சாப்பிடலாம்.

உபயோகம்:—மேற்கண்ட வியாதிகளை நீக்கி, தேகபலம், மனோபலம், மனோற்சாகம், மனக்களிப்பு முதலியவை யுண்டாகும்.

—※—

## சொர்ணமகா சீதகுதூகலநி.

—※—

மேற்கண்ட வஸ்துக்களுடன் ரு-வை-தா- போதினி முதற்பாகத்தின் பக்குவ லக்ஷணத்திற் சொல்லியபடி தங்கம், வெள்ளி ஆகிய இவை வகை-க-க்கு விராகனெடை-க, அல்லது தங்கரேக்கு-ஈ, வெள்ளிரேக்கு-ஈ, சேர்த்து முன்போல செய்துகொள்ளவும்.

மாத்திரை:—விராகனெடை-க-கஉ-சாப்பிடலாம்.



உபயோகம்:—இந்தபிளேக் நோயில் உண்டாகும் பல க்ஷீணத்தை நீக்கி, இருதயம் முதலிய இராஜக்ருவிகளைச் சீர்ப்படுத்தி சுகத்தைக் காப்பாற்றி அபாயத்தினின்றும் தப்பித்துக்கொள்ளும் வலிவையுண்டாக்கும்.

—※—

## இலகு சீதகுதூகலநி.

—※—

மூங்கிலுப்பு, காசினிவிதை, இவை வகை-க-க்கு விராகனெடை-உரு, வெண்சந்தனம், செஞ்சந்தனம், கொத்துமல்லிவிதை, இவை வகை-க-க்கு விராகனெடை-உவ; சுத்திசெய்த காஹுவிதை, முலாம்பழ விதைப்பருப்பு, பரங்கிக்காய் விதைப்பருப்பு, வெள்ளரிவிதைப் பருப்பு, விதைநீக்கின ஜரிஷ்க்பழம் இவை வகை-க-க்கு விராகனெடை-க. சீனிசருக்கரைபலம்-ரு.

செய்முறை:—சரக்குகளையிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். பருப்பினங்களை யரைத்து மேற்படி சூரணத்திற் கலந்துகொள்ளவும். சீனியுடன் ஜரிஷ்க் பழத்தைச் சேர்த்துக் கொஞ்சம் சலம்விட்டுக்காய்ச்சி நன்றாய் மத்தித்து வடிகட்டி மறுபடியும் காய்ச்சிப் பாகு பதத்தில் முன்கலவையைச்சேர்த்துக் கிண்டிக்கிளறிக் கீழிறக்கி ஆறினபின் பத்திரப்படுத்தவும்.

சீனிக்குப்பதில் சீமையிலந்தைப்பழ ஷர்பத்து செல்லத்தக்க அளவு சேர்த்துச் செய்தால் மிகவும் நன்மைபயக்கும்.

## பித்தநிவாரண ஷர்பத்து.

—※—

சீமைவிலந்தைப் பழரசம், (Apple) பலம்-௨௰; சுக்காங்கீரை ரசம், புளிப்பு திராக்ஷைப்பழ ரசம், நாரிஞ்சு நாரத்தம்பழரசம், பழயசீமைக்காடி இவை வகை-௧-க்குப்பலம்-௨௰, பச்சைக் கர்ப்பூரம் விராகனெடை-௧, தேவல்சீனி விராகனெடை-௨௰, அப்திமூன் விராகனெடை-௰, சீனி சருக்கரை பலம்-௭௰, குங்குமப்பூ விராகனெடை-௰.

செய்முறை:—பச்சைக்கர்ப்பூரம், தேவல்சீனி, அப்திமூன் இம்மூன்றையும் ஒருவஸ்திரத் துண்டில் தளர்ச்சியாய் முடிந்து திரவங்களை ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி, அதில் முன்முடிச்சைப் போட்டுக் காய்ச்சி, அதை ஒரு குச்சியினால் நசுக்கிக்கொண்டிருந்து, அந்த ரசங்கள் மூன்றிலொரு பாகமாய்ச் சுண்டினபின், அந்த முடிச்சைநீக்கிவிட்டு சீனியைச் சேர்த்துக்காய்ச்சி இறக்கும் சமயத்தில் குங்குமப்பூவை யரைத்துப்போட்டு, பாகுபதத்தில் இறக்கி ஆறவைத்து சீஷாவில்வைத்துக்கொள்க.

மாத்திரை:—௧-டு-தலா ஷர்பத்தைப் பனிக்கட்டியில்வைத்துக் குளிர்ச்சியாக்கி, பன்னீர், கஸ்தூரிப் பிரம்புத்திராவகம் ஆகியவைகளொன்றுடன் கலந்து காலையில் சாப்பிடவும்,

உபயோகம்:—பித்தவியாதிமுதலிய தொற்றுவியாதிகள் தீரும். விஷக்காற்று முதலியவை தொற்றாது. இந்த ஷர்பத்தானது, எகிப்து தேசத்தில் இக்கொள்ளை நோயுண்டானபொழுது உபயோகப்படுத்தப்பட்டு அனேகர் இக்கொள்ளைநோய்



க்குத் தப்பிப் பிழைத்தார்களென டிப்ரியென்னும் பண்டிதர் சொல்லியிருக்கிறார்.

—※—

## தாழம்பூ ஷர்பத்து

—※—

தாழம்பூ, கொட்டை நீக்கப்பட்டபுளி, சீமைவிலந்தைப்பழம் (Thorn apple) வகை-௧-க்குப் பலம்-௧௰, சோம்பு பலம்-௫, வெண்சந்தனம், செஞ்சந்தனம், இவை வகை-௧-க்கு விராகனெடை-௧௰; இவற்றை-௪-படி தண்ணீர்விட்டுக் காய்ச்சி நாலிலொரு பாகமாக சுண்டவைத்து யிறக்கி வடிக்கட்டிக்கொள்க. புளிப்பு மாதுளம்பழரசம், புளிப்பு மாதுளம்பழரசம், பழய திராக்ஷாக்காடி இவை வகை-௧-க்குப் பலம்-௧௰. முன் சித்தப்படுத்தின கஷாய முதலிய எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக் காய்ச்சி-௨-௰-கொதிவந்தபின்-௧௰-பலம் சீனி சருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி, ௨௰-விராகனெடை பச்சைக் கர்ப்பூரத்தையும், ௨௰-விராகனெடை குங்குமப்பூவையும் அரைத்து அதில் கலக்கி சீஷாவில் பத்திரப் படுத்தவும்.

மாத்திரை:—௧-முதல்-௨, பலம் ஷர்பத்து பானஞ் செய்விக்கலாம்.

உபயோகம்:—பித்தநோயில் உண்டாகும் துர்க்குணங்களை நீக்கி இருதயத்தைப் பலப்படுத்தி தேக சுகத்தைக் காப்பாற்றி வரும்.

## தாழை ஷர்பத்து.

—※—

மேல்தோல் சீவப்பட்ட தாழைவிழுது, கொட்டை நீக்கப்பட்ட புளி, சீமை யிலந்தைப்பழம் (Thorn apple) சோம்பு இவை வகை-௧-க்குப் பலம் - ௧௫, வெண்சந்தனம், செஞ்சந்தனம், இவை வகை-௧-க்கு விராகனெடை-௧௧வ, சடாமாஞ்சி, ரோஜாப்பூ இவை வகை-௧-க்கு விராகனெடை-௨வ, இவை யெல்லாவற்றையும் இடித்து அஞ்சுபடி சலம் வார்த்துக் காய்ச்சி நாலிலொரு பாகமாய்ச் சுண்டினபின் இறக்கி வடித்துக் கொள்க. புளிப்பு மாதுளம்பழ ரசம், இனிப்பு மாது[illegible]பழரசம், பழய திராக்ஷாக் காடி இவை வகை-௧-க்குப் பலம் - ௧௫, எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து, அடுப்பேற்றிச் சிறுதீயா லெரித்து-௨௫-கொதிவந்தபின் சீனி சர்க்கரை பலம்-௧௫ சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில்-௨வ-விராகனெடை குங்குமப்பூ, ௨வ-விராகனெடை பச்சைக் கர்ப்பூரம் இவ்விரண்டையும் அரைத்துக் கலக்கி யிறக்கி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—முன் சொன்னபடி செய்ய முன் சொன்ன குணங் களுண்டாம்.

—※—

## சந்தன ஷர்பத்து.

—※—

வெண் சந்தனத்தூள் பலம்-௨, இதனை-௧௬, பலம் பன்னீரில் ஒருநாளூறவைத்து மறுநாள் காய்ச்சி அரைபாகம் சுண்டினபின் யிறக்கி வடிக்கட்டி,



அஞ்சு பலம் சீனிசருக்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கி சீஷாவில் பத்திரப்படுத்தவும். வேளை-௧-க்கு தோலா-௧-௧½, ஷர்பத்து பானம் செய்யலாம்.

—※—

## சந்தன ஷர்பத்து (வேறுவகை)

—※—

சந்தனத்தூள் பலம்-௫, கொ[illegible]மல்லி விதைத்தூள் பலம்-½, இவ்விரண்டையும் சேர்த்துப் பச்சை திராக்ஷைப் பழரசம், பலம்-௧௦, [illegible]காடி பலம்-௫, சுத்தசலம் பலம்-௨௪. இம்மூன்றையும் ஒரு பாத்திரத்தில் விட்டு, அதில் முன்னிரண்டு வகைத் தூளையுமிட்டு, ஓரிராப்பகல் ஊறவைத்து, பின்பு அடுப்பேற்றி மூன்றிலொரு பாகமாய்ச் சுண்டவைத்து நன்றாய்ப் பிசைந்து வடித்துத் திப்பி நீக்கிவிடவும். இந்தக் கஷாயத்தில்-௨௫-பலம் சீனிசருக்கரையைச் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி சருக்கரை கரைந்தபின், ½-விராகனெடை குங்குமப்பூவை ஒரு வஸ்திரத்துண்டில் முடிந்து அதிலிட்டு, அதை பலதடவை ஏதேனும் ஒரு குச்சியினால் கசக்கிப்பிழிந்து கொண்டிருக்கவேண்டும். அதிலுள்ள குங்குமப்பூ கரைந்தபின் அதை நீக்கிவிட வேண்டும். காய்ச்சும்பொழுது நுரையெழும்பினால் அதை நீக்கிவிடவும். பின்பு பாகுபதமானபின் கீழிறக்கி, ௫-விராகனெடை பச்சைக் கர்ப்பூரத்தைப் பொடித்துக் கொள்ளவும்; ஙங்கிலுப்புத்தூள், பன்னீர் விட்டிழைத்துலர்த்தின சந்தனம் இவை வகை-௧-க்கு

விராகனெடை-உ, இம்மூன்றையும் ஒன்றாய்க் கலந்து முன் சித்தப்படுத்தின அதை இளஞ்சூடா யிருக்கையில் அதில் கலந்து, கலக்கி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:—௫ பலம் ஷர்பத்தை சீமை யிலந்தைப்பழ ரசத்தில் அநுபானித்துக் கொடுக்கலாம். தனியாகவும் சாப்பிடலாம்.

உபயோகம்:—இந்தப் பிளேக் வியாதியினால் உண்டாகும் இருதயத்துர்ப்பலத்தை நீக்கி, அதைப் பலப்படுத்தும். இந்த வியாதியினாலுண்டான இருதய அ[illegible] முதலியவைகளையும் நீக்கி, விஷ சுரத்தையும் சாந்தப்படுத்தி தேக ஆரோக்கியத்தையு முண்டாக்கும்.

—※—

## சந்தனபலாதி ஷர்பத்து.

—※—

சந்தனக்கட்டையை ராவினதூள், பலம்-ஈ, பன்னீர் பலம்-உ0, தித்திப்பு மாதுளம்பழரசம், புளிப்பு மாதுளம்பழரசம், புளியைக்கரைத்துத் தெளியவைத்த சலம், பேரிக்காய் ரசம், சீமை யிலந்தைப்பழ ரசம், இவை வகை-க-க்குப்பலம்-க௨. துளையிடாத நல்லமுத்து, கஹருபா வகை-க-க்கு விராகனெடை-உ, இவ்விரண்டையுந் தனித்தனி பன்னீர் வார்த்து மிகநன்மையிருக்கும்படி அரைத்துக் கொள்ளவேண்டும். உஞு - விராகனெடை பச்சைக் கர்ப்பூரத்தைப்பொடித்துக் கொள்ளவும்.



செய்முறை:—முன்னுள்ள சந்தனத்தூளை ஒரு வஸ்திரத்துண்டில் பொட்டலமாகக் கட்டி பன்னீரில் போட்டு ஒருநாளூறவைத்து வேறொரு மண்பாத்திரத்தில் அல்லது கல்பாத்திரத்தில்-உ0, பலம் சுத்த சலம்வார்த்து, அதில் மேற்படி மூட்டையையும் பன்னீரையும் சேர்த்து அடுப்பேற்றி மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடித்து திப்பிநீக்கி ஆறவைத்துப்பின்பு, ரசங்களையெல்லாம் ஒன்றாய்விட்டு சருக்கரை சேர்த்து முறைப்படி பாகஞ்செய்து பதத்தில் கீழிறக்கி, சூரணங்களையும் மேற்கண்டபடி முறையே சேர்த்து நன்றாய்ப் புரட்டிப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

மாத்திரை:—விராகனெடை-க- தகுந்த அநுபானத்திற் சாப்பிடவும்.

உபயோகம்:—பிளேக் வியாதியி லுண்டாகும் இருதயபலஹீனமுதலியவை நீங்கி, இருதயம், ஈரல், இரைப்பை ஆகியவைகளும் பலப்படும். விஷசுரம், விடாச்சுரம் ஆகியவைகளுந்தீரும். டிக்ரி அதிகரித்த தேகச்சூட்டையும் சாந்தப்படுத்தும்.

—※—

## எலுமிச்சம்பழ ஷர்பத்து.

—※—

எலுமிச்சம்பழரசம், சீமை யிலந்தைப்பழரசம், பேரிக்காயின்ரசம், புளிப்பு மாதுளம்பழரசம் இனிப்பு மாதுளம்பழரசம், இவை வகை-க-க்குப் பலம்-கஈ. எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து நன்றாய்

வடித்து அதில்-கங-பலம் சீனிசருக்கரையைச் சேர்த்து அடுப்பேற்றி, ஒருகொதி வந்தவுடன் மறுபடியும் வடிகட்டி அடுப்பேற்றி நல்ல அகருகட்டைச் சூரணம் விராகனெடை-உ, பில்தா மேல்தோல் சூரணம் விராகனெடை-அ, ரூமிமஸ்தகியைக் கல்வத்திலரைத்து வடிகட்டின சூரணம்விராகனெடை-க; இந்தச் சூரணங்களை யெல்லாம் மேற்படி யோகத்தில் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தி லிறக்கி சீசாவில் பத்திரப்படுத்தவும்.

மாத்திரை:—துலா-க௨-உ௨-யாக காலையிலும் மாலையிலும் பானம் செய்யலாம்.

உபயோகம்:—விஷசுரங்கள் தீரும். இருதயம், ஈரல், இரைப்பை ஆகியவைகளைப் பலப்படுத்தும்; எரிவந்தம், மயக்கம், குமட்டல், வாந்தி ஆகியவைகளையும் கண்டிக்கும்.

—※—

## பிளேக் நோயிற்காம் திராவகம்.

—※—

காவுஜபான் இலை பலம்-சஉ, காவுஜபான் பூ விராகனெடை-அ, காட்டுத்துளசியிலை, கோராப்பட்டு, தாமரைப்பூ வகை-க-க்குப் பலம்-கரு, சந்தனம் பலம்-க, ரோஜாப்பூ பலம்-உ௨, நன்னாரிவேர், அகருக்கட்டை வகை-க-க்கு விராகனெடை-அ-சுத்தஜலம் படி - உ௨, சரக்குகளையும் ஜலத்தையும் வாலையிலிட்டு-ங-கவ, படி திராவக மிறக்கி அதில் லவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகை-க-க்கு விராகனெடை-ரு, ஏலாமிஸ்ரி, பஹமனே



சுபேத், பஹமனேசுருக், போஜிதான்மிஸ்ரி, பூமிச்சருக்கரைக் கிழங்கு, சடாமாஞ்சி, ரூமிமஸ்தகி, லவங்கப்பட்டை இவை வகை-க-க்குப் பலம்-உ இச்சரக்குகளை யெல்லாமிடித்து நையநறுக்கி முன் திராவகத்திற் போட்டு, அதனுடன் பன்னீர் பலம்-உ0ம் சேர்த்து மறுபடியும் வாலையிலிட்டு-ங-கவ படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

மாத்திரை:—பலம் - உ - உ௨ - பானம் செய்யலாம்.

உபயோகம்:—பிளேக் நோயில் உண்டாகும் கனர்த்தமொறல், இருதயத்துடிப்பு, மனக்கலக்கம், மூர்ச்சை முதலியவை தீரும். சுரத்தையுந் தணிக்கும்.

—※—

## கசகசா ஷர்பத்து.

—※—

பத்துப்பலம் கசகசாவுடன் ஒருபலம்போஸ்த்தக்காயைச்சேர்த்து இடித்து கம்பிளி வஸ்திரத்தில் முடிந்து-கவ-படி சலத்திலிட்டுக் காய்ச்சவேண்டும். காய்ச்சும்போது முடிச்சை அகப்பையினால் நசுக்கிக் கொண்டிருக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் அதிலுள்ள பாலெல்லாம் வெளிப்பட்டுப் போம். பின்பு முடிச்சையெடுத்துநீக்கி அந்தப்பாலைக்காய்ச்சினால் மேலேயேகெட்டிப் பின்பு முறிந்துபோம். அந்தச்சமயத்தில் கீழிறக்கி பிளானல் அல்லது கம்பிளியில் வடிகட்டி சக்கைநீக்கின சலத்திற்குச் சமனெடை சர்க்கரைசேர்த்துப் பதமாய்க் காய்ச்சிக் கொள்வதேயாம்.

## திராக்ஷக்காய் ஷர்பத்து.

நன்றாய்ப் பழுக்காமல் செங்காயாயுள்ள திராக்ஷக்காயைப் பிழிந்தரசம்-க-பங்கு. அதற்குச் சமனெடை சினிசருக்கரை சேர்த்துப் பதமாய்க்காய்ச்சிக் கொள்வதேயாம்.

—※—

## பிளேக்வியாதிக்காம் பில்லைமாத்திரை.

—※—

ரோஜாப்பூச்சூரணம், மூங்கிலுப்புச் சூரணம், பருப்புக்கீரைவிதைச்சூரணம், சுக்காங்கீரைவிதைச்சூரணம், கோ[illegible]த்து, காசினிவிதைச்சூரணம், வெண் சந்தனச்சூரணம், செஞ்சந்தனச்சூரணம், சீமைக்காவிக்கல், சொர்ணபூங்காவி, இவை வகை-க-க்கு விராகனெடை-க௰, விதைநீக்கிச் சுத்திசெய்த ஜரிஷ்க் விராகனெடை-உ௰; வெள்ளரிவிதைப் பருப்பு, கெக்கரிவிதைப்பருப்பு, மூலாம்பழ விதைப்பருப்பு, பரங்கிவிதைப்பருப்பு, இவை வகை-க-க்குவிராகனெடை-எ, ரேவல் சினிச்சூரணம் விராகனெடை-௯, விஷமுறிக்கல் விராகனெடை-உ௰.

செய்முறை:—இவையெல்லாவற்றையும் கல்வத்தில் பழங்காடிவார்த்து சா-சாமம் அரைத்தொவ்வொரு விராகனெடையுள்ள பில்லை மாத்திரைகளாய்ச் செய்து வைத்துக்கொள்க.

உபயோகம்:—வேளை-க-க்கு ஒருமாத்திரையாக இரண்டு வேளையும், தேனுங் காடியும் சேர்த்துக்



காய்ச்சின ஷர்பத்தில் உட்கொண்டால், பிளேக் நோய், அதைச்சேர்ந்த எல்லாவகைகளும் தீரும்.

—※—

## பிளேக் வியாதிக்காம் மாஜூன்.

—※—

பனப்ஷாச் சூரணம், ரோஜாப்பூச் சூரணம், பொதினாச் சூரணம், மருக்கொழுந்துச் சூரணம்; இவை வகை-க-க்குப் பலம்-க, பூங்காவி, தருணஜெ அக்ரபிச்சூரணம், வெண் சந்தனச்சூரணம், பஹமனேசுபேத் சூரணம், காடியில் ஊறவைத்துலர்த்திப்பிடித்த கொத்துமல்லிச் சூரணம், கரியபோளச் சூரணம்; குங்குமப்பூ, சீமைச்சுண்ணாம்பு, அரிமஸ்தகிச்சூரணம், தாரிஞ்சு நாரத்தம்பழ விதைப் பருப்பு, சா-சாமம் பன்னீர்வார்த்தரைத் துலர்த்தின கற்பவழம்; இவை வகை-க-க்குப் பலம்-உ, சா-சாமம் பன்னீர்வார்த்தரைத்துலர்த்தின கஹருபா, மூங்கிலுப்பு, சீமை மட்டிப்பால் இவை வகை-க-க்கு விராகனெடை-ச, கருவேலம்பிசின் சூரணம், திறமான அம்பர், இவைவகை-க-க்கு விராகனெடை-உ௰, சா-சாமம் பன்னீர்வார்த்தரைத்துலர்த்தின சென்னீர்ப்பற்றுள்ள மாணிக்கம் விராகனெடை-கரு, பன்னீர்-பலம்-க, விஷமுறிக்கல்விராகனெடை-க, சீமையிலந்தம்பழ ஷர்பத்து செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சூரணங்களையெல்லாம் ஒன்றாய் மிஸ்ரமித்துக் கொள்ளவும். பின்பு தூள்செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்து அரைக்கவேண்டியவைகளையும் அரைத்துக் கொள்ளவும். குங்கு

மப்பூவை பன்னீர்வார்த்து அரைத்துக்கொள்ளவும். அப்படி ஜய்தூன் எண்ணெய்வார்த்து அரைத்துக் கொள்ளவும் விஷமுறிக்கல்லைப் பன்னீரில்உரைத்து அதில் கலக்கிவிடவும். பின்பு எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து, ஷர்பத்தைக் காய்ச்சி அதில் கலந்து மாஜூன் பதமாய்ச்செய்து கொள்ளவும்.

மாத்திரை:—வேளை-க-க்கு விராகனெடை-உ-க-சாப்பிடலாம். இவ்விதம் தினம்-உ-ரு-வேளை யுபயோகிக்கலாம்.

உபயோகம்:—விஷத்தை மாற்றும், தொற்று வியாதிகளைக் கண்டிக்கும். இந்தப் பிளேக்நோய் கண்டவர்களுக்குபயோகித்தால், இராஜகருவிமுதலியவைகளை சோர்வடைய விடாமல் அவற்றைப் பலப்படுத்தி தேகசுகத்தைக் காப்பாற்றி நிலைநிறுத்தும். இருதய அதிர்ச்சி, இருதயச்சோர்வு ஆகியவைகளையும் நீக்கிச்சீராக்கி சுகஸ்திதியிலாக்கிக்காப்பாற்றும்.

## சாதா ஷர்பத்து வகைகள்.

இந்த பிளேக் சிகிச்சையில் ஆங்காங்கு பலவித ஷர்பத்துகளும் நீர்களும் அநுபானமாகவும் ஔடதமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் அநேகருக்குத் தெரிந்தவைகளாயினும் சிலருக்குத் தெரியாமலுமிருக்கலாம். ஆகையால் அத்தகையினர்களுக்குமுபயோகப்படும் பொருட்டு அந்த முறைகளையும் இங்கெழுதுவாம்.

### தாமரைப்பூ சாதா ஷர்பத்து.

நிறமான தாமரைப்பூ இதழ் (உலர்த்தப் பட்டது) பலம்-க௨, இதனை-கூ-படி சலத்தில் ஒருநாள்



ஊறவைத்து, காய்ச்சி அரைபாகமாய்ச் சுண்டினவுடன் இறக்கிப்பிசைந்து வடிகட்டித்திப்பி நீக்கி, அதில் உ0-பலம் சீனி சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வாசனைக்காகத் தாழம்பூ இதழ்கள் சேர்த்து இறக்கி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

### பனப்ஷா ஷர்பத்து.

பனப்ஷா பூவையும் மேற்கண்ட தாமரைப்பூ ஷர்பத்து மாதிரியே செய்து கொள்க. ஆனால் வாசனைக்குக் கொஞ்சம் பன்னீர் சேர்த்துக் கொள்க.

### சீமை யிலந்தைப்பழ ஷர்பத்து.

பருமனானதும் விதை நீக்கினதுமான சீமையிலந்தைப்பழம் (Thorn apple) ௫0-விதை நீக்கின ஆலுபுகாரா-உ0, குச்சி முதலியவை நீக்கிச் சுத்தி செய்த ஜரிஷ்க் பலம்-உ, உலர்ந்த ரோஜாப்பூ இதழ் பலம்-௮, சீனி சருக்கரை பலம்-கரு.

செய்முறை:—முன்சரக்குகளெல்லாம் ஒரு மண் பாத்திரத்திற்போட்டு அதில்-௬-படி சீமைக் காடியும், ௬-படி சலமும்விட்டு ஒருநாளூறவைத்து மூன்றிலொரு பாகமாய்ச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டித் திப்பிநீக்கின கஷாயத்தில் சீனியைச் சேர்த்துப் பாகப்படிகாய்ச்சிக் கொள்ளவும்.

### மாதுளம்பழ ஷர்பத்துகள், நாரத்தம்பழ ஷர்பத்து.

இனிப்பு மாதுளம்பழம், புளிப்பு மாதுளம்பழம், நாரத்தம்பழம் ஆகியவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனி பிழிந்த ரசத்திற்குச்சரியாய் சர்க்கரை

சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் இறக்கிக்கொள்வதே. முன்போலே அந்தந்தப்பழ ஷர்பத்தெனபெயர் பெறும்.

## ஜரிஷ்க்பழ ஷர்பத்து.

இந்தப்பழத்தை இதற்கு-௪-பங்குஜலத்தில் -௩-நாளூறவைத்து-௪-ம் நாள் காய்ச்சி அரைபாகமாய்ச் சுண்டினபின் நன்றாய்ப்பிசைந்து வடிகட்டி அதற்கு-௨-அல்லது-௩-பங்கு சருக்கரை சேர்த்து பதமாய்க் காய்ச்சிக்கொள்வதே.

## பனப்ஷா ஷர்பத்து.

பனப்ஷாபூவை, இதற்கு-௩-பங்கு கொதிக்கிற வெந்நீரிற்போட்டு, அடுப்பேற்றிக் காய்ச்சி அரைபாகமாய்ச் சுண்டினபின்னிறக்கி வடிகட்டின கஷாயத்திற்கிரண்டுபங்கு சீனிசருக்கரைசேர்த்துப் பதமாய்க் காய்ச்சிக்கொள்வதேயாம்.

## சந்தனத்திநீர்

சந்தனத்தூள் வீசை-௮, இதனை-௪-படி சுத்த சலத்திலிட்டு ஒருநாளூறவைத்து வாலையிலிட்டு-௨-படி திராவகம் இறக்கிக்கொள்வதேயாம்.

## தாமரைப்பூ திநீர்.

புதிதான தாமரைப்பூ இதழ் பலம்-௫0, சுத்த சலம் படி-௩௨, இதனை வாலையிலிட்டு-௧௨, படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

உலர்ந்த புஷ்பத்திலும் மேற்கண்ட விதமாகவும் செய்துகொள்ளலாம்.



## காவுஜுபான் திநீர்.

தேவையான அளவு, காவுஜுபான், அந்த எடைக்குப் பத்துப்பங்கு ஜலத்தில் ஒருநாளூறவைத்து மறுநாள் ஒரு வஸ்திரத்திலிட்டு வைத்து அதனுடன் கனமான கருங்கல்லையும் வைத்து முடிந்து ஊறவைத்த சலத்துடன் வாலையிலிட்டுத் தீநீர் இறக்கிக் கொள்ளவும்.

## கஸ்தூரிப்பிரம்பு திநீர்.

கஸ்தூரிப் பிரம்புப்பூ பலம்-௧0, சுத்தசலம்படி-௨, இவற்றை-௩-நாளூறவைத்து வாலையிலிட்டு-௧-படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

## தாழம்பூத் திநீர்.

தாழம்பூ இதழ்களை சன்னமாய்க் கத்தரித்தது பலம்-௧0, இதனை-௨-படி சுத்த சலத்தில்-௩-நாளூற வைத்து வாலையிலிட்டு-௧-படி திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

## காசினித் திநீர்.

புதிதான காசினிக்கீரையிலுள்ள மண்முதலியவைகளைத் தண்ணீரிற்கழுவாமல், உதறிநீக்கி சுத்தி செய்த இலைகள் தேவையான அளவு வாலையிலிட்டு இலையின் எடைக்கு மூன்றுபங்கு சுத்தசலம்விட்டு வழமைபோல் திராவகம்இறக்கிக் கொள்ளவும்.

உலர்ந்த இலையானால் இலையின்எடைக்கு அஞ்சு பங்கு சுத்தசலம்விட்டு ஒருநாளூறவைத்து வாலையிலிட்டுத் திராவகம் இறக்கிக்கொள்ளவேண்டும்.

காசினிவித்திலும் உலர்ந்த இலை திராவகத்தைப்போலவே யிறக்கிக்கொள்ள வேண்டும்.

## மணத்தக்காளித் தீநீர்.

உலர்த்தின மணத்தக்காளிக் காய்களை, இதற்கு-௨-பங்கு சுத்தசலத்தில்-க-நாளூறவைத்து வாலையிலிட்டு திராவகம் இறக்கிக்கொள்வதே.

## ரோஜாப்பூ எண்ணெய்.

உலர்ந்தரோஜாப்பூ-க-பங்கு சுத்தசலம் - ௪ - பங்கு. இதனைக்காய்ச்சி அரைபாகம் சுண்டினபின் இறக்கி வடிகட்டின கஷாயம்-௩-பங்கு, நல்லெண்ணெய் - க - பங்கு. இவ்விரண்டையும் சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டினபின் எடுத்துக்கொள்வதே.

## காஹூ எண்ணெய்.

மேற்படி ரோஜாப்பூ எண்ணெயைப்போலவே காஹூவினதையினும் செய்துகொள்க.

## இலகுபேதி முறைகள்.

இந்த வியாதியில் மலபந்தப்படுவது சுபாவ தார்க்குணமாகையால் அதற்குக்கடினமான பேதி முறைகளை யுபயோகிப்பதினால் அபாயத்திற்கேதுவாகும். ஆகையால் சாந்தமானவைகளாகவும் அந்த வியாதியைத்தணிக்கும் சுபாவமுடையவைகளாகவும் இருக்கும் இலகுபேதிமுறைகளே உபயோகிக்கத்தக்கவைகள். ஆகையால் பலதடவையும் இந்த வியாதியில் வல்லபண்டிதர்களினால் உபயோகப்படுத்தப்பட்டு நற்பயனையுண்டாக்கின இரண்டு முறைகளை பின் எழுதுவாம். அவற்றை சமயோசிதமாய் உபயோகிப்பதனால் மலமிளகுவதுடன் இந்தத் துஷ்டவியாதியின் மூர்க்கந்தணிந்து சுகத்திற்கேதுவாகும்.



## புளித்த ஊறல் கியாழம்.

—*—

கொட்டை, கோது நீக்கினபுளி துலா - ௫ - ஆலுபுகாரப்பழங்கள் - ரு, சர்க்கரை பாதம்பழங்கள்-ரு, சீமை யிலந்தைப் பழங்கள்-ரு, சீமை நறுவிலிப்பழங்கள்-௨௦, இவையெல்லாவற்றையும் நால்படி சுத்தசலத்தில் அல்லது சோம்பு திராவகத்தில் ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் கொஞ்சம் பிசைந்து வடிகட்டித்திப்பிநீக்கி; அதில் - ௪ - துலா மேனாவைக்கரைத்துக் குடிப்பாட்டவும்.

—*—

## இனித்த ஊறல் கியாழம்.

—*—

சீமை அத்திப்பழங்கள்-அ, சீமை நறுவிலிப் பழம், திராக்ஷைப்பழம், பிஸ்மிஸ்பழம், இவை வகை-க-க்குப் பழங்கள்-௨௰, இவை யெல்லாவற்றையும், ௨-படி காவுஜபான் நீரில், அல்லது தாமரைப்பூத் நீரில் அல்லது சோம்புத் நீரில் ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் நன்றாய்ப் பிசைந்து வடிகட்டித் திப்பிநீக்கி, அதில்-௪-துலா மேனாவைக் கரைத்துக் குடிப்பாட்டவும்.

இந்த இரண்டு பாகங்களில் ரோகியின் இஷ்டப்படியும், பிரதிதினமும் அல்லது ஒன்றைவிட்டொருநாளும் சமயோசிதமாய் உபயோகித்துவரின், மலம் கிரமப்படுவதுடன் இந்த பிலேக் நோயின் தீக்ஷணியந் தணிந்துவரும்.

மேற்கண்ட அளவானது வாலிபர்களுக் கேற்றவைகளானபடியால் மற்றவர்களின் வயது, தேகசுபாவம் முதலியவைகளுக்குத் தகுந்தபோல் செய்துகொள்ளவேண்டும். வலுவான தேகிகளுக்கும் இதையொருதடவை உபயோகித்துக் குணங் காணாவிட்டாலும், சரக்கொன்றைப் புளியையும் சமயோசிதமான அளவாய்ச் சேர்த்துப் பாதமெண்ணெயுங்கலந்துகொடுத்தால் அவசியங் குணமுண்டாகும்.

—※—

## பிளேக்கட்டிப் பிளாஸ்திரி.

—※—

எள்ளெண்ணெய், வெள்ளை நிறமான தேன்மெழுக்கு, சயவெள்ளை, முட்டை வெள்ளையம்புலி, இவை வகைக்கு துலா – ௧. கர்ப்பூரம் விராகனெடை – ௩.

செய்முறை:—மெழுக்கை எண்ணெயிற்போட்டு மெதுவாயெரித்து, அது உருகினபின், கர்ப்பூரத்தையும், சயவெள்ளையையும் சேர்த்து அரைத்துப் போட்டு, நன்றாய்க்கிளறி மிஸ்ரமித்துக் கீழிறக்கிக் குளிர ஆறினபின் வெள்ளையம்புலியைச் சேர்த்து நன்றாய் மிஸ்ரமித்து பீங்கான் டப்பியில் வைத்துக் கொள்க.

உபயோகம்:—இந்த பிளேக்கட்டியானது தானே பழுத்து உடைந்தாயினும் அல்லது போல்டிஸ் முதலிய வெளிப் பிரயோகங்களினால் பழுக்கவைத்துப் பக்குவப்படுத்தினபின் சத்திரம் வைத்தாயி



னும் உண்டான ரணத்தின்மீது இந்தப் பிளாஸ்திரியைப் பழயபஞ்சில்தடவி போட்டுவர அந்தரணமாறிவிடும்.

## விண்ணப்பம்.

மேற்கண்ட சரக்குகளும், யோகமுறைகளும் எப்படி செய்யக்கூடும், எங்கிருந்து கிடைக்குமென ஒருபோதும் மலைக்கலாகாது. றயில், தபால் முதலியவைகளுள்ள இந்தக் காலங்களில் இந்தச்சரக்குகளை சம்பாதிப்பதும் இந்த யோகமுறைகளையும் செய்து முடிப்பதும் ஒரு பெரியகாரியமல்ல. மனமுண்டானால் வழியுமுண்டாகும். மேலும் இந்தப் பிரயோகங்களை அப்போதைக்கப்போது செய்வது சாத்தியமானகாரியமல்ல. ஆகையால் முன்னதாகவே இந்தச்சரக்குகளையும் யோகமுறைகளையும் சித்தப்படுத்தி வைத்துக்கொள்வதில் ஒருவித கஷ்டமுமில்லாமல் அப்போதைக்கப்போது தகுந்தபடி சிகிச்சைசெய்து கடவுளினது கிருபையினாலும் பெரியோர்களின் ஆசிர்வாதத்தினாலும் இந்த வியாதிக்குட்பட்டவர்களைக் காப்பாற்றி நாமும் நற்கீர்த்தியைப்பெற்று சுகமாய் வாழலாம்.

—※—

## பிளேக் நோயின் இங்கிலீஷ் வைத்திய சிகிச்சாக்கிரமம்.

—※—

இதுவரையில் நாம் யூநானி வைத்திய சிகிச்சாக்கிரமம் முதலியவைகளைத் தெரிந்துகொண்டோம். இந்தச் சிகிச்சையானது நம் முன்னோர்களினால் பல்

லாண்டு அநுபவத்தின்மீது கண்டறிந்து நிச்சயிக்கப் பட்டவைகள். ஆயினும் இங்கிலீஷ் சிகிச்சையினும் பிரகாசமானவைகளைத் தெரிந்திருப்பதனால் சுதேசிகளாகிய நம்மனைவர்க்கும் சில சமயங்களில் உதவியாகுமென்பதிற் சந்தேகமில்லை. பம்பாய் பப்ளிக் பிளேக் கமிட்டி அக்கிராசனாதிபதியாகிய பிரிகேடியர் ஜெனரல் W. F. கடாகரி - C - P - D - S - O துரையவர்கள், இந்தியன் ஸிவில் ஸெர்விஸ் ஆகிய R. நாதன் துரையவர்கள் ஆகிய இவர்கள் அபிப்பிராயத்தின் கருத்தையே சுருக்கமாய் இங்கெழுதுவாம். அது பின்வருகிறவிதமாம்.

—※—

## இங்கிலீஷ் பொதுச் சிகிச்சை.

—※—

(1) பரிசுத்த ஆகாயம் (காற்று)

(2) ரோகியை அதிக சாக்கிரதையுடன் போஷித்தல்.

(3) உச்சாககாரி மருந்துகளையும் வேதனாசாந்தகாரி மருந்துகளையும் உபயோகித்தல்.

(4) பிளேக் கட்டிகளுக்கு போல்டிஸ் கட்டுதல், ஆகிய இந்நான்கு வகையுமே பிரதானமானவைகள்.

இன்னம், இந்த பிளேகிற்கு இந்த மருந்துதான் நிச்சயமானதென நம்பிக்கையோடும் உறுதியோடும் சொல்லமுடியாது. ஏனெனில் ஒருவருக்குக் குணத்தையுண்டாக்கின அந்தமருந்தே அந்த லக்ஷ



ணமுள்ள மற்றொரு ரோகிக்கு உபயோகப்படாமற் போகிறது. ஆகையால், புஷ்டிகரமான இலகு போஜனம்; உச்சாககாரி மருந்துகள்; அழுகிப்போதலைத் தடுக்கிறமருந்து, சுரத்தைத் தடுக்குமருந்து ஆகியவைகளை உள்ளிற் குபயோகப்படுத்துதலும் மேற் பிரயோகங்களானப்பற்று, மேற்பூச்சு, போல்டிஸ் முதலிய அந்தந்த விடத்திற்குரிய வெளிச்சிகிச்சைகளுமாம்.

விஷத்தைப் பரவவிடாமல் தடுக்க முயற்சி செய்வதும், ரோகியைப் பலவீனப்படாமல், கூடிய வரையில் அப்போதைக்கப்போது தகுந்த சிகிச்சை செய்து வருவதும், ரோகியை இளைப்பாறுதலாகவும் சாந்தமாகவைப்பதும், சாக்கிரதையாய் போஷிப்பதும், பத்தியம், சுத்தம் ஆகிய இவைகளே இந்த வியாதியின் சிகிச்சைக்கு மூலமாம்.

அதிகக் குளிர்ச்சியான அறை வீடு மிகவும் நல்லது. ரோகியின் வஸ்திரங்களை விஷ நிவாரணத்தில் பரிசுத்தம் செய்யவேண்டும் மண்பாத்திரங்களையும், கண்ணாடி [illegible]ளையும் வெந்நீரால் சுத்திசெய்யவேண்டும். ரோகியின் விசர்க்கங்களைச் சுண்ணாம்பைப்போ[illegible]டும். படுக்கை, முதலியவைகள் அதி[illegible]மாகவும் அதிக அசுத்தமாகவும் இருந்தால் அவற்றை யெரித்துவிடுவது உத்தமம். அப்படியில்லையாயின் விஷ நிவாரணஞ்செய்து பரிசுத்தம் செய்யவேண்டும். விஷ நிவாரண திராவகத்தால் ரோகியுள்ள தரையையும், கட்டில் முதலியவைகளையும் கழுவிச் சுத்திசெய்ய வேண்டும். ரோகியுள்ள விடத்திலுள்ள ஒவ்வொரு ஜன்னல்களும் கார்பாலிக்

ஆஸெட் திராவகத்தில் அல்லது (Joy's antiseptic) ஜோஸ் விஷ நிவாரண திராவகத்தில் நனைக்கப்பட்ட [illegible]களினால் துடைக்கப்படவேண்டும். வியாதியஸ்தனை எந்தக் காரியத்திற்கும் படுக்கையிலிருந்து எழுந்திருக்க விடலாகாது. மலஜல விசர்ஜனங்களுக்கும், பிரத்தியேக பாத்திரங்கள் படுக்கையிலிருந்தபடியே உபயோகிக்க வேண்டியது. மல விசர்ஜனத்திற்கென எழுந்துபோன சிலர் கீழே விழுந்து மரணமடைந்திருக்கிறார்கள்.

இந்த வியாதிகண்ட க்ஷணமே இதற்குத் தகுந்த சிகிச்சை செய்வதனால் வியாதி அனேகமாய் வசப்பட்டுப்போம். அப்படிச் செய்யாமல் அஜாக்கிரதையாயிருப்பதே அபாயத்திற்கேதுவாகின்றது. ஆகையால் இதைக் கவனிப்பதே அதிகம் முக்கியமான விஷயம். இப்படியே இந்த வியாதியில் இருதயமானது துர்ப்பலப்படுவது பிரதானமாகையால் சிகிச்சகர்கள் அந்த விஷயத்தையும் கவனிக்கவேண்டியதும் முக்கியமே.

சுத்தமான ஆகாயம் (காற்று):—இதைப்பற்றியவைகளெல்லாம் ஒருவாறு விபரமாய் முன்னர் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த விதிப்படி ஏகமாய் ரோகியைத் தாராளமாய்க் காற்றுவீசும் விசாலமான விடுதியில் வைத்து சிகிச்சைசெய்யவேண்டும். ரோகியிருக்குமிடத்தில் ஜனக்கூட்டம் கட்டாயங்கூடாது. இந்த விஷயத்தில் இந்த வியாதியின் ஆரம்பத்திலேயே அஜாக்கிரதையாயிருப்பதே முடிவில் அபாயத்திற்கேதுவாகிறது. இடங்குறுகின விடத்தில் ரோகியை வைத்திருப்பதினால் அந்த ரோகி



யிக்கு அபாய நேரிடுவதுடன் மற்றவர்களுக்கும் அபாயத்திற்கேதுவாகின்றது.

பத்தியம் அல்லது போஷணை:—அரிசிநொய்யை அல்லது கோதுமை நொய்யைப் புதிதாய்க் கறந்த பாலுடன்சேர்த்துக் கஞ்சிசெய்து அடிக்கடி கொடுத்துவருவதினால் [illegible] இலகுவாய் ஜீரணமாகி அதிககுணம் காணப்பட்டிருக்கிறது. பாலும் சோடாவாட்டரும் சமமாய்ச்சேர்த்துக் குடிப்பாட்டுவதும் அதிககுணமே. பாலும் மாவான ஆகாரமும் சேர்த்து சித்தப்படுத்தினவைகளான, மெல்லின்ஸ் ஆகாரம், பெங்கர்ஸ் ஆகாரம், ஹோர்லிக் ஆகாரம் முதலியவைகளும் மிகவும் ஏற்றவைகள். கார்ன்மாவு, பார்லியரிசி, ஜவ்வரிசி ஆகியவைகளும் இந்த ரோகிக்கு உபயோகப்படத் தக்கவைகளே.

ஆட்சேபனை யில்லாவிட்டால் ஆட்டிறைச்சி சூப்பு, குழம்பு, கோழிச்சூப்பு ஆகியவைகளையும் உபயோகிக்கலாம்; இப்படிச் செய்வதால் நல்ல பலமுண்டாமென்பதிற் சந்தேகமில்லை. இந்த வியாதியானது காய்ச்சலினால் விருத்தியாகிறதாக தெரியவருகிறது. ஆட்டிறைச்சி சூப்பை பனிக்கட்டியில் வைத்துக் குளிர்ச்சியாக்கிக் கொடுப்பதினாலும் அதிககுணம் காணப்பட்டிருக்கிறது. இதில் Virol ஆனது அதிக குணமுள்ளதென காணப்பட்டிருக்கிறது. விசேஷமாக Virol-க. தேக்கரண்டியளவு, பிராண்டி-உ. தேக்கரண்டியளவு, சுத்தசலம் - க. தேக்கரண்டியளவு. இம் மூன்றையும் மிச்ரமித்து அடிக்கடி கொடுத்துவருவதினால் சில ரோகிகளில்

அதிக குணங் காணப்பட்டிருக்கிறது. ஆகாரம் முத
லியவைகள் அதிகமாய்ச் சாப்பிடுவது இருதயத்
தொழிலை இற்பாட்ட ஏதுவாகுமாகையால் சாக்கிர
தையுடனும் மிதமாகவும் ஆகாரத்தைச் சாப்பிட
வேண்டும். இந்த ரோகிக்குச் சிலசமயம் பெரும்
பசிகாணும். அப்போது அது உண்மையான பசி
யெனக்கருதி வயிறுநிறைய சாப்பிட்டால் அபாயம் நேரி
ட்டிருக்கிறது. ஆகாரமானது கஞ்சிமுதலிய திரவ
ரூபமாயிருக்கவேண்டும். புனற்பாகமும் உபயோ
கிக்கலாம். இலகுவான ஆகாரத்தை குறைந்த அள
வாக அடிக்கடிகொடுக்கலாம். மிதமான ஒரே அள
வாகவும் முறையான இடைக்காலங்களிலும் கொடு
க்கவேண்டும். வியாதியாரம்பத்தில் பனிக்கட்டி
யில் வைத்துக் குளிர்ச்சியாக்கிக் கொடுக்கவேண்டும்.
பாலில் பனிக்கட்டியைச்சேர்த்துமெதுவாயுறிஞ்சிக்
குடிப்பதும் நன்மையே. ஐஸ்கிரீம் முதலியவைகளு
மாகும். பால்சுத்தமானதாகவும் அப்பட்டமானதாக
வும் இருக்கவேண்டும். அப்படி அகப்படாத விட
ங்களில் டப்பிப்பால் சேர்த்துக்கொள்ளலாம். அது
புதிதாய்க்கறந்த பாலைப்போல் அவ்வளவு ருசியா
யில்லாவிட்டாலும் அவசரத்திற்குதவும். ஆகாரத்
தில் முக்கியமாய் பாலில் பெப்டின்சேர்த்துக் கொடு
ப்பது மிகவும் நன்மையானது. பசிதீபனக்குறை
வாயிருக்கும்போது இது முக்கியமாய்க் கொடுக்க
வேண்டியது. இரைப்பையின் தொழில் மந்தப்பட்
டிருக்கும் போதோ அவசியம் இதைக் கொடுக்க
வேண்டியது எனத் தெரிந்திருக்கவேண்டியது.



தாகமானது இந்த வியாதியில் பிரதான குறி
களிலொன்று. அது அதிகமாயிருந்தால் சமயத்
திற்குத் தகுந்தவிதமாய் ஏதேனும்பக்குவஞ்செய்து
உடனே சாந்தப்படுத்தவேண்டும். பனிக்கட்டியை
வாயில்வைத்து சப்பும்படி அல்லது வாயில் அதிக
நேரம்வைத்திருக்கும்படி செய்யலாம். தண்ணீர்
அல்லது தண்ணீரும் எலுமிச்சம்பழச்சமும் கலந்து
குடிப்பாட்டலாம். ஆனால் லெமனேட் குடிப்பாட்
டலாகாது. நாடியானதுதளர்கிற அல்லது மயக்கம்
அதிகப்படுகிற சமயமாயிருந்தால் அல்கோஹால்
சாரமும் கொஞ்சங் கொடுக்கலாம். அதனால் இர
ண்டுவித குணமுமுண்டாகும். விஸ்கி உபயோகிப்
பதைப் பார்க்கிலும் பிராந்தி நல்லது.

—※—

## மருந்துப்பிரயோகம்

—※—

இந்த வியாதியில் இங்கிலீஷ் மருந்துகள் அந்
தவைத்தியத்தில் அநுபவப்பட்டவர்களே யுபயோ
கிக்கத்தகுந்தவைகள். ஏனெனில் அந்த வியாதியினா
ண்டாகும் லக்ஷணங்களுக்கேற்றதுபோல அந்தந்த
ச் சமயங்களிலும் அந்தந்தக் குணங்களிலும் கவ
னித்துபயோகிக்க வேண்டியதிருக்கிறது. மேலும்
இந்தமருந்துகளை ஏற்றதருணத்தில் உபயோகித்தால்
சுகுணமே. அப்படியில்லாவிட்டால் அசுகுணமே.
ஆயினும் இந்த வியாதியில் இன்னின்ன மருந்துகள்
பெரும்பான்மையும் உபயோகப்படுகின்றனவெனத்
தெரிந்திருப்பது பலவிதத்திலும் சுதேசவைத்தியர்

களாகிய நமக்கு நன்மையாக்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் இந்த வியாதியில் உபயோகிக்கப்படும் முக்கிய சில மருந்துகளை மாத்திரம் இங்கெழுதுவோம்.

ரசபஸ்பம் (பூரபஸ்பம்) (Calomel) இந்த ரோகிக்கு நாவில் அழுக்குப்படிந்ததும் சுவாசத்தில் துர்க்கந்தமுமிருந்து கண்கள் மஞ்சள்வருணச் சாயலாயிருந்தால், பொதுவாய் பித்ததோஷம் அதிகரித்த லக்ஷணங்களிருப்பதுடன் மலபந்தமுமிருந்தால் அந்த ரோகிக்கு இலகுபேதி ஔஷதத்தையுபயோகிக்க வேண்டியது. இதற்காக மேற்படி பூரபஸ்பத்தை உபயோகிக்கலாம்? ஏனெனில் இதில் மலத்தைப் போக்குகிற குணமும் அழுகலைத்தடுக்கிற குணமுமிருப்பது காரணம். அப்போது இதில்-டு-முதல்-க0-கிரேயின்வரையில்சமயோசிதமாய்க்கொடுக்கலாம். அப்படிக்கொடுத்தால்-ரு-மணிக்குள்ளாக உவரான மலம்போகும். இதைக் கொடுக்க லாகாதென சிலர் ஆக்ஷேபிக்கின்றார்கள். வியாதியின் கடைசிப்பாகத்தில் கொடுப்பதற்கு ஆக்ஷேபணையே யொழிய வியாதியாரம்பத்தில் மேற்கண்ட லக்ஷணங்களிருந்தால் நிராக்ஷேபணையாய்க் கொடுக்கலாம். அப்படி வியாதியாரம்பத்தில் கொடுத்தால்தான் குணஞ்செய்யுமேயன்றி மற்றச்சமயங்களில் கொடுத்தால் குணம் செய்யாதெனத் தெரிந்திருக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் வாந்தியைத்தடுக்கும். கண் மஞ்சணித்திருப்பதைப் போக்கும். ஆகாரம் சாப்பிட பலத்தை யுண்டாக்கும். புத்தி மாறாட்டம் முதலியவைகளையும் குறைக்கின்றதாகக் காணப்படு



கிறது. தேகத்திலுள்ள இந்த பிளேக் கருக்கள் அனேகம், மலமூலமாய் வெளிப்பட ஏதுவுண்டு எப்படியெனில்; இந்தக்கருக்கள், ரோகியின் கு[illegible] [illegible]வியர்வை, மூத்திரம் ஆகியவைகளில் சி[illegible] ண்டு. சொற்பமாய்க் காணப்படுகின்றன. ஆ[illegible]ல் மலத்திலோ ஏராளமாய்க் காணப்படுகின்றன. இ[illegible] தக்காரணத்தினாலேயே புறக்கடை முதலிய[illegible] தை சேர்க்கவிடங்களையும், அதற்காக உ[illegible]ாகப் படுத்தப்பட்ட பாத்திரங்களையும் விஷ[illegible]காரணங்களினால் சுத்திசெய்ய வேண்டியது மிகவும் அவசியமாயிற்று. ஆகையால் மலமூலமாய் இக்கருமிகளை வெளிப்படுத்தும்படி தேகசுபாவத்திற்கு உதவிசெய்ய முயற்சியுமாம்.

நோயாளி இந்தமருந்தை யுட்கொள்ளக் கூடாமையாயிருந்தால், இந்தப்பஸ்பத்தை நாவில்வைத்து பிராந்தியை அல்லது பாலைக் கொஞ்சமாய் சாக்கிரதையுடன் வார்த்தால் அது கரைந்து உள்ளே போய்விடும்.

சல்விரஜெயநீர்:—(Liquid Hydrarg. perchloridi) தேகசுபாவம் பலமாயுள்ளவர்களுக்கு இந்த ஜெயநீரின் உயர்ந்த அளவாகிய -உ- திராம் ஜெயநீரைக்கொஞ்சம் சலத்துடன் அ[illegible] நன்னாரிக் கஷாயத்துடன் குடிப்பாட்டவேண்டும். இவ்விதம் -உ- மணிக்கு ஒருதடவையாக இரண்டு மூன்று தடவைகள் கொடுத்துப் பின்பு, ஒவ்வொருதிராம் ஜெயநீரைக் கொடுத்துவரவேண்டும். இந்த ஜெயநீரானது உண்மையான பிளேக்சுரமாயிருந்தால் அதிகம் தாமதமாய் வாய்பிடிக்கும். இதர சுரங்களாயி

குச்சல் அதி துரிதமாய் வாய் பிடிப்புண்டாகி மருந்தை நிறுத்திவிடும்படி நேரிடும். ஆனல் இந்த ஐயகீரானது நிச்சயமாய்ப் புத்தி மாறாட்டத்தைச் சாந்தப்படுத்துகிறது. சுரத்தைக் குறைக்கிறது. இந்த ஜெபரீரினல் அதிகக் குணங்காணப்பட்டிருக்கிறதாய்த் தெரியவருகிறது.

புத்தி மாறாட்டம் முதலிய சன்னிபாத லக்ஷணங்கள் ...ம்மரமாயிருந்தால் தலைக்குக் குளிர்ச்சியான வஸ்துக்களை யுபயோகிப்பதினல் அதையெதிர்த்துத் தடுக்க ஏதுவாகும். தலையில் பனிக்கட்டிப் பையை (Ice bag) வைத்துக் கட்டலாம். வஸ்திரத்தைத் தண்ணீரில் நனைத்து தேகமுழுவதும் துடைத்துக் கொண்டிருந்தால் ரோகிக்கு இதமாயிருப்பதுடன் தேகச்சூட்டையுந் தணிக்க ஏதுவாகும். இந்தச் சிகிச்சையானது மூர்க்கமான சன்னியைச் சாந்தப்படுத்தவும் நினைத்தபோதெல்லாம் சுலபமாய்ச் செய்யக்கூடியதாம்.

ப்ரோமைட் ஆவ் பொடாஸியம் (Bromide of Potessium) இந்த உப்பானது புத்தி மாறாட்டமாகும்போது அபாயமில்லாமல் உபயோகப்படுத்தக் கூடியது ... இதைத் தொடர்ச்சியாய் கொடுக்கலாகாதெனத் தெரிந்திருக்கவேண்டும்.

குராசானி யோமச்சத்தை (Hyos cine $\frac{1}{100}$ கிரேயின் எடை தேகத்திற் பாய்ச்சுவதினாலும் பல ரோகிகளில் குணங்காணப்பட்டிருக்கிறது.



நித்திரைவருத்தும் மருந்துகளை (Hypnotics) யுபயோகித்தால் நரம்பிசிவு முதலிய நரம்பைப்பற்றின துர் லக்ஷணங்களைத் தணிக்கின்றன. எந்த மருந்துக்குத் தப்பினாலும் இவை தப்பாமல் நித்திரையை யுண்டுபண்ணுகின்றன. ஆயினும் எல்லா ரோகிகளிலும் குணங் காணப்படவில்லை.

அபினி யுப்புச்சத்தில் (Morphine) சேர்க் சுபாவத்திற்குத் தகுந்தபடி $\frac{1}{8}$ முதல் $\frac{1}{4}$ கிரேயின் எடையை தேகத்தில் பாய்ச்சுவதினாலும் குணங்காணப்பட்டிருக்கிறது. ஆனல் இதனுடன் பெல்லடோனா உப்பை (Atropine) சேர்த்துபயோகிப்பது உத்தமம்.

மலப்போக்கு—எப்போதாயினும் ஒவ்வொரு வேளை மலம்போனால் அதை யுடனே கட்டமுயற்சி செய்யலாகாது. ஆனல் அது கடிகைக்குமேல் அதிகப்பட்டு போய்க் கொண்டிருந்தாலும், ரோகிக்குத் துர்ப்பலமுண்டானாலும் அப்போதுடனே அதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யவேண்டும்.

வாந்தி—இந்த பிளேக் நோயில் இது அடிக்கடி யுண்டாவதினல் அல்லது அபரிமிதமா யுண்டாவதனல் அபாயத்திற்கேதுவாகும். ஏனெனில் உட்கொள்ளும் ஆகாரம் மருந்து முதலியவைகள், உள்ளே தங்காமல் வெளிப்பட்டுவிட்டால் மென்மேலும் துர்ப்பலம் மேலிட்டு அபாயம் நேரிடும். இதற்கு கடுகு போல்டிஸை மார்பின்மீது போடலாம். பனிக்கட்டியை வாயில் வைத்துக்கொண் டிருக்கும்படி அல்லது சூப்பும்படி செய்யலாம்.

அமைதியில்லாமை, தலைநோய் ஆகியவைகள் உக்கிரமாயிருக்கும்போது, அக்காலங்களில் சாதாரணமாயுபயோகப்படுத்துகிற ஆன்டிபைரின் (Antipyrin) பெனாஸிடின் (Phenacetin) ஆகியவைகளை யுபயோகிக்கலாகாது, ஆனால் வஸ்திரத்துண்டைத் தண்ணீரில்நனைத்துத் தடவிக்கொண்டிருக்கலாம். பிடரியில் பனிக்கட்டியை வைக்கலாம், புளி[illegible]டிம்பாட்ட பானங்களையும் உள்ளுக்குக்கொடுக்கலாம்.

வெளி[illegible]புறமாய் பலமுண்டாக்க வேண்டிய போது, அவயவங்கள், வயிறு, இருதயம் ஆகிய ஸ்தானங்களில் கடுகு (Flying poultice) போல்டிஸ் உபயோகப்படுத்தலாம்.

கர்ப்பூரத்தை உள்ளிற்குங்கொடுக்கலாம். வெளிக்கும் உபயோகிக்கலாம். உள்ளிற்கு மாத்திரையாகச்செய்து கொடுக்கவேண்டும். இது உச்சாககாரி, ஜடாக்கினி வர்த்தனகாரி, உதரவாதஹரகாரி குணங்களுடையது.

கஸ்தூரியில் அஞ்சுகிறேன் எடை-௩-மணிக்கொருதடவை கொடுத்துக்கொண்டு வரலாம்.

எட்டிக்கொட்டைச்சத்தையும் உள்ளுக்குங்கொடுக்கலாம். வெளிக்கும் உபயோகிக்கலாம். இதில் எட்டிக்கொட்டை உப்புஜெலனீர் (Liquor strychnine) மிகவும் நல்லது. 5-முதல் 10 - மினிம்வரையில் கொடுக்கலாம்.

108



## பிளேக்கட்டியின் இங்கிலீஷ்சிகிச்சை.

—*—

இக்கட்டிகளின் வேதனையையும் வருத்தத்தையும் சாந்திசெய்ய கிளிஸிரினும் பெல்லடோனா சத்தும்சேர்த்து மேலேபோடலாம். பெல்லடோனா சத்தைத்தனியாகவும் போடலாம். இவ்விதமே ரசபிளாஸ்திரியையும் போடலாம், எல்லாவற்றையும் பார்க்கிலும் மேலான சிகிச்சையாவது கட்டிக்கு போல்டிஸ்கட்டி நன்றாய்ப்பழுத்தபின் சஸ்திரம்செய்து சீழை நீக்கிப் பின்பு ரணத்தை யாற்றிவிடவேண்டுமென்பதே.

### விண்ணப்பம்.

இப்போது இந்தப்பிளேக் நோயின் பூர்வசரித்திரம், அது உண்டாகும் காரணம், அதன் பலவிதலக்ஷணம் முதலியவைகள் யூநானி சிகிச்சைகள், இங்கிலீஷ் சிகிச்சையின் முக்கியாம்சம் ஆகியவைகளைத் தெரிந்துகொண்டபடியால் இனி இந்த நோய்க்குச் சமயோசிதமாய் சிகிச்சைசெய்ய வேண்டியவிதங்களை அநுபவசாலிகள் தெரிந்து கடவுளினது கிருபையால் இந்தநோயை நிவர்த்திசெய்து எல்லோரும் சுகமே வாழச்செய்வார்களாக. ஆமீன்.

பிளேக் சிகிச்சாபோதினி முற்றிற்று.

114830